மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

கா. வே. ராமசந்திரன்

முதல் வால்யூம் பிரமாதி வருஷம் ஆனிப் பகுதி.

15—6—1939.

விஷய ஸூசிகை.

விஷயம்: | பக்கம்.

கவிதா விமர்சம்

1	தமிழ் வகைகள் ...	'பார்க்கவன்'	... 337
2	பட்டணம் சுப்பிரமணிய ஐயர் ...	டி. கே. கோவிந்தையர்	 341
3	ஸ்ரீ அரவிந்தரது கவிதைகள் ...	பி. கோதண்டராமன்	... 348

புதுக் கற்பனைகள்

1	சும்மாவிருத்தலின் சுகம் ...	'வேர்க்கல்வி'	... 349
2	செல்வம் இன்றியமையாதது	'குழற் கோவலன்'	... 357
3	நான் கண்ட கனவு ...	டர்பன். ச. முனிஸ்வாமி பிள்ளை	... 358
4	வரருசி ...	'குழற் கோவலன்'	... 360
5	ராகக் க(கோ)லை ...	வே. ராகவன்	... 369
6	கோவிந்து ராமதாஸ் ஆன கதை ...	'வில்லன்'	 375

சிற்பப் பகுதி

1	ராவணானுக்ரஹ மூர்த்தி ...	'வீதஹவ்யன்'	... 381

கீதப் பகுதி

1	சதாசிவ ப்ரும்ம கீர்த்தனை ...	ஸீ. வாஸுதேவன்	 382
2	தியாகய்யர் அவர்களின் ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள் ...	ய. மஹாலிங்க சாஸ்திரிகள்	... 383

விஷயம். பக்கம்.

மொழிபெயர்ப்புப் பகுதி

1	கிராதார்ஜுனீய நாடகம்	'ஸ்ரீ வாதூலன்'	385
2	கதைக் கடல்	வே. ராகவன்	392

புஸ்தக விமர்சனம்

1	ஸ்ரீ ரமண சந்நிதி முறை	'விசாரதன்'	396
2	சுகந்தா	'மும்மொழியாளன்'	398
3	அழகர்மாலை	'மாயக்கூத்தன்'	399
4	தாஸனது ஆத்மாநுபவம்	'அகஸ்திய தாஸன்'	399

அறிவிப்பு.

'சில்பஶ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஶ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஶ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒருபக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறும் பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஶ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி — விலை அணா **6.**

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரூ. **4.**



கவிதா விமர்சம்.

தமிழ் வகைகள்.

(பார்க்கவன்.)

இயல் இசை நாடகம் என்ற பாகுபாடு தமிழ் மொழியில் வெகுகாலமாக வழங்கி வருவது. முத்தமிழ் வித்தகரான அருணகிரி நாதரும் பகவானைத் 'தமிழ் த்ரய விநோதக் காரன்' என்றும் 'வாமன முனிக்கொரு தமிழ் த்ரயமும், அபரிமிதமாக விவரித்த கடவுட் புலவன்' என்றும் துதித்துள்ளார். முத்தமிழுள் இசைச்தமிழுக்குப் பழந்தமிழ் நூல்களில் கண்டுள்ள கானல்வரி, கந்துகவரி முதலியவைகளையும், நாடகத் தமிழுக்கும் இம்மாதிரியே கந்தம், தேவபாணி முதலிய பிரபந்தங்களின் பெயர்களையும் காட்டி, இசைத்தமிழும் நாடகத்தமிழும் அவற்றின் இலக்கணங்களும் வெகுவாய் இறந்தொழிந்தன என்றும், மிகுந்துள்ளது இயல் தமிழ் ஒன்றே என்றும் பலர் கருதுவர். 'இயல் தமிழ் என்றால் என்ன?' என்றால், 'அது நல்ல நடையோடு இலக்கணம் அமைந்த தமிழ்' என்பர். இவ்விலக்கணம் இசைத் தமிழுக்கும் நாடகத்தமிழுக்கும் பொருந்தும் பொது இலக்கண மாகையால், இயல் தமிழை மட்டுமே அறிவுறுத்தும் சிறப்பிலக்கணம் ஆகாது. மேலும் கானல்வரியும் கந்துகவரியும், கந்தமும் தேவபாணியும் இசைத்தமிழிலும் நாடகத் தமிழிலும் வழங்கிய பிரபந்தங்களே யாதலால், இவற்றின் இலக்கணங்கள் இசைத்தமிழ் இன்னதென்பதையும், நாடகத் தமிழ் இன்னதென்பதையும் அறிவுறுத்தமாட்டா. பாடப்படுவது இசைத் தமிழ் என்பதும் பொருந்தாது; ஏனென்றால், பாடப்படாத தமிழே இல்லையாதலால், இவ்விலக்கணப்படி இயலையும் நாடகத்தையும் இசைத்தமிழாகவே கொள்ளல் வேண்டும். 'காண்போர்க்கு உலகவியல்பினைச் செவ்வனே தெரிவித்து உவப்பச் செய்வது நாடகம்' என்பது இங்கிலீஷ் நாடக லக்ஷணமே; இது நாடகத் தமிழ் லக்ஷணமன்று. இயல் இசை நாடகங்களான முத்தமிழை ஆராயுமுன்னர், சிற்பம் சித்திரம் வாஸ்துவித்தை காவியம் கானம் நர்த்தனம் முதலிய மஹா கலைகளின் ஸ்வரூபத்தைச் சிறிது ஆராய்வோமாக.

மாடமாளிகையையும் கூடகோபுரத்தையும் விஷயமாகக் கொண்ட வாஸ்து வித்தையும் (*Architecture*) சிற்பகலையும் சித்திர கலையும் இடத்தை ஆசிரயித்த கலைகளாம் (*Space arts*). காவியமும் கானமும் காலத்தை ஆசிரயித்த கலைகளாம் (*Time arts*). அதாவது, காலமே காவியத்தில் பா அல்லது சந்தமாக

வும், கீதத்தில் தாளமாகவும் உள் இருந்து அக்கலைகளை நிலைநிறுத்துவது. தாளத்தாலும், சந்தத்தாலும் நன்கு கட்டப்பட்டதே பிரபந்தமாகும். நர்த்தன கலையோ ஸ்த்ரீ புருஷர் தேகங்களாலேயே சாதிக்கப்படுவதால் இடத்தையும், தாள ஸம்பந்தத்தால் காலத்தையும் ஆசிரயித்தது.

மதுரமான சப்த விசேஷங்களே ஸ்வரங்களாவன; பொருளோடு கூடிய சப்த விசேஷங்களே சொற்களாவன. ஸ்வரங்களும் சொற்களும் நாதத்திலிருந்து உத்பவித்தமையால் ஒரே இனத்தைச் சேர்ந்த தொனி விசேஷங்களே. இப்படிச் சொல்லும் ஸ்வரமும் ஸஜாதீயமானதால் சொற்களாலான காவியத்தையும், ஸ்வரங்களாலான கானத்தையும் ஒன்றோடொன்று சேர்த்து அமைத்தல் இயலும். சொல்லும் ஸ்வரமும் தேனும் கனிரஸமும் ஒப்ப பிரிக்கவொண்ணாதபடி கலந்து, ஒன்றையொன்று போஷித்துச் சுவைப்படுத்துவன. மேலும் காவியத்தை நிலைநிறுத்தும் சந்தமும் கானத்தை நிலைநிறுத்தும் தாளமும் ஸஜாதியமான காரணத்தால் ஒன்றையொன்று விசித்திரப்படுத்துவதன்றியும் இவ்விரண்டும் இருவிதமாய்ச் சொற்களை அழகுபடுத்துவன. கூத்தானது இடத்தை ஆசிரயித்த கலையானபோதிலும், தாள ஸம்பந்தம் படைத்ததால், அது சொல்லுடனும் இசையுடனும் நிகழக் கூடியதே. கால ஸம்பந்தம் இல்லாதனவும், வெறும் இடக்கலைகளுமான சிற்ப சித்திரங்கள், வெறும் காலக்கலைகளான இலக்கிய கீதங்களுடன் கூத்தைப்போலச் சேர்ந்து நிகழா.

சொல்லால் நிருமிக்கப்பட்டுச் சொல்லே பிரதானமாய், சொல்லைக் கொண்டே பொருளை விவரிப்பதும், விதவிதமான அணிகள் பூண்டதும், பலபல பாவினங்களில் அமைந்ததும், உபமானம் உத்பிரேக்ஷை முதலிய கற்பனாதிசயங்கள் நிறைந்ததுமான காவியமே இயல் தமிழாகும். இது உரையெனப்பட்ட கத்யமாகவும், செய்யுளெனப்பட்ட பத்யமாகவும் இருத்தல் கூடும். இக்காவியமே, ரதிஸமயத்தில் தலைவி அலங்காரங்களைக் களைவதுபோல், அணிகளைக் களைந்து கானக்கிரியையாலேயே தன் பொருளையும் ரஸத்தையும் எப்போது பெருக்கிக் கொள்ளுமோ, அப்போது அது இசைத் தமிழாகும். அதாவது, எங்கு காவியம்தான் விகாஸமடைய கானத்தின் ஸஹாயத்தை அபேக்ஷிக்கிறதோ, எங்கு ஸ்வரங்களாலும் ஸங்கதிகளாலுமே கவியின் பொருள் பிரகாசத்தை அடைகிறதோ, அக்காவியம் சிராவிய காவியம் அல்லது இசைத் தமிழாம். இனி காவியமே, விதையை யொப்ப, இலை, பூ, காய், பழம் அடங்க முழுமரத்தையும் தன்னுள் கொண்டு, நாட்டியகலையின் உதவியாலேயே, அவற்றையெல்லாம் கண்கூடாக விவரிப்பது திருசிய காவியம் எனப்பட்ட நாடகத் தமிழாம். அதாவது, ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டதும் பாரமுள்ள சொற்களாலமைந்ததும், அபிநயத்தால் மட்டுமே பூர்ண விகாஸத்தையடைவதுமான காவியமே நாடகத் தமிழாகும்.

இயல் இசை நாடகமான முத்தமிழை தமிழ் மக்கள் நான்மறைக்குச் சமானமாகவே கருதினர் என்பது, சோழ பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகளில் காணக்கிடக்கிறது. வேதத்துக்கு விஷயம் பகவானே; வேதத்தைப் போல பகவானையே விஷயமாய்க் கொண்ட இயல் இசை நாடகங்களே முத்தமிழாம்; அப்படிக் கொள்ளாத வெறும் லௌகிக காவியங்கள், முத்தமிழாகா என்பது பழந்தமிழ் மக்கள் கருத்து. நாட்டியக் கலைக்கு இலக்கணம் எழுதிய பரத முனிவரும் 'நாட்டிய கலையின் அங்கமான காவியத்தை ரிக்வேதத்திலிருந்தும் கானத்தை ஸாமவேதத்திலிருந்தும், அபிநயத்தை யஜுர் வேதத்திலிருந்தும் பிரமதேவர் ஸங்கிரஹித்தார்' என்று கூறியுள்ளார். இம் மேற்கோளால் நாம் அறியக்கூடியதென்னவென்றால், வேதத்திலேயே இயல் இசை நாடகம் என்ற விபாகம் உண்டு என்பதும், வேதபுருஷரான அகஸ்திய முனிவர் தமிழையும் வேதத்தைப்போலவே விபாகப்படுத்தினர் என்பதுமே. ஆகையால், 'இயல் இசை நாடகம் என்ற பாகுபாடு தமிழ் மொழியில் மாத்திரமேயுள்ளது, பிறமொழியிலில்லை' என்பதும் தவறே. அகஸ்தியர் வகுத்த முறையை அனுஸரித்த இசைத்தமிழ் தேவாரமாகும்; நாடகத்தமிழ் திவ்வியப் பிரபந்தத்தின் பெரும் பாகமாகும்.

தமிழில் காணாத பொருள்களை யெல்லாம் இசை எடுத்துதவித் தமிழைப் போஷிப்பதை உலகப்பிரஸித்தமான 'வருகலாமோ' என்ற நந்தன் சரித்திரக் கீர்த்தனையைக் கொண்டு அறியலாம். இதன் ஸாஹித்யத்தை வாசித்துப் பார்த்தால் விசேஷ அர்த்த கௌரவத்தைக் காணமாட்டோம். ஆனால் இறைவனுக்குகந்த ஸாமத்தின்சாயையைத் தன்னிடம் கொண்ட மாஞ்சி ராகத்தில் பாரதியார் கற்பித்தபடி பாடுவோமானால், பகவானை அணுகும் காரணமாகப் பொங்கியெழும் ஆநந்தமும், முதல்முதல் நாயகனை அணுகும் நாயகிபாலுள்ள லஜ்ஜையும், தன்னை அங்கீகரியாமல் மறுத்துவிடுவானோ என்ற பயத்தினால் ஏற்பட்ட தைன்யமும், ஆனால் தரத்தகாத பெரிய பொருள் ஒன்றையும் யாசிக்கவில்லையே எனத் தேற்றிக் கொண்டதால் உண்டாகும் தைரியமும், திருப்பித் திருப்பி பாடுங்கால் 'வருகலாமோ?' என்ற சொல்லின் கானத்தினாலேயே எழுப்பப்படுவதைக் காணுவோம். இம்மாதிரியே, ஒவ்வொரு பதத்துக்கும், பாதத்துக்கும் இசையானது விஸ்தாரமான உரை கூறி, ஸாஹித்யத்தில் காணாத நவநவமான பொருள் நயங்களை யெல்லாம் தொனிக்கச் செய்வது அறிக. கானமே சொற்களில் ஆழ்ந்து கிடக்கும் பொருளை அபிநயம் செய்து, வியக்தமாக்குவது என்றும் சொல்லலாம்.

இதுபோலவே 'ஆடியாடி அகங்கரைந்து' என்று பிரிவினால் வருந்திய நாயகியை ஆழ்வார் வர்ணித்த இடத்து, முன்னர் கோபிகள் பகவான் மறைந்தருளியபோது, அவன் லீலா சேஷ்டிதங்களை ஆடி அபிநயித்துப் பிரிவாற்றாமையைத் தணித்துக் கொண்டதொப்ப, இவளும் உன் லீலைகளையெல்லாம் அனுகரித்து ஆடியும் ஆற்றாது துக்கம் அதிகரித்தவளாய் மெய்ப்பாடுகள் தோன்றத் துடிக்கிறாள் என்பதை அபிநயத்தால் அன்றிப் பிறிதொன்றால் கட்புலனாக்க முடியுமோ? இப்படியே 'மண்ணை யிருந்து துழாவி வாமனன் மண் இதுவென்னும்' என்ற இடத்தும், வாமனன் அளந்த மண் இருக்க, வாமனனைக் காணாத காரணத்தால் சூன்யமான திருஷ்டியுடன் பித்தேறியவள் போல மண்ணைத் துழாவுகிறாள் என்றும், மண்ணின் ஸ்பர்சத்தால் விரஹாக்னி தணியச், சிறிது தெளிந்து ஆதிவராஹன் கரத்தாலும் மாணிக்குறளன் பாதத்தாலும் புனிதமாக்கப்பட்ட மண் என்று அதைப் பிரியத்துடன் பார்த்துத் தனக்குகந்த மெய்ப்பூச்சாகக் கொண்டு, மண்ணினின்றும் கையை எடுக்கவும் சம்மதியாளாய் அளைகின்றாள் என்றும், மண் அன்றியும் பரதன் ஆருயிரையும் பாதுகையால் காத்த அக்கருணாகரன், மண் படிந்த தேகத்துடன் அசோகநிழலில் கிடந்த ஸீதையையொத்த தன்னைக் காவாதொழிவனோ எனப் பயந்து வாடி ஸ்தம்பித்துக் கிடக்கிறாள் மண் மிசை என்றும், நாட்டிய வாயிலாகவே கட்புலனாக்கி அனுபவிக்கத்தக்கது.

ஆங்கிலத்தில் இயல் தமிழுக்குச் சமானமான காவியங்கள் உள எனினும், இசைத் தமிழ், நாடகத்தமிழுக்குச் சமானமான இலக்கியங்கள் ஒரு சிறிதும் இல்லாதது, அப்பாஷைக்குக் குறையே. ஆனால் ஆங்கிலத்திலுள்ள நாடகங்கள் போலத் தமிழிலும் வடமொழியிலும் இல்லாத குறையும் லாபமேயல்லாது குறையாகாது.

தமிழ் ஏன் இசை நாடகவளவிலே நின்றுவிட்டது? சித்திரத்தமிழ் சிற்பத்தமிழ் என்கற்பிக்கப்படவில்லை என்றால், சித்திரமும் சிற்பமும் இடக்கலைகளானமையாலும், இலக்கியம் காலக்கலையானதாலும் இவை சேராதொழிந்தன என்க. என்றாலும், இலக்கியம் இக்கலைகளையும் அனுகாரம் செய்யாமல் விடவில்லை. எப்படி வாஸ்துகலை சிற்ப சித்திரங்களைத் தன் அங்கமாக்கிக் கொள்ளுமோ, அப்படியே இலக்கியக்கலையும் ஸமஸ்த சிற்ப சித்திரங்களையும் தனக்கு அங்கமாக்கிக் கொள்ளும் பண்புடையது. ஆகையால் இலக்கியத்தை நன்குணர, வெறும் பாஷா ஞானம் மட்டும் பயன்படாது. கானத்தையும் நர்த்தனத்தையும் ஸமஸ்த சிற்பங்களையும் அறிந்திருந்தாலன்றி, இலக்கியத்தின் சுவையைப் பூரணமாக அறிதல் அரிது. பாஷா ஞானத்தைச் சம்பாதிக்க எவ்வளவு முயற்சி தேவையோ, அவ்வளவு முயற்சி இல்லாமல் கான நர்த்தன சிற்பங்களில் பயிற்சியும் ஏற்படாது. இந்தப் பல்வேறு வகைப்பட்ட ஞானங்களை யெல்லாம் சம்பாதித்த பின்னர் காவியத்தை அனுபவிப்பவனே ரஸிகன்; அவனே ஸஹ்ருதயன். ஏனென்றால், கவிகளுக்கு இத்தகைய பயிற்சி பூரணமாக இருந்தது. நம்

நாட்டில் சித்திர சிற்பங்களை அனுகாரம் செய்யாத கவியே இல்லையென்று சொல்லிவிடலாம். சிற்பப் புலமை இல்லாதவனால் சிற்ப நுட்பங்கள் செறிந்து கிடக்கும் காவியத்தை எப்படி ரஸிக்க இயலும்? எவர் இதயங்களிப்பதற்காக கம்பநாடர் கவிதை பாடினாரோ, அவர்களே இத்தகைய சிற்பப் புலமை வாய்ந்த கற்றோர்கள். இப்புலமை இல்லாதவர்களுக்கு காவியத்தைப்பற்றிப் பேச அதிகாரமேயில்லை. இனி இலக்கியத்தில் காணும் சிற்ப சித்திரங்களுக்குச் சில உதாரணங்கள் காட்டுவோம். நக்கீரரது

சீரை தைஇய உடுக்கையர் சீரோடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன் கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர்

என்ற தபஸ்வியின் வர்ணனையும்

ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர்

என்ற அந்தணர் வர்ணனையும் மஹாபலிபுரத்தில் உள்ள மஹாசில்பத்தில் கண்ட தபஸ்வியையும் அந்தணரையும் ஒத்த சொற்சிற்பமன்றோ?

முடிச்சோதியாய் உனது முகச்சோதி
மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற தாமரையாய்
அலர்ந்ததுவோ

என்று ஆழ்வார் பாடியது அதிஸுந்தரமான சிலாவதாரத்தை விஷயமாகக் கொண்ட உத்பிரேக்ஷையாம்.

அருணகிரிநாதர் வள்ளி தேவியை

பருத்த முலை சிறுத்த இடை வெளுத்த நகை
கறுத்த குழல் சிவத்த இதழ் மறச்சிறுமி

என்று வரைந்தது, எழுத்தாணி கொண்டன்று, சைத்திரிகனது 'லேகனி' கொண்டே. ஆழ்வார்

செக்கர் மாமுகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதி சூடி, அஞ்சுடர் மதியம் பூண்டு
பல்சுடர் புனைந்த பவளச் செவ்வாய்
திகழ் பசுஞ் சோதி மரகதக் குன்றம்

என்றது பகவானை விஷயமாகக் கொண்டதொரு வர்ணக்கோலமே!
மேலும்

செந்தாமரைத் தடங்கண்
செங்கனிவாய் செங்கமலம்
செந்தாமரை யடிகள்
செம்பொன் திருவுடம்பே

என்றவர்

திருவுடம்பு வான் சுடர்
செந்தாமரை கண் கை கமலம்

என்றும்

என்னுள் கலந்தவன் செங்கனிவாய்
செங்கமலம்
மின்னும் சுடர் மலைக்குக்
கண்பாதம் கைகமலம்

என்றும், பின்னர்

அப்பொழுதைத் தாமரைப்பூ
கண்பாதம் கைகமலம்

என்றும், பிறகு

என்னம்மான் கண்ணனுக்கு
நோவாய் செம்பவளம் கண்பாதம் கை
கமலம்

என்ற விடத்து, சொற்களாகிய முத்துக்களை முகம் மாறிக் கோத்து, மாறி மாறி அனுபவித்தவரல்லவா ஆழ்வார்?
இன்னும்

மந்தார முந்து மகரந்த மணந்த வாடை

என்ற கம்பரது ரசனை ஒரே ஸ்வரத்தைப் பல வேறு இடங்களில் இயைக்கும் கானக்கிரியையின் அனுகாரமன்றோ?
மேலும் கூத்தர்

மாயிரும் பயோததித் தொகையென
வாள் விடும் திவாகரத்திரளென
ஆயிரம் பண மிதப்பா வைய
தாயிரம் சிகாமணி ப்ரபையதே

என்றது மாகதத்தையும் மாணிக்கத்தையும் ஒத்த சொற்களால் இழைக்கப்பட்ட விசித்திர பூஷணமன்றோ?

இப்படி வாஸ்துகலையைப்போல விஸ்தாரமான இலக்கியக் கலையின் அங்கங்களை யெல்லாம் உணர்ந்து, பிறகு நிஷ்பக்ஷபாதமாக இலக்கியக் கலையை அனுபவிப்பவரே ரஸிகராவார்.

பட்டணம் சுப்பிரமணிய அய்யர்.

திருச்சி திரு. டி. கே. கோவிந்தையர்.

செந்தமிழ்ச் செல்வமலிந்த நம் தமிழ் நாட்டில் கர்நாடக சங்கீதத்தை முறையாகப் பயின்று, அந்த சங்கீதத்தினால் ஏற்படும் இன்பத்தை யாவரும் அனுபவிக்கும்படி செய்தவர்களுள் ஸ்ரீ. பட்டணம் சுப்பிரமணிய அய்யரவர்களும் ஒருவராவர். அவருடைய மத்ய கால பிருகாக்களும், குண்டு குண்டான ரவை ஜாதிகளும், அடுக்கு அடுக்காக ஸ்வரம் பாடும் அழகும், நாபீ கமலத்திலிருந்து எழும்பும் நாதமும் மிகப் பிரஸித்தியுள்ளவைகள்.

அவருடைய முன்னோர்கள் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவராவர். அவர் அந்தணர்களுள் அஷ்ட ஸஹஸ்ரமென்னும் வகுப்பைச் சார்ந்தவர். அவரது பாட்டனாராகிய சங்கீத வித்வத்ஸிம்ஹம் பரதம் பஞ்சநத சாஸ்திரிகள் என்பவர் தஞ்சாவூரில் சரபோஜி அரசர் பரிபாலனம் செய்துவந்த காலத்தில் ராஜாங்கத்தில் அரண்மனை வித்துவானாக விளங்கியவர். சரபோஜி அரசனின் காலத்திற்கு பின் வந்த பஞ்சநத சாஸ்திரிகளின் குமாரரான வைத்தியநாதையர் என்பவருக்குத் தான் பட்டணம் சுப்பிரமணிய அய்யர் அவர்கள் புத்திரராகத் தோன்றினார். ஐயாவர்கள் தமது இளம்பருவத்திலேயே தனது பெற்றோர்களை இழந்ததினால் தனது அத்தை சிவப்பிரியம்மாளின் குமாரி மீனாக்ஷி அம்மாளுடன் நன்னிலம் தாலுக்காவைச் சேர்ந்த விஷ்ணுபுரத்தில் ஸ்திரவாசமாக இருந்து வந்தார். விஷ்ணுபுரத்திலிருக்கும் பொழுதே அவர் தமது பாட்டனாராகிய பஞ்சநத சாஸ்திரிகளின் தமையன் குமாரரான விசுவநாத சாஸ்திரியாரின் குமாரர் பரதம் கணபதி சாஸ்திரிகளிடம் சங்கீதத்தைக் கொஞ்ச காலம் கற்று வந்தார். பரதம் கணபதி சாஸ்திரிகள் சங்கீதத்திலும் ஒருவாறு ஸாஹித்யத்திலும் ஒருங்கே திறமையுடையவர். அநேகருக்குப் பரதம், சங்கீதம் முதலியவைகளைப் போதித்திருந்தார். அவர், ஐயாவர்களுக்கு ஆரம்பத்தில் சங்கீதப் பயிற்சி கொடுத்து சங்கீதத்தில் ஒரு ஊக்கத்தையும் அளித்தார்.

பட்டணம் சுப்பிரமணிய ஐயர் தனது ஒன்றுவிட்ட தமையனாரும் குருவுமான பரதம் கணபதி சாஸ்திரிகளுடன் சென்னைக்கு ஒருதரம் சிறு வயதாயிருக்கும்பொழுது வந்தார். சென்னையில் சுமார் ஒரு மாதகாலம் தங்கியிருக்கும்பொழுது கணபதி சாஸ்திரிகள் தான் சொல்லிக் கொடுத்த மாதிரியாக ஐயாவர்கள் பாடம் சொல்லாததினால் மிகவும் சினந்து அவரை நன்கு அடித்து விட்டார். பாவம்! ஐயாவர்கள் மிகவும் பயமடைந்து தனது குருவின் பார்வையிற்படாமல் ஒளிந்துகொண்டார். சிறிது கோபம் தணிந்ததும் கணபதி சாஸ்திரிகள் 'அடே! சுப்பிரமணியம்' என்று மும்முறை கூப்பிட்டார். ஐயாவர்கள் குருவின் எதிரில் வரப் பயந்து அங்கிருந்த பெரிய தூணின் மறைவில் ஒளிந்து கொண்டார். இதைக் கண்டதும் குருவானவர் 'டேய்! சுப்பிரமணியம், நீ இப்பொழுது மறைந்தால் சதஸ்ஸிலும் மறைவாய்த் தானிருப்பாய். இப்படி நேராக வந்து சரியாகப் பாடு'' என்று கூறினாராம். இதை அய்யரவர்கள் நினைந்து நினைந்து மனங் கலங்குவதுண்டு.

கணபதி சாஸ்திரிகளுக்கு பின்பு பட்டணம் சுப்பிரமணிய ஐயரவர்கள் தமது அத்தை குமாரியாகிய மீனாக்ஷியின் குமாரர் சங்கீதம் கொத்தவாசல் வேங்கடராமையரிடம் சிறிது காலம் சங்கீதம் கற்று வந்தார்.

இப்படியாக ஐயரவர்கள் இளமையிலேயே சங்கீதத்தைப் பயின்று மேலும் மேலும் சங்கீதத்திலேயே அளவில்லாத பிரியமுண்டாகி தமது ஊக்கம் குறையாமல் பிரதிதினமும் அவருக்கு பாடமான ஸ்ரீ தியாகய்யரவர்களின் கிருதிகளைப் பாடிவந்தார். அப்பொழுது ஐயரவர்கள் மகாநோம்புச்சாவடி வேங்கடசுப்பையர் என்பவரை குருவாக அடைந்தார். வேங்கடசுப்பையர் தியாகய்யரின் நேர் சிஷ்யர்களில் ஒருவராவர். சுப்பிரமணிய ஐயாவர்களுக்கு சிறிது காலத்திற்குள்ளாகவே தனது ஊக்கத்தினாலும் இடைவிடா உழைப்பி

னுலும் பாட்டுகளை கவனம் செய்யும் சக்தி ஏற்பட்டது. அவருடைய கவனம் செய்யும் அபார சக்தியை வெளியிட ஒரு சமயம் நேர்ந்தது.

அவர் சிறுபிராயத்தில் வேங்கடசுப்பையரிடம் குருகுல வாசம் செய்யும்பொழுது அவர் தமது குருவுடன் ஒரு குக்கிராமத்தில் தங்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கு வேங்கடசுப்பையருக்கு மூக்குப்பொடி தட்டிப்போக, பைத்தியம் பிடித்தவரைப்போல் தனது சிஷ்யர்களின்மேல் சினந்து சீறிச் சீறி விழுந்தார். ஒரு சிஷ்யன் நாசிகா சூர்ணம் வாங்க கடைதேடி ஓடினன். அந்தக் குக்கிராமத்தில் மூக்குப்பொடி அகப்படுவது கஷ்டம். (சுப்பிரமணிய) ஐயரவர்கள் இவைகளெல்லாவற்றையும் கவனித்துக் கொண்டே ஆழ்ந்த யோஜனையிலிருந்தார். அவருக்கு திடீரென்று பொடியைப்பற்றி ஒரு பாட்டு அமைத்துப் பாடவேண்டுமென்று தோன்றியது. உடனே ஒரு பாட்டைக் கவனம் செய்து தமக்குள்ளேயே பாடி ஒத்திகை பார்த்துக்கொண்டார். அவரது குரு வேங்கடசுப்பையர் வந்தவுடன் சாவேரி ராகத்தை அரைமணி நேரம் கந்தர்வ கானமாய் ஆலாபித்து தாம் கவனம்செய்த பாட்டைப் (''தூமபத்ர தூளி தொரகுனு?'') பாடி நிரவல், ஸ்வர கல்பனைகள் முதலியவைகளை சரிவரச் செய்து முடித்தார்.

அதை வேங்கடசுப்பையர் கேட்டதும் மனதிற்குள் மகிழ்ச்சி அடைந்து கவனம் செய்யும் சக்தியைச் சாதாரணமாக உபயோகியாது நல்ல வழியில் ஈசுவரனைக் குறித்து பாட்டுகளைக் கவனம் செய்யும்படி அனுக்கிரசெய்தார்.

ஐயரவர்கள், மஹானுன தியாகய்யரின் கீர்த்தனங்களில் சுமார் முப்பதுக்குக் குறையாமல் பாடியபின்தான் போஜனம் செய்வதுவழக்கம். அவர் ஒரு வாரத்தில் சில குறித்த நாட்களில், பல்லவி, ஸ்வரம், மற்றுஞ் சில நாட்களில் தானம், வர்ணங்கள் பாடுவது என்று ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொண்டு பாடிவந்தார்.

இப்படியாக அவர் பாடிவரும் காலத்தில் அவருக்குப் பிரபல சங்கீத வித்துவானுகிய கோயம்புத்தூர் ராகவையரின் பாட்டைக் கேட்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. கோயம்புத்தூர் ராகவையர் என்பவர் அக்காலத்தில் சங்கீதத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியவர். அவர் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானுக இருந்து புகழ்பெற்றவர். அவர் அநேக வித்வான்களுடன் நேருக்குநேர் சங்கீதத்தில் போட்டிபோட்டு கீர்த்தி பெற்றவர். அவர்களுடைய பாட்டானது விசேஷமுள்ள கனத்துடனும் நாபி கமலத்திருந்து எழும்பும் கம்பீர த்வனியுடனும் கூடியதாக இருந்தது. அத்தகைய சங்கீதத்தை ஐயரவர்கள் கேட்டவுடன் மிகவும் மனம் பூரித்து, தானும் அம்மாதிரியே பாடவேண்டுமென்று ஆவல் கொண்டார். ''பாடினுல் அவரைப் போல பாடவேண்டும். இல்லாவிடில் பிராணனையே விட்டுவிட வேண்டும்'' என்று அவர் மனதில் உறுதிசெய்து கொண்டார். இதன்பின் அவர் விஷ்ணுபுரத்திலுள்ள கச்சுக்கட்டு என்கிற ஊருக்கு வந்திருந்த காலத்தில், அதி தீவிரமாக சாதகம் செய்யத் துவக்கினர். அக்கிராமத்தின் அருகில் ஓடும் 'அரிச்சந்திர' நதியில் நல்ல குளிர் காலத்தில் விடியற் காலையில் நதியின் ஜலத்தில் உட்கார்ந்துகொண்டு அகாரஸாதகம் வருஷக் கணக்காகச் செய்து வந்தார்.

இதன் பிறகு அவர் ஒவ்வொரு இரவும் சந்திரிகை கிளம்பினவுடன் பாட ஆரம்பிப்பதும் சந்திரிகை ஆனவுடன் பாட்டை முடிப்பதுமாக ஸாதகம் செய்துவர ஆரம்பித்தார். மூன்று நாழிகை நிலா இருந்தால் அன்று மூன்று நாழிகை நேரம் ஸாதகம் செய்வார். பூர்ண சந்திரிகை (பௌர்ணமி) யன்று இரவு முழுவதும் ஸாதகம் செய்வார். இப்படியாக இவர் விடாமுயற்சியுடன் ஸாதகம் செய்து வந்தார். எப்பொழுதும் அவர் மனதில் கோயம்புத்தூர் ராகவையர் பாடியமாதிரியே பாடவேண்டுமென்னும் எண்ணம் இருந்துகொண்டேயிருந்தது. சிற்சில சமயங்களில் சரியானபடி பிருகாக்கள் வராதபொழுது, தனது தலையை கல்லிலும் கம்பத்திலும் மோதிக்கொள்வார்; உணவும் உட்கொள்ளார். இறுதியாக அவரது சலி

யாத உழைப்பினல் கோயம்புத்தூர் ராகவை யர் எப்படிப் பாடினரோ அதே மாதிரி பாடும் வல்லமையை அடைந்தார்.

அநேக வருஷ ஸாதகங்களுக்குப்பின் ஐய ரவர்கள் சென்னைக்கு விஜயம் செய்தனர். அவர் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் அவருடைய வித்தையை நிதர்சிக்க சமயம் ஏற் பட்டது. அவர் சென்னையில் செய்த கச்சேரி மிகவும் உயர்தரமாயும், பொதுஜனங்களின் உள்ளத்தை ஒருங்கே கவருவதாயுமிருந்தது. அநேக வருஷங்களாக உழைத்தபின் செய்த கச்சேரியாதலால், அதை வேறு எந்தக் கச்சே ரியுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதபடி அவ்வளவு உயர்தரமாகவும் கர்ண சிராவியமாக வும் இருந்தது. அதைக் கேட்டு ஆனந்தமடை யாதவர்கள் இல்லை என்றேதான் சொல்ல வேண்டும். அவரைச் "சாதாரண கிராமாந்தர சுப்பிரமணிய ஐயர் இல்லை; பட்டணம் சுப்பிரமணிய அய்யர்" என்று பொது ஜனங் கள் வாயாரப் புகழ்ந்தனர். அன்று முதற் கொண்டு அவர் "பட்டணம் சுப்பிரமணிய ஐயர்" என்று பெயர் வழங்கப்பெற்றார்.

சில சமயங்களில் ஐயரவர்கள் கச்சேரிக்கு காலஞ்சென்ற திருக்கோடிகாவல் கிருஷ்ணை யர் அவர்களும் காலஞ்சென்ற துக்காராம் அவர்களும் முறையே பிடிலும், மிருதங்கமும் வாசித்திருக்கிறார்கள்.

சென்னையில் அவர் செய்த கர்ணசிராவியக் கச்சேரிகளின் பயனாக அவர் பெயர் எங்கும் பிரசித்தி அடைந்தது. பின்னர் அவர் திரு வையாற்றை தலைமை வாசஸ்தலமாகக்கொண்டு வாழ்ந்திருக்கும் காலத்தில் அவருடைய பெ யர் எல்லா ஸம்ஸ்தானங்களிலும் பரவவும், அவ்வந்த ஸம்ஸ்தானங்களிலிருந்து அழைப்புக் கடிதங்கள் அவருக்கு வந்தன. ஐயரவர்களும், மைசூர், திருவாங்கூர், விஜயநகரம், ராமநாத புரம் முதலிய சமஸ்தானங்களில் பாடி நன்கு கௌரவிக்கப்பட்டார். அவருக்கு விலையுயர் ந்த சால்வைகள், தோடாக்கள், மற்றும் அநேக சம்மானங்கள் கொடுக்கப்பட்டன. சில ராஜாங்கங்களிலிருந்து அவருக்கு சம்பள மும் கொடுக்கப்பட்டு வந்தது.

மைசூர் ஸம்ஸ்தானத்திற்கு ஐயரவர்கள் சென்றிருந்தபோது மைசூர் திவான் வீட்டில் இவரது கச்சேரி நடக்க ஏற்பாடாயிருந்தது. அப்பொழுது வித்வான் வீணை சாம்பையா* மைசூர் ஸம்ஸ்தானத்தில் ஆஸ்தான வித்வா னாக இருந்தவர். அவர் யாரையும் லக்ஷியம் செய்வது கிடையாது. எப்பேர்ப்பட்டவ ராயினும் சரிவரப் பாடாவிடில் அவரைப் பலர் அறிய அவமானப் படுத்தி விடுவார். பட்ட ணம் சுப்பிரமணிய ஐயரின் கச்சேரி நடக்க விருந்த அன்று திவான் வீணை சாம்பையா வைக் கச்சேரி நடக்கும் கூடத்திற்குள் விட வேண்டாமென்று உத்திரவிட்டிருந்தார்.

வித்துவான் வீணை சாம்பையா தமது பல் லக்கில் அந்த வழியாக வரும்பொழுது யாரோ பாடும் சப்தம் கேட்டு அதிசயித்து "யார் பாடு வது இவ்வளவு தூரம் கேட்கிறது" என்று வியந்து பல்லக்கை நிறுத்தச் சொல்லி, தன் னைத் தடுத்ததையும் லக்ஷியம் செய்யாமல் உள்ளே சென்று ஐயரவர்களின் பாட்டில் ஈடு பட்டு மெய்மறந்திருந்தார். இறுதியில் வீணை சாம்பையா ஐயரவர்களை ஆசீர்வதித்து "நீ தீர் க்காயுஸாக இருப்பாய். விரைவில் முன்னுக்கு வருவாய்" என வாழ்த்தி, தமது இருப்பிடத் திற்கு மறுநாள் காலை வரும்படியும், தமது பெட்டி வண்டியை அனுப்புவதாகவும் சொல் லிச்சென்றார். மறுநாள் வீணை சாம்பையாவே, ஐயரவர்களை மகாராஜாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்துப் பாடச்சொல்லி, அவரை சன்மானங் களால் கௌரவித்தார்.

மற்றொரு சமயம் மைசூர் அரண்மனையிலே மஹா வைத்தியநாத சிவன் அவர்களின் கச் சேரியும் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் அவர் களின் கச்சேரியும் ஏற்பாடாயிருந்தது. முதன் முதலில் மஹா வைத்தியநாத சிவன் கச்சேரி ஆரம்பமாயிற்று. அவர் பாடியது 'தேவகானம்' போலிருந்ததினல் எல்லோரும் இனிமேல் எப்படிப் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் பாடப்போகிறார்? இனிமேல் கலை கட்டுமா? என்று அங்குள்ளோர்கள் ஆச்சரி யப்பட்டு வியந்தனர். இதனிடையில் ஐய ரவர்கள் சட்டை தலைப்பாகை முதலியவை

* இவர் 'இந்த ஸாம்புடு வாசிக்கவேண்டும், அந்த ஸாம்புடு (பகவான்) கேட்கவேண்டும்' என்பாராம். [ப-ர்]

களை அணிந்து கச்சேரி செய்ய உட்கார்ந்தார். தமது சாதக உழைப்பின் பயனாக, அன்று அவர் கச்சேரி மிகவும் அத்தியாச்சரியமாயிருந்தது. அவருடைய மத்தியகால பிருகாக்களும், அடுக்கு அடுக்கான ஸ்வரம் பாடும் அழகும் கேட்பதற்கு மிகவும் இனிமையாயிருந்தன. ஐயரவர்களுக்கு ஊத சரீரமான படியினால் வியர்வை தாங்காமல் சிரமப்பட்டர். மகாராஜா இதையறிந்து ஐயரவர்கள் 'தலைப்பாகை, சட்டை முதலியவைகளைக் கழற்றிவிடலாம்' என உத்தரவளித்தார்.

ஐயரவர்கள் பொடி போடும் வழக்கம் உடையவராதலால் அவருக்கு சட்டென்று பொடி தட்டுப்பட்டது. அவர் பொடிக்காக மடியைத் தடவினார். இதை குறிப்பாய் அறிந்த மகாராஜா வைரம் பதித்த தமது தங்கப்பொடி டப்பியை எடுத்து ஐயரவர்களிடம் சன்மானமாகவே கொடுத்தருளினார். அய்யரவர்கள் அதிக உற்சாகம் அடைந்து "பியாகடை." ராகத்தை வெகு அருமையாக அன்று முழுதும் ஆலாபனை செய்தார். பின்னர் இரண்டாம் நாள் கச்சேரியில் தானம் வகையராக்களையும், மூன்றும் நாள் கச்சேரியில் பல்லவி, ஸ்வரம் முதலியவைகளையும் அழகு பெறப் பாடி தமது கச்சேரியை முடித்தார். மகாராஜா மிகவும் சந்தோஷித்து விலையுயர்ந்த பொருள்களை சன்மானித்து ரூ. 1000 வருஷாசலமாக பிரதி வருஷமும் கொடுத்தும் வந்தார்.

ஐயரவர்கள் ராமநாதபுரம் சமஸ்தானத்திலும் நன்கு கௌரவிக்கப்பட்டு வந்தார். அப்பொழுது அங்கு அரசாண்ட பாஸ்கரசேதுபதி மஹாராஜா அவரை வரவழைத்து அவருடைய பாட்டைக் கேட்டு மகிழ்ந்து சம்பளமும் அனுப்பி வந்தார். ராமநாதபுரத்தில் ஒவ்வொரு நவராத்திரியின் போதும் சிறந்த வித்வான்களை வரவழைத்து கௌரவித்து அனுப்புவது வழக்கம். அப்படியே ஒருசமயம் ஐயரவர்களும், மகாவைத்தியநாத சிவனும் தருவிக்கப்பட்டார்கள். அப்பொழுது ஆஸ்தான வித்துவானாக விளங்கிய குன்னக்குடி இரட்டைப்பல்லவி கிருஷ்ணய்யர் என்பவர் பல்லவி பாடுவதில் நிகரற்றவராய் விளங்கினார். அவர் வைத்தியநாதையர் பேரிலும், ஐயரவர்களின் பேரிலும் அசூயைகொண்டு ஆறுமாதகாலமாகக் கஷ்டப்பட்டு ஒரு கரடு முரடான பல்லவியைச் செய்து முடித்தார். பின்னர் மகாராஜாவிடம் சென்று, தான் ஆஸ்தான வித்துவானாதலின் முதல் முதலில் பல்லவியை ஆரம்பிக்க உத்தரவளிக்க வேண்டுமென்றார். மகாராஜாவும் அதிகாரம் கொடுத்தார். இவ்விஷயம் வைத்தியநாதய்யருக்கும், ஐயரவர்களுக்கும் தெரியலாயிற்று. கர்நாடக சங்கீதத்தில் யார் திரிஸ்தாயி இறுதியில் ராகத்தைப் பாடி முடிக்கிறார்களோ, அவர்கள்தான் பல்லவியை ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு ஸம்பிரதாயம் இருக்கிறது. அதன்படி மகாவைத்தியநாதய்யர் கச்சேரி தினத்தன்று ஸதஸ்ஸில் முதலில் ஒரு கன ராகத்தைப் பாடி முடித்தவுடன் 'சங்கர விபோ' என்கிற பல்லவியை மூன்றும் காலத்தை முதற்காலமாக வைத்துக்கொண்டு பல ஆவர்த்தங்கள் பாடி விட்டார். குன்னக்குடி கிருஷ்ணய்யரவர்கள் ஏமாந்துபோய் மகாராஜாவைப் பார்த்தார். மகாராஜாவும் இந்தக் குறிப்பை அறிந்து இந்தப் பல்லவி பாடிய பின்னர் அதையும் பாடலாம் என்று அறிவித்து விட்டார். மஹாவைத்தியனாதையர் மூன்று காலத்தையும் மிகவும் அழகாகப் பாடி முடித்தார். உடனே பட்டணம் சுப்பிரமணிய ஐயரவர்களும் தமது உழைப்பின் பயனாக மூன்று காலங்களையும் பாடி விட்டார். குன்னக்குடி கிருஷ்ணையர் அந்த பல்லவியைப் பாடும்பொழுது முதற் காலத்தையே மிகவும் சிரமத்துடன் பாடினார். இரண்டாம் காலம் அவர் தொண்டையில் பேசவில்லை. மஹாராஜா உடனே கச்சேரியை நிறுத்தி, மஹாவைத்தியனாதய்யருக்கும், ஐயரவர்களுக்கும் பல விலையுயர்ந்த சன்மானங்களை வழங்கி அனுப்பினார்.*

ஐயரவர்களை, மற்ற திவான்களும், பிரபுக்களும் அடிக்கடி வரவழைத்து அவரது இனிய சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமடைந்திருக்கி

* இக்கதையின் உண்மை எவ்வாறாயினும், குன்னக்குடி கிருஷ்ணையர் அக்காலத்து வித்துவான்களின் முன் அணியிலிருந்தவர் என்பதை மறுக்க வியலாது. மஹாவைத்தியநாத சிவத்தின் ஸாஹித்யங்களை இப்போது பாடுவோரிலர்; ஆனல் கிருஷ்ணையருடைய அழகிய வர்ணங்கள், இன்னும் வழங்குவன. [ப-ர்]

றார்கள். திருவாங்கூர் மன்னரான, ஆயில்யம் திருநாள் என்பவரும், விஜயநகரத்து மன்னரான ஆனந்த கஜபதி என்பவரும் அவருடைய சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தித்து அவருக்கு வெகுமானங்கள் அனுப்பினார்கள்.

ஐயரவர்கள் திருவையாற்றையே தமது முக்கிய வாசஸ்தானமாகக் கொண்டு வந்தார். அவர் பிடில் சேஷய்யரின் மருமகளான மதுராம்பாள் என்பவளை மணந்து கொண்டார். ஐயரவர்களுக்கு எல்லாச் சம்பத்துக்கள் இருந்தும் புத்திர சம்பத்து ஒன்றுமட்டுமில்லாதது ஒன்றுதான் பெருங்குறையாக இருந்தது. அதற்காக அவர் "ஜாகி" என்ற நாயை வளர்த்து வந்தார். இவர் பிரதிதினமும் பாட ஆரம்பித்தவுடன் அந்த நாய் அவரது மடியில் வந்து படுத்துக்கொண்டு, அவர் பாடுவதைக் கேட்பது வழக்கம். மேலும் அவர் புங்கனூர்ப் பசு ஒன்று வைத்திருந்தார். அதனுடைய இரண்டு கன்றுக் குட்டிகளுக்கும் முறையே லக்ஷ்மி, சரஸ்வதி எனப் பெயரிட்டு அவைகள் படுத்துக்கொள்ள மெத்தை முதலானவைகள் போட்டு, அவைகளை மிகச் செல்வமாக வளர்த்து வந்தார். இறுதியாகத் தனது தமக்கையாரின் பேரனை தற்பொழுது கும்பகோணத்தில் வசிக்கும் மணி என்பவரையே ஸ்வீகார புத்திரனைக் கொண்டார்.

ஐயரவர்களிடம் சங்கீதம் கற்றுக்கொண்டு புகழ் பெற்றவர்கள் பலர். பூச்சி ஸ்ரீனிவாசையங்கார், நாராயணசாமி ஐயர், பொப்பிலி விச்வநாத சாஸ்திரி, மரகானுகுடி அண்ணாசாமி குருசாமி ஐயர், கல்யாணபுரம் சாரநாத ஐயங்கார், பாலக்காடு பரமேச்வர ஐயர், வீணை தனம், கிருஷ்ணசாமிஐயர், பிடில் கிருஷ்ணசாமி ஐயர் முதலியோராவர். ஐயரவர்கள் தனது சிஷ்யர்களிடத்தில் தனியாக அபிமானம் வைத்து அவரவர் சாரீரத்திற்குத் தகுந்ததுபோல் சங்கீதத்தைச் சொல்லித் தருவார். மிகப் பொறுமையுடனும், புரியும்படியாகவும் சொல்லித் தருவார். ஏழைகளின் வீட்டின் கலியாணங்களிலும் மற்ற விசேஷங்களிலும் அவர்கள் வந்து இவரை அழைத்தால் தட்டாமல் சென்று அவர்கள் மனம் திருப்தியாகும்படி தமது கானத்தை வர்ஷித்து தன்னாலானவற்றை அவர்களுக்குச் செய்துவிட்டு வருவார்.

ஐயரவர்கள் சங்கீதத்தைப் பாடுவதில் எவ்வளவு பிரஸித்தி பெற்றிருந்தாரோ அதேபோல் கவனம் செய்வதிலும் பிரஸித்தி பெற்று விளங்கினார். அவர் கவனம் செய்யும் பாட்டுகளும் அவர் உழைத்த ஸாதகத்தின் விளைவாகவும் அவருடைய கம்பீரமான பிருக்காக்களையுடையதாகவுமிருக்கின்றன. அவர் மகான் தியாகய்யர் அவர்கள் செய்திருப்பது போலவே உயர்ந்த முறையில் தானவர்ணங்களையும் கீர்த்தனைகளையும் கவனம் செய்திருக்கிறார். அவருடைய கீர்த்தனைகளில் சில மத்தியமகால நடைகள் பொருந்தியதாகவும், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கீர்த்தனைகளைப் போல அநேக கீர்த்தனைகள் ஆரம்பத்திலேயே சவுக்ககாலமாகவும், சரணங்களில் மத்தியமகாலமாகவும் வெகு அழகாக செய்திருக்கிறார். அவர், அருளினால் செய்த வர்ணங்கள் கீர்த்தனைகள் யாவும் ஸ்ரீவெங்கடேசப் பெருமானுக்கே அர்ப்பணமாக இருப்பதாலும் அந்தக் கீர்த்தனைகள் பரந்தாமனின் அனுக்கிரகம் பெற்றிருப்பதாலும் எப்படி ஸ்ரீ தியாகையருடைய கீர்த்தனைகள் இப்பூவுலகில் என்றுமழியாமல் பலராலும் பாடப்பெற்று இருக்கின்றனவோ அதேமாதிரியே ஐயரவர்களுடைய கீர்த்தனைகளும் எல்லோராலும் பாடப்பெற்று அழியாத செல்வமாக விளங்கி வருகின்றன.

வமிசாவளி.

- பரதம் பஞ்சநத சாஸ்திரிகளின் தமையனார்.
  - விசுவனாத சாஸ்திரிகள்.
    - பரதம் கணபதி சாஸ்திரிகள்.
- அரண்மனை வித்துவான் பரதம் பஞ்சநத சாஸ்திரிகள்.
  - பரதம் வைத்தியனாதையர்.
    - பட்டணம் சுப்பிரமணிய ஐயர்.
  - பரதம் சுந்தர சாஸ்திரி.
    - சங்கீதம் பஞ்சாபகேச சாஸ்திரியார்.
    - பிடில் ராமஸ்வாமி ஐயர்.
  - சிவப்பிரியம்மாள் மீனாக்ஷி.
    - சங்கீதம் கொத்தவாசல் வேங்கடராம ஐயர்.

[ஸ்ரீபட்டணம் சுப்பிரமணிய அய்யர் பொடியைப்பற்றி பாடியது.
திருச்சி. டி. கே. கோவிந்தையர் உதவியது.]

இராகம் : ஸாவேரி. தாளம் : ஆதி.

பல்லவி.

தூமபத்ர தூளி தொரகுனு
ஈ தரித்ர ஊரிலோ
தய தோனிபுடு தேலுபவய்யா

அனுபல்லவி

காமிதார்த்த பலமுலிச்சுனீ
ஓக சிமிடா தூளி
பூமிலோனு ரக்ஷகுடுனு
பிக்ஷகுடுனு விச்வஸிஞ்சே (தூம)

சரணம்.

மேப்புகைன போகட நின்னு
கோனுட ஸம்ப்ரதாயமே
அப்புதீஸி வேனுக நின்னு
புச்சு கோண்ட ந்யாயமே
நிப்பு நீள்ளு காலி, வலேனு
நீவு ப்ராணதாரமே
கோப்பவரத வேங்கடேச
ஸுப்ரஸாத ஸாரமே (தூம)

மொழி பெயர்ப்பு :

பல்லவி : பொடி இத்தரித்திர ஊரில் அகப்படுமோ? தயை செய்து இப்போது சொல்லையா.

அனுபல்லவி : காமிதார்த்த பலத்தைத் தருவதால் அரசனும் ஆண்டியும் போற்றும் ஒரு சிமிட்டா (பொடி)

சரணம் : (வெறுமனே) உன்னை வாங்கி வைப்பதும் ஸம்பிரதாயமே. கடனாக வாங்குவதும் நியாயமே. அப்பு தேயு வாயுவைப்போல் நீயும் பிராணதாரமே! வரத வெங்கடேச நற்பிரசாதமே! (பொடி)

(தூமம்—புகை, பத்ரம்—இலை)

ஸ்ரீ அரவிந்தரது கவிதைகள்.

(பி. கோதண்டராமன்.)

[இவ்விமர்சனம் ஆசிரியரால் எழுதப்பட்டு வெளிவர இருக்கும் "ஸ்ரீ அரவிந்தரும் அவரது யோகமும்" *என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டு இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது—பத்திராதிபர்.]

ஸ்ரீ அரவிந்தர் 1893-ம் வருஷம் இங்கிலாந்தை விட்டு பரோடா வந்து சேர்ந்தார். அவர் பரோடாவுக்கு வந்த சில வருஷங்களுக்குள்ளாகவே வடமொழியில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி ராமாயண மஹாபாரதங்களிலிருந்து சில ரஸமான பாகங்களைப் பொறுக்கியெடுத்து ஆங்கிலத்தில் கவி புனைந்தார். அது சமயம் ஒரிஸ்ஸா கமிஷனராயும், இந்திய சரித்திர கலைஞானங்களில் மிகத் தேர்ச்சிபெற்று ஆங்கில மொழியில் பல நூல்கள் எழுதி இந்திய, ஆங்கிலேய, அறிஞர் பலராலும் புகழப்பட்ட ராமேச சந்திர தத்தர் 1899-ல் பரோடா மகாராஜாவின் அழைப்புக்கிணங்கி சமஸ்தானத்திற் விஜயம் செய்திருந்தபோது, ஸ்ரீ அரவிந்தரைச் சந்தித்து, அவர் ராமாயணம் மஹாபாரதத்தினின்று மொழிபெயர்த்தெழுதின கவிதைகளைக் கண்ணுற்று மிகவும் சிலாகித்துப்பேசினார். துரதிருஷ்டவசமாக இம்மொழிபெயர்ப்புகள் வீடு விட்டு வீடு மாறுகையில் எங்கேயோ தவறிவிட்டன.

ஸ்ரீ அரவிந்தர் இங்கிலாந்திலிருந்தபோது 18 வயது முதல் 20 வயது வரையில் (1890-92) ஆங்கில மொழியில் பாடிய கவிதைகள் 1895-ல் பரோடாவில் முதன்முதலாக அச்சடிக்கப்பட்டு தனிப்பட வழங்கப்பட்டன. நாட்டுப் பற்றை எழுப்பும் அயர்லாந்தைக் குறித்த பாடலொன்றும் இன்னும் சிலவும் இவைகளுடன் சேர்க்கப்பட்டு பல வருஷங்களுக்கும் பின் "மிர்தில்லா (கதம்ப மலர்) கீதங்கள்" என்னும் பெயருடன் புத்தக வடிவமாக வெளிவந்தன. ஆங்கிலக் கவிதையில் அமைந்து பொருந்திய கிரேக்க கவிதையின் லட்சணங்களெல்லாம் இக் கவிதைகளில் அமைந்திருந்தனவாயினும் ஸ்ரீ அரவிந்தர் அதோடு திருப்தியடையவில்லை. கிரேக்க கவிதை கருத்தளவில் அமைதியையும் தெளிவையும் கண்டது. ஆனால் அவைகளை உருவப்படுத்தி உலக வாழ்வில் செலுத்தி அனுபவிப்பதற்குரிய வழி அங்கு காணப்படவில்லை. கிரேக்க கலையும் தத்துவ ஞானமும் அழகையும் அறநெறியையும் குறியாகக் கொண்டனவே யொழிய ஆன்ம நிறைவை நோக்கிச் செல்லவில்லை. ஆகவே அவைகளுக்கு உள்ளுயிரில்லாதது ஒரு குறையாக விருந்தது. ஸ்ரீ அரவிந்தர் கவியழகை மட்டுமல்ல வாழ்க்கையையும் பேரழகனாகிய பரமனின் மங்கா அனலில் தோய்த்தெடுக்க விரும்பினார். அவரது வாணி வெறும் கலைவாணியாக மட்டும் இருப்பதை அவர் விரும்பவில்லை. அவளது சொற்களை உலகங்களாகப் பரிணமிக்கும் பூரண ஆற்றலையுடையனவாகவும், அவளது அழகு வாய்ந்த சிருஷ்டிகளைப் பிரபஞ்சத்தினின்று ரகசியமாக ஊற்றெடுத்துப்பாயும் திறலுடையனவாகவும் ஆக்க எண்ணினார். சுருங்கக் கூறின் கவிதையை வாழ்க்கையில் அமைத்து வாழ விரும்பினார். ஆகவே, சாதாரண வாழ்க்கையின் இன்பதுன்பங்கள் நம்பிக்கைகளில் நிரந்தரமாக இருக்கக்கூடிய பற்றுக்கோட்டைக் கண்டுபிடிக்க ஏங்கினார். தம்முள்ளே குமுறிக் கொண்டிருந்த ஆதர்சமானது மொழியில் விடுதலையடையாமலிருப்பதைக் குறித்து வருந்தினார். இந்த ஏக்கத்தை 1895ல் எழுதிய "விடை பெறல்" என்னுமோர் கவிதையில் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ அரவிந்தர் பரோடாவிலிருக்கையில் பல கவிதைகளையும் காளிதாசர், பர்த்ருஹரி முதலியோர் நூல்களிலிருந்து சில மொழி பெயர்ப்புகளையும் செய்தார். இக்கவிதைகளிற் சில பின்னர் வங்காளத்தில் "கர்மயோகி" பத்திரிகையில் வெளியாயின. ஆனால் புதுவை

(377ம் பக்கம் பார்க்க)

*"ஸ்ரீ அரவிந்தரும் அவரது யோகமும்" ஆசிரியர் பி. கோதண்டராமன். பிரசுரகர்த்தர்கள்: பி. ஜி. பால் அண்டு கோ, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, மதராஸ். விலை அணா 9.

புதுக் கற்பனைகள்.

சும்மாவிருத்தலின் சுகம்.

(வேர்க்கல்லி எழுதியது.)

பாஸ்வெல்: சுவாமி ஒரு வேலையுமில்லாதிருந்தால் அதுவுந்தான் அலுத்துப் போகிறது.

ஜான்ஸன்: அதன் காரணத்தை விசாரித்தீரா? அவரவர் தத்தம் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பதனால் நமக்குப் பேச்சுத் துணையில்லாமற்போவதுதான் காரணம். எல்லோருமே வேலையற்றிருந்தால் ஒருவரோடொருவர் சலியாது பேச்சுக் கொடுத்துக் கொடுத்துக்கொண்டு பொழுது போக்கலாம்.

ஒவ்வொருவனும் ஊதிய வருவாயுள்ளவோர் தொழில் துறையிலிறங்கி ஓரளவு ஊக்கத்துடன் இடைவிடாது உழைத்து வாராவிடில், அவனை விசாரியாமலே அவன்மீது நாகரிகத்தை அவமதித்த குற்றஞ் சாட்டக்கூடிய இக்காலத்தில், போதியது கிட்டியும் திருப்தியடைந்து நிம்மதியாய்ப் பிறர் ஆட்டத்தை வேடிக்கை பார்த்துச் சற்றுச் சும்மா நிற்போமென்றும் எதிர்க்கக்ஷிவாதம் "காட்டுவாத"மென்றும் "வாட்டுக்கிறு" க்கென்றும் தள்ளுபட இடமுண்டு. ஆயினும் அப்படித் தள்ளிவிடுவது அநியாயமே. 'சும்மாவிருத்தலென்பது ஒன்றுமே செய்யாதிருத்தலன்று; பின்னர் தற்கால நாகரீகத்தின் அதிகாரிகளது கணக்கில் பதிவாகாத பலவித வேலை செய்வதே' யாதலின், உழைப்பாளிக் கக்ஷியின் வாக்குமூலத்தைக் கேட்டு வாங்குவதுபோல், வேலையற்றவர் கொடுக்கக் காத்திருக்கும் வாக்குமூலத்தையும் பதிவு செய்து கொள்வதுதான் தகுதியாகும். நாடெங்கும் பறைசாற்றப் பெற்ற இடர் தாண்டியோடும் அரையணுப் பந்தயத்திற்குத் தங்கள் பெயரைப் பதிவு கொடாமல் சிலர் ஒதுங்கி நிற்பது, அதில் பெயர் பதிவு கொடுத்திருப்பவரது ஊக்கத்தைக் குறைப்பதோடு அவரை அவமதித்தலும் ஆகக்கூடும். உலகில் மதிப்புடையோரெல்லாம் தவறாமல் இப்பந்தயத்திற் சேர்ந்தோடுவதைத் தினந்தோறும் நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்டவரெல்லாம் வியர்த்து விழுந்தோடிவரும் சாலையோரத்து நிழலிலும் பசும் புற்றரையிலும் இரண்டொருவர் படுத்துக்கொண்டு இளநீரருந்தி வெள்ளரிப் பிஞ்சு தின்றுகொண்டு அங்கவஸ்திரத்தைத் தலையிற் குஞ்சலங் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு காலை நீட்டித் தலையைக் கையிலேந்திச் சாய்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தலென்பது, பந்தயமோடுகிறவர்க்குக் கோபமூட்டுமென்பது வெள்ளிடை. ஊசி

வழி நூல்செல்ல வரங்கேட்ட ஆழ்வார் எம்பெருமானை யுளங்தைக்க அவமதித்தாரன்றோ? சித்தூர்க் கோட்டையை வெகுநாள் முற்றுகையிட்டுப் பிடித்தபின் ஊருக்குள் நுழைந்ததும், அங்கு ஈ காக்கை கூடவின்றியெங்கும் வெட்டவெளியாயிருக்கக் கண்ட அலாவுதீனுக்கும் அவன் படைகளுக்கும் பெருமையேது? நெடுநேரம் முயன்று மலையேறி எல்லோரும் பார்க்க உச்சியில் நிற்பது வெகு கடினமே; ஆயினும் இவ்வளவுஞ் செய்தவனை இவன் யாரென்று கூட ஒருவரும் விசாரியாதிருப்பது அதினுங் கொடியது. ஆதலால் சாஸ்திரம் பயின்றோர் சாஸ்திரப் பயிற்சியற்றவரையும், கற்றோர் மற்றோரையுங் கடைக்கணித்து ஒதுங்கிச்செய்வதியல்பே. அவ்வாறே, எல்லாத் தொழிலாளரும் ஒன்று சேர்ந்து யாதொரு தொழிலுக்கு முதவாத வீணனை ஏளனஞ்செய்வது வியப்பன்று.

வேலையற்றார் கக்ஷியை எடுத்து வாதிப்பதிலுள்ள சிரமம் இதுமட்டுமல்ல. எதிர்க்கக்ஷியை எடுத்துப் பேசினதனாலேயே இவன் உழைப்பின் பெருமையறியாத மூடன் என்றெண்ணி விடுகிறார்கள். கங்கையின் பெருமையை யெடுத்துரைத்த மாத்திரத்திலேயே இவன் காவேரியின் கரையையுங் கண்டிரான் என்றெண்ணுவது வீண் அபவாதம். உழைப்பின் பெருமை உலகறிந்த விஷயம்; அதன் குற்றம் அவ்வளவு பிரசித்தமல்லவாதலின் அதையே இங்கெடுத்துரைக்கப் புகுந்தோம்.

பாலியத்தில் எல்லோரும் வெகுவாய் வேலையற்றுத் திரிய வேண்டியதவசியமே. ஏதோ ஆயிரத்திலொருவன் யாமுனசாரியன் நாராயண தீக்ஷிதன்போன்று பள்ளியிற்பெற்ற பெயரை ஆயுள் முழுவதும் காப்பாற்றி வந்திருக்கிறானேயொழிய, வெகுவாய்ப் பள்ளியிற் பரிசுபெற்ற மாணவரெல்லாம் தங்கள் ஆவியெல்லாம் அப்பரிசுக்கே விலையாகக் கொடுத்துவிட்டமையின் உலகில் ஒரு வேலைக்கும் திராணியற்று நிற்பதை நாம் காண்கிறோம். ஜான்ஸன் மாணவனாயிருக்கையில் அவனைப் பார்த்து 'பிள்ளாய், இப்பொழுதே புத்தகங்களைப் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்— வயதுசென்ற பிறகு புத்தகங்களைக் கவனித்துப்பார்ப்பது வெகுசங்கடம்' என்று சொன்ன பெரியவர் 'பிள்ளாய், இப்பொழுதே மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்க்கப் பழகிக் கொள், வயதுசென்ற பிறகு மூக்குக்கண்ணாடி போட்டுப்பார்ப்பது சங்கடம்; இப்பொழுதே தடியூன்றி நடந்து பழக்கிக்கொள்; வயது சென்றபிறகு தடியூன்றி நடப்பது சங்கடம்' என்று சொல்லியிருப்பினும் அவரது மதியின் பெருமை மதிப்பிற் குன்றாது. புத்தகங்கள் அனுபவங் கண்டவருக்கே உதவுமாதலின், அதில்லார்க்குக் குருடனுக்கிட்ட கண்ணாடியாகும் யதார்த்த வாழ்க்கையில், நம்மருகில் நிகழும் அரும்பெருஞ் செயலொன்றையுங் கவனியாது, திருவிழாக்கூட்டத்தில் கண்ணாடிப் படத்தில் காசிதேசம் பார்த்து நிற்கும் சிறுவரைப்போல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கும் புத்தகங்களைப் பார்த்துப் பொழுது போக்குவது என்ன மடத்தனம்? ஓயாது படித்துக் கொண்டே யிருப்பவனுக்கு ஸ்வயமாக யோசிக்க நேரமேது? இவன் எப்பொழுது புத்தகம் எழுதுகிறது? அதையார் படிக்கிறது? நூல்களை ஆக்கியோரெல்லாம் மேதாவிகளே யென்றால் படிப்போர் வேறினத்தாரென்பது வெளிப்படையன்றோ?

நாம் ஒவ்வொருவனும் பள்ளிக்கூடத்திற் படித்த நாட்களை நினைத்துப் பார்க்கையில் நம் இஷ்டம்போல் திரிந்து விளையாடிய நேரங்களை விசேஷமாய் நொந்து கொள்ள இடமிராது. ஆனால் கனவிற்கும் நனவிற்குமிடையில் உபாத்தியாயர் பிரசங்கத்தைத் தாலாட்டாகக் கருதிய சில நேரங்களே வீணென விளங்கும். நானும் பள்ளியிற் சிற்சில விஷயங்களைக் கற்றேனென்பதை மறுக்கவியலாது. தூங்கும் பம்பரம் நிச்சல வேகத்திற்கு உதாரணமென்றும், இந்திரனது பத்தினி இந்திராணியாவதுபோல் முருகனது பத்தினி முருகாணியாகாதென்றும், பாக்கு நான்காம் வேற்றுமைபோல் தோற்றினாலும் முதல் வேற்றுமைதானென்றும், பூமியினுடைய நிழல் சந்திரன்மேல் பட்டுச் சந்திர கிரஹணமாவதுபோல் சந்திரனுடைய நிழல் சூரியன் மேல்பட்டு சூரிய கிரஹணமாவதில்லை என்றும் நான் கற்றவைகளை இன்னும் மறந்துவிடவில்லை. ஆனால் நான் தெருவிலும் தோப்பி

னும் ஒளிந்து திரிகையிற்கற்ற சிற்சில விஷயங்கள் உதவுவதுபோல் மேற்சொன்ன பள்ளிப் படிப்பு உதவியதில்லை. பள்ளிக்கணக்குப் புள்ளிக்குதவாது. "வாழ்க்கையின் விசித்ரவினோதங்கள்" என்னும் படிப்பில் கரைகண்ட பலர் எக்காலத்தும் மேற்கூறிய பெரிய கல்லூரிகளினின்றும் யாதொரு பிருதுகளுமின்றி கிளம்பிச் சென்று தத்தம் வேலைகளை ஒழுங்காய்க் கவனித்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு ஔவையும் காளமேகனும் காளிதாஸனும் சிவாஜியும் ஹைதர் அலியும் போன்ற பல சான்றுகள் உலகெங்குமுண்டு. சதங்கையணிந்த சிறுமிபோலும் சிலுசிலுத்தோடும் அருவிக் கரையில் பறவை கூடிப்பாடும் மரத்தடியில் ஏகாந்தமாம் உட்கார்ந்து 'சீட்டி' யடித்துக் கொண்டிருக்கும் சிறுவனுக்குப் புதிய உலகும் புதிய எண்ணங்களும் தானே விளங்கும். இஃது கல்வியன்றெனின் பின்னெதுவாம்? இப்படிப்பட்ட பையனொருவனுக்கும் லௌகிக ஸமர்த்தரொருவருக்கும் பின்வரும் ஸம்பாஷணை நடந்திருக்கலாம்:

"என்னடா, பயலே, இங்கு செய்துகொண்டிருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை, ஐயா, சும்மா தான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன்?"

'ஏனடா, இது பள்ளிக்கூடத்தில் பாடம் கேட்கவேண்டிய நேரமன்றோ? கல்வியைத்தேடி வைத்துக்கொள்ள வேண்டிய காலமன்றோ? புஸ்தகங்களைக் கவனித்துப் படிக்கவேண்டாமா?',

"இதுவும் ஒருவிதக் கல்விதான் என்பதைத் தாங்களும் ஒப்புக்கொள்வீர்களென்றே நம்புகிறேன்."

"கல்வியா! என்ன கல்வி? கணிதமா?"

"அல்ல". "மீமாம்ஸையா?"

"அதுவுமல்ல". "பாஷையா?"

"பாஷையல்லவே". "தொழிலா?"

"தொழிலுமல்ல". "பின்னர் என்னதான் அது?"

"வாழ்க்கை யென்னும் புதிய ஊருக்கு நான் சீக்கிரத்தில் புறப்பட வேண்டியிருப்பதால் வழியில் என்ன ஊர்களுண்டு, எங்கெங்கு முட்களுண்டு, எந்த மாதிரி பாதரக்ஷை வழிக்குதவும் என்று கவனித்து வருகிறேன். மேலும் இந்த தீர்த்தக் கரையில் நான் ஸ்வஸ்தசித்தனைச் சாந்திபாடம் கேட்டு வருகிறேன்."

இதைக் கேட்ட ஸமர்த்தர் வெகு கோபங்கொண்டு உக்கிரமான பார்வையுடன் தடியை யோங்கி, "என்ன சொல்லுகிறாய்? பயலே! இதுதானா கல்வி! உன்னைப் போன்ற போக்கிரிகளுக்கெல்லாம் கசையடி கொடுக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சண்டைக் கோழி சிறகையடித்துக் கொள்வதுபோல் கையை யுதறி உடையைச் சிலிர்த்துக்கொண்டு போய்ச் சேருவார்.

உலகத்தில் பெரும்பான்மையோர் ஸமர்த்தர் சொல்வது ஸரியென்றே சொல்வார்கள். சாஸ்திர கிரந்தங்களில் பதிவு செய்யப்படாத விஷயமொன்றும் உண்மையல்ல. அது வம்பர் கதை என்பது இவர் அபிப்பிராயம். ஆராய்ச்சி என்பது பண்டிதர் பெயரிட்டிருக்கும் வகைகளிலொன்றாயிருந்தால்தான் ஆராய்ச்சியாகும்; இல்லாவிடில் அது வீண் விளையாட்டென்பர். பாண்டித்தியமென்னும் பாழுங்கிணற்றில் தோண்டி எடுத்தாவது, தூரதிருஷ்டிக் கண்ணாடியின் அப்புறத்துக் கடைசிக் கண்ணாடியிலாவது கண்டறிந்ததுதான் வித்தையெனத் தகுமென்பது சாதாரண அபிப்பிராயம். இருதயமெனுந்தாளில் இரத்தமெனும் மைகொண்டெழுதப்பெற்ற அனுபவமெனும் மகா கிரந்தத்தில், ஒவ்வொருவனும்அவகாசங்கிடைத்தமட்டில், இவ்வாழ்க்கைப் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறுமுன் சிற்சில அத்தியாயங்களை மனப்பாடம் செய்ய நேருகிறதென்கிற உண்மை எல்லோருக்கும் விளங்குவதில்லை. இந்த கிரந்தத்தில் 20வது அத்தியாயமாகிற ரஸாயன பாடம் 32வது அத்தியாயமாகிற சட்டி கழுவும் பாடத்தைவிட எவ்வகையினும் சிறந்ததெனக் கருத இடமேயில்லை. பார்க்கப்புகின், கண் காதுகளுடன் புத்தியும் கூர்மையாயுள்ள ஒருவன், குளிர்ந்த பார்வையும் மலர்ந்த முகமுமாயிருந்து எங்குங் கற்றுக்

கொள்ளக்கூடிய கல்வியானது இராப்பகலாய் விளக்கெரித்துக் கண் குவிந்து கற்குங்கல்விக்கு ஒருநாளும் குறைவுபடாது. பல்லுடைபடும் பதங்களை உருவேற்றிப் பரீக்ஷைக்கு மறுநாள் பாதிக்குமேல் மறந்து நிற்பவனிலும் ஊர் சுற்றித் திரியும் ஓடுகாலி இன்னும் அதிக உபயோகமான பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிறான். அவையாவன, மாடு கறத்தல், புல்லாங்குழலூதுதல், சமைத்தல், எல்லாத்தரத்தாரோடும் சமயோசிதமாய்ப் பழகி சம்பாஷித்தல் முதலியவையாம். கற்றறிமூடர் சிலர் அரசனிடம் ஸம்மானம் பெற்றும் பட்டினி கிடந்த கதை யாருமறிந்ததே. ஏராளமாய்ப் பொருள் சேர்த்தவரும் ஸபையில் மரியாதையாய் நடந்து கொள்ளத் தெரியாதிருத்தலைப் பலர் கவனித்திருக்கலாம். ஊர்சுற்றிப் பொழுதுபோக்கும் பையனோவெனில், அரோகதிடகாத்திரனாய் எங்கும் சுற்றித் திரிந்து திறந்த வெளிகளில் சுத்தமான காற்றை உட்கொண்டு ஸந்தோஷமும் உத்ஸாஹமும் முகத்தில் ததும்ப நிற்கிறான். புத்தகங்களில் மூலைமுடக்குகளில் பதிந்து கிடக்கும் ரஹஸ்யங்கள் அவனுக்குத் தெரியாதென்றாலும் காரியத்துக்கு உதவக்கூடியதெல்லாம் அவனுக்கு நன்றாய்த் தெரியும். வையாகரணன் தான் கற்ற சூத்திரங்களிற் சிலவற்றையும் காசுக்கடைக்காரன் தான் தேடிவைத்திருக்கும் தங்க நாணயங்களிற் சிலவற்றையும் கொடுத்தாவது இந்த வீணன் கற்றிருக்கும் வாழ்நாளைப் பயன்படுத்தும் கல்வி நுட்பங்களிற் சிலவற்றைக் கற்க முயல்வது முறைத்தவறு ஆகாதென்போம்.

மேலும் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலையே ஜன்ம ஸாபல்யமாகக் கருதி (சிறுவர் தத்தம் பொம்மைகளைப் போல்) கொண்டாடுவதைப் பலவிடங்களிற் கண்ணுற்றிருக்கும் இவ்வீணன் தனக்குத் தெரிந்ததையே பெரிதாகப் பிடிவாதத்துடன் ஸபையருவருக்கப் பேசத்துணியான். உலகம் பலவிதம் என்பதை நன்குணர்ந்து பிறரது அபிப்பிராயபேதங்களுக்கு இடங்கொடுத்து சச்சரவின்றி நடந்து கொள்வான். விசேஷ சூக்ஷ்ம தத்துவங்களை யறிந்திரானாயினும், பெரும்புளுகர் வலையிற் சிக்கான். வித்வான்களும் அவர் மதங்களும், யுத்தங்களும் பீரங்கிகளும், தலைமுறை தலைமுறையாய்ப் புதிது புதிதாய்த் தோன்றி மறையுநிழல்போலச் செல்லா நிற்க, அவற்றின் மறைவிலும், அவை தோன்று முன்னரும், அவை மறைந்த பின்னரும் என்றும் நடைபெற்றுவரும் மனிதனின் தினசரி வாழ்வும் அதன் சுகதுக்கங்களும், விளையாட்டும் சிரிப்பும், ஸ்நேகமும் வைரமும் மாறாது எப்பொழுதும் ஒரே ரீதியாய்த் தோன்றுவதை அகக்கண்ணாற் கண்டு சாந்தமுறுவான்.

மும்மரமாய் வேலை செய்வது பலத்திற்காவது ஆரோக்கியத்திற்காவது வழியுமல்ல அறிகுறியுமல்ல; அது ஜீவகலையேயல்ல. வாடகைக்குச் சவாரிசெய்து வண்டியை விட்டிறங்கிய ஒருவர் ‘குதிரையைச் சற்று அவிழ்த்துமேயவிடு’ என்று வண்டிக்காரனுக்குச் சொன்னார். ‘கூலியைக் கொடுங்கள், நான் வீட்டுக்குட்போகிறேன். அது உங்களுக்குத் தெரியாது’ என்றான் ‘என்னடா தெரியாது’ என்று கேட்டதற்கு ‘இரண்டு ஏர்க்கால்களுக்கிடையே கட்டியிருப்பதனால்தான் குதிரை நிற்கிறது; அவிழ்த்து விட்டால் விழுந்துவிடும்!’ என்றானாம். அதுபோலத்தான் அதிக மும்மரமாய் வேலை செய்கிறவர்களும், கச்சேரி மூலையிலிருந்து அவிழ்த்து விட்டால் கீழே விழுந்து விடுவார்கள். எங்கே விழுந்துவிடப் போகிறோமோ என்கிற பயத்தினால்தான் அவ்வளவு மும்மரமாய் வேலை செய்கிறார்கள். உண்மையில் அவர்களுக்கு வேறொன்றுந் தெரியாது, தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆவலுங்கிடையாது. ஆண்டவனளித்திருக்கும் தநுகரணபுவனங்களை அதுவே பயனாகக் கருதி ஏற்றகருமங்களிற் செலுத்தி ஆனந்திக்கும் வகை இவரறியார். வாழ்க்கையின் பயன் வாழ்தலேயன்றித் தொழிலல்ல, துட்டல்லவென்பதை இவர் உணர்ந்திலர்; ஏதாவது குக்கிராமத்திலகப்பட்டுக் கொண்டு விட்டாலும் வெகுதூரம் புகைவண்டியிற் பிரயாணம் செய்ய நேர்ந்தாலும் இவர் பொழுதுபோகாது விழிப்பர்; எப்போது நாம் வீடுபோய்ச் சேருவோம், எப்போது கச்சேரிக் கட்டடத்துக் கட்டு மூலையைப் பார்ப்போம் என்றேங்கிப் போவார். வயிற்றுப்பாடு ஒன்று மட்டும் இல்லாவிட்டால் இவர் எப்படித்தான் உயிர்

தரிப்பாரோ நாமறியோம். கூலிக்கு உழையா நாளெல்லாம் இவர்க்குப் பிறவாநாளே. தொழிற்சாலைக்குப் போகாத நேரங்களில் பிரளயத்தில் உலகமே அற்று சூன்யமானது போல் மயங்கி வெறித்து விழிப்பர். ஆனால் இச்சமயங்களில் யாராவது வந்து ஒரு கிரய சாஸனத்தின் வாசகத்தில் குற்றங் குறை யுண்டாவென்று படித்துப் பார்க்கச் சொன்னாலும், பருத்திக் கொட்டை விலையேறி வருகிற தென்று காதில் ஜபித்தாலும் போனவுயிர் வந்தவர்போலும் கரையில் கிடந்த மீனை நீரி லிட்டதுபோலும் பெருமூச்செறிவர். அவ் வத்தொழிலில் இவர் முற்றிலும் ஸமர்த் தர் என்பதை யாரும் மறுக்கவியலாது. பள் ளிக்கூடத்தில் படிக்கு நாளிலெல்லாம் பரிசு பெறும் மார்க்கத்தைத் தவிர வேறொன்றை யுங் கவனித்த குற்றத்தை இவர் செய்திலர். தங்கள் ஜீவனுக்கேற்பட்டிருக்கும் கர்மபந்தங் கள் போதாதெனக் கருதியவர்போல் அதனை ஒய்ச்சலொழிவில்லாத வேலையிட்டுக் கசக்கி ஒடித்திருப்பவர் இவராதலின் இப்பொழுது வயதும் 40 ஆனபிறகு புகைவண்டிக்குக் காத் திருக்கையில் மருந்துக்கேனுமோரெண்ணங் கூடவில்லாதபடி சூன்யமான மனதும் பார்வை யுமுடையராய் நிற்பர். 10-வயதுப் பையனா யிருக்கையில் இச்சமயங்களில் வண்டி வண்டி யாய் நுழைந்து பார்த்திருப்பார். 20 வயதா யிருக்கையில் குறுக்கிடும் பெண்களை வெறிக் கப் பார்த்திருப்பர். இப்பொழுதோ தணல் புகையெல்லாமவிந்து சாம்பரே எஞ்சி நிற் பது. இவரை வாழ்க்கையின் பயனடைந்தவர் கணக்கிற் சேர்க்க என் மனம் துணியவில்லை.

போகட்டும், இவ்வாறு, மும்முரமாய் வேலை செய்பவரெல்லாம் தங்களுக்கு மட்டுந்தானே தீங்கிழைத்துக்கொள்ளுகிறார்கள், அதில் பிறர் க்கென்ன நஷ்டமென்பதற்குமில்லை. இவர் வீட்டுப் பெண்டு பிள்ளைகளும் இவரது இஷ்ட மித்ர பந்துக்களும் இவருடன் வண்டியிலுட் கார்ந்து பிரயாணம் செய்பவருங்கூட இவரால் துன்புறுவர். தன் தொழிலென்று தான் சொல்லிக்கொள்ளுமொன்றை மட்டுமே ஒரு வன் ஓயாது கவனித்து வருதலென்பது, இதி லும் முக்கியமான அநேக காரியங்களை அவன் கவனியாது கைவிட்டால் தான் சாத்தியமா கும். ஆயினும் தொழிலொன்றே மற்றெதினும் மேலான காரியமென்று அவ்வளவெளிதில் சித்தாந்தஞ் செய்யவியலாது. இவ்வாழ்க்கை யெனும் நாடகத்தில் சிறந்த அறிவுடனும் தூய வொழுக்கத்துடனும் நின்று எங்கும் நன் மையே பயக்கும் பாத்திரர்களெல்லாம் பார்க் கப்புகின் கூலியின்றிச் சும்மா வேஷம் தரித்து ஆடிவரும் வீணரென வழங்கப் படுபவரே என் பது விளங்கும். ஏனெனில் இந்நாடகச் சாலை யில் அரசர்களும் வீரர்களும் ஸ்திரீ ரத்னங் களும் பாடகர்களும் மட்டுமேயின்றிக் கை தட்டி 'சபாஷ்' சொல்லி உற்சாகமூட்டும் வீணர்களும் தேவையே. நம் பொருளையும் உயிரையும் பாதுகாத்துக் கணப்பொழுதில் நம்மை வேண்டியவிடங்களுக்கெல்லாம் நட த்திச் செல்லும் ஸாரதிகளும் காவலரும் வழக் காளர்களும் கணக்கர்களும் உலகில் தேவை யென்பது அறிந்ததே. ஆயினும் காணும்போ தெல்லாம் நம்மை அக மகிழ்வித்து முக மலரச் செய்தும், பலர் கூடியவிடத்து எல்லோருக் கும் பரஸ்பர விசுவாசத்தையும் விளைவிக்கும் வேறு சிலர் கைம்மாறின்றிச் செய்யும் நன்றி யை நாம் மறந்துவிடலாமா? தனவிராமனில்லா விட்டால் உலகம் கவிழ்ந்துவிடாதென்பது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் காலகண்ட நக்ஷத்ரய்யர்களைச் செலவுக்கு வேண்டுமானா லும் கொடுத்து வழியனுப்பிவிட உலகம் எப் பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறது. பிறர் வருந்தி நமக்களிப்பதே செய்நன்றியாகுமெ னக் கருதுபவர் பலருளர். ஆனால் அவ்வாறு கருதுவது மூர்க்கத்தனம். ஒரு நண்பன் நாலைந்து ஏடு அன்பொழுகும் கடிதமெழுதிய விடத்தும், அல்லது ஒருவன் ஒரு நாழிகை நேரத்துக்கு நம்மறிவையும் ஆநந்தத்தையும் வளர்க்கும் கட்டுரை வரைந்தவிடத்தும், அவை மைகொண்டெழுதப்பட்டனவேயன்றி அவ னது ரத்தத்தில் தோய்த்து எழு தப்படவில்லையாதலின், அவை செய்நன்றியா காவென மறுப்பவர் அரக்கரேயாவர். பிறர் நோவதே அவர் நன்றி செய்தற்கின்றியமை யாத அறிகுறியோ? செய்பவர் ஏற்பவர் இரு திறத்தாரும் களிப்புறின் அது நன்றியா காதோ ?

இவ்வாறு நோக்குமிடத்துக் கடமையினு மின்பமே மேலெனலாம். இன்பம் இருவரை யும் களிப்புறுத்தும். ஆனால் பிறர் தம் கட மையையுணர்ந்து வருந்தியிழைக்கும் நன்றியை ரஸிகர் ஏற்றுக்கொள்ளக் கூசுவர். நித்தியதிருப் தனுய் நித்தியாநந்தத்தில் நிலைத்து நிற்பது எல் லாவற்றினும் மேலான முதற் கடமையென் பதைப் பலர் உணர்ந்திலர். இக்கடமையைச் சாதித்தவர் தாம் செல்லுமிடத்தெல்லாம் யாருக்கு என்ன செய்தோம், என்ன கொடுத் தோமென்றறியாமலே ஆநந்த மழை பொழி யுங் கார்முகிலாவர். சந்திரன் ஆகாசவீதியிற் செல்லுகையில் பூமியில் எந்தக் குட்டைகளி லும் குடிசைகளிலும் எத்தனை குமுதங்களுக் கும் குழந்தைகளுக்கும் முகமலர்ச்சியெழுவித் தோமென்றுணர்வானு? தெருவில் கோலிக் குண்டைத் துரத்தி விளையாடிக்கொண்டிருந்த வொரு பையனது முகமகிழ்ச்சியைக் கண்டு தன்னை வாட்டிவந்த கவலைகளை க்ஷணகாலம் மறக்க நேர்ந்தவொருவர் அப்பையனைக் கூவி அவன் கையில் நாலணுவைக் கொடுத்து "ஸந் தோஷமாயிருப்பதனுல் சில சமயங்களில் கிடைக்கும் லாபமிதுதான்" என்று சொன் ஞர். சற்றுமுன் சந்தோஷப்பட்டவனுகமட் டும் தோற்றிய வச் சிறுவன் இப்பொழுது பிர மித்தவனுயுந் தோற்றவேண்டியதாயிற்று. என்னைக் கேட்டால், அழுகிற குழந்தைகளுக் குக் கொடுப்பதைவிட சிரிக்கிற குழந்தைகளுக் கே கொடுக்கலாமென்பேன். நாடகசாலையல் லாத விடங்களில் கண்ணீருதிர்ப்பவருக்குக் காசு கொடுக்க எனக்கிஷ்டமில்லை. ஆனால் மற் ஞெரு சரக்கில் வியாபாரஞ் செய்வதாயிருந் தால், எங்கும் எப்பொழுதும் எவ்வளவுக்கும் சித்தமாயிருக்கிறேன். சிரித்த முகத்தவர் கிடைத்தால் புதையல் கிடைத்ததினும் மேலா கக் கருதுவேன். அவர் நுழைந்த வீட்டுக் குள் நாற்புறமும் ஆநந்தம் அள்ளிவீசும் மற்று மொரு விளக்கேற்றியதாகும். நூலும் வஸ்தி ரமும் ஒன்ரு வேருவெனுங் கேள்விக்கு இவர் விடையளிக்க மாட்டுவாராவென்று நாம் விசா ரிப்பதனுவசியம். ஏனெனில் அதினும் கடின மானவொரு கேள்விக்கே இவர் விடையளித்தி ருக்கின்றனர். வாழ்க்கை வாழத்தக்கதே என்னும் பெரிய சித்தாந்தத்தைப் பிரத்யக்ஷ மாய் நிரூபித்திருக்கின்றனர். ஆகக்கூடி, ஒரு வனுக்குச் சும்மாயிராவிடில் சுகமில்லையென்று தோற்றினால் அவன் சும்மாயிருந்தே தீரவேண் டும்; யார் என்ன சொன்னபோதிலும் சரி, நினைத்தபோதிலும் சரி, பசியும் வறுமையும் உலகிலுள்ள வரையில் இப்போதனை உலகத் தைக் கவிழ்த்துவிடும் என்று பயப்பட இட மில்லை.

கடுமையாய் உழைப்பவனொருவனைச் சற் றுக் கவனிப்போம். அவன் பரபரப்பை விதைக்கிறான், அஜீர்ணத்தை அறுக்கிறான். வெகு வேலையை வட்டிக்குவிட்டு சரீரத்திலும் மனத்திலும் ஒழுங்கின்மையை வாங்கிக் கொள்ளுகிறான். அவனால் நாலுபேருடன் கலகலப்பாய்ப் பழகிப் பேசிக்கொண்டிருக்க முடியாது. ஆதலால் அவன் வீட்டிற்குள் கதவைச் சாத்திக்கொண்டு ஏதாவது படித்துக் கொண்டாவது எழுதிக் கொண்டாவதிருப்ப தாகப் பாசாங்குதான் செய்யவேண்டும். அல் லது, நாலுபேருக்கு நடுவில் இவன்வரநேர்ந்தா லும், சண்டைக்குவரும் நாய்போல் திடீரெனப் பாய்ந்து குரைத்துவிட்டுத் தான் வேலை செய்யு மிடத்துக்கு ஓடிவிடுவான். இவன் என்ன வேலைதான் செய்தாலென்ன, எவ்வளவு நன் ருய்த்தான் செய்தாலென்ன? இப்படிப்பட்ட வன் பூமிக்குப் பாரமும் சோற்றுக்குக்கேடுமே. இவனது சுற்றத்தாரின் வாழ்க்கையெனும் பாலுக்கு இவன் ஒரு சொட்டு விஷமே. இவனிறந்தால் ஒருவரும் வருந்தார்.

கடைசியாக இவ்வளவு 'தடபுடலு'ம் எதற் காகவெனச் சற்று நிதானிப்போம். தன்னை யும் பிறரையும் வருத்தி வாழ்க்கையை வெறுக் கச் செய்தாவது ஆக வேண்டியதுதானென்ன? ஒருவன் வருஷத்துக்கு மூன்று புஸ்தகம் எழுதினாலென்ன, முப்பது புஸ்தகமெழுதினு லென்ன? அல்லது அவன் துவக்கியிருக்கும் அபூர்வசித்திரப் படத்தைப் பூர்த்தி செய்தா லென்ன, செய்யாவிட்டால் தானென்ன? உல கத்தில் யாருக்குதூக்கமின்றி கவலையாயிருக்கி றது? எவன்தான் இல்லாவிடில் உலகம் நடை பெருது நின்றுவிடும்? உலகென்னுமிப்போர்க் களத்தில் மானிட் சைனியத்தில் நின்றவன் கீழே விழுந்தாலும் அவனிருந்த இடம் ஒரு நாளும் காலியாகக் காணும். விற்பிடித்து நீர்

கிழிய எய்த வடுப்போல உடனே அவ்
விடத்தை மூடிக்கொள்ள ஆயிரம்பேர் காத்தி
ருக்கின்றனர். ராஜ்ய பரிபாலன முதலிய
லோகோத்தாரணத் தொழிலுக்கும் தெருக்
கூட்டும் 'ஜாடுமாரி'த் தொழிலுக்கும் தத்துவ
திருஷ்டியில் யாதொரு பேதமுங் காணோம்.
எந்த வேலையிலும் ஒருவன்போய் விட்டால்
மற்றொருவன் வருகிறான். ஆதலால் எவனும்
தான் செய்யுந்தொழில் பரோபகாரம், பகு
ஜனோபகாரம் லோகோத்தாரணம் என்று மன
ப்பால் குடித்தல் மதியீனமே. பின்னையோ
வெனில், ஒவ்வொருவனும் தன் மனம் நாடிய
வழிக்கே உழைக்கிறான் என்பது சற்றுத்
தீர்க்கவிசாரம் செய்பவருக்கு விளங்கும்.
வால்மீகி பகவான் க்ரௌஞ்ச பக்ஷிகளை ஹிம்
ஸித்த வேடனைக் கண்டிராவிட்டால் உலகம்
மேலே நடைபெறாது நின்றுபோயிருக்குமா?
புத்தபகவான் அன்றையதினம் கபிலவாஸ்து
வின் வீதி உலாவப் புறப்பட்டிராவிட்டால்
தானென்? கிணற்றுக்குத் தண்ணீரெடுக்கப்
போனகுடங்கள் திரும்பிவராது போய்விடுமா?
விதைத்தது முளையாமல் நின்று விடுமா?
அறுத்தது உலைவாய்க்குப் போகாது தப்புமா?
ஊசிவழி நூல் செல்லாது நின்றுவிடுமா?
ஸ்ரீமத் ராமாயணமும் அஹிம்ஸாதர்மமும்
கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போனதை
உலகம் அறியக்கூடுமா? நாம் அறியா நஷ்டம்
துயர் தருமா? எவ்வளவு லோகாதிசயமான
பொருளானாலும் சரி, அதை விலைகொடுத்து
வாங்குவதினும் நம் குழந்தைக்கோரூதுகுழல்
வாங்குவது மேலா அல்லவாவென்று ஸாமா
ன்ய ஸம்ஸாரி யொருவன் யோசிக்க இடங்
கொடாத உயர்ந்தபொருள் உலகில் மிகவரிதே.
ஆதலால் எல்லாப் படியாலும் எண்ணினும்,
ஒருவனையும் உலகத்துக்கு இன்றியமையாதவ
னென்றெண்ணச் சற்றும் இடமேயில்லை. ஆதி
சேஷன் உலகத்தைத் தாங்குகிறான் என்கிறார்
கள்; தூக்கத்தில் அமுக்குப் பிசாசு பிடித்த
வன் தன்னையும் ஆதிசேஷனாகவே கருதுகி
றான். உண்மையிலும் இருவருக்கும் யா
தொரு வித்தியாஸமுங் காணோம். பெரியோர்
தத்துவ விசாரத்துக்கும் சிறுவர் குழலூதுவ
தற்கும் யாதொரு பேதமும் புலப்படவில்லை.
மனிதனது அபாரசக்திக்கேற்ற வேலை உலகில்
ஒன்றுமேயில்லை. ஈசன் தன்னருளால் தீர்க்
கக்கூடிய அளவு பாபம் உலகத்தவர் செய்ய
முடியாது. ஆம்பற்பூ முழுகுமளவுக்கு நீரூற்
றங் காணமாட்டாது. உலகில் மனிதன் செய்
யுந் தொழிலெல்லாம் சூரியனுக்குச் சமையல்
வேலையிடுவதுபோலும் மின்னலை வரவழைத்து
விளக்கேற்றச் செய்வது போலும் வாயுபகவா
னைக் கூப்பிட்டு வீடுபெருக்கச் சொல்வதுபோ
லுமே. எனக்குக் குழந்தை பிறந்தால்
"வேலையற்ற வீணன்" என்று பெயரிட்டுத்
தாலாட்டுவேன். சிருஷ்டிமுதல் பிரளயமீறா
கவுள்ள இப்பிரபஞ்சத்தின் சரித்திர முழுவ
தையும் கருத்தொத்த காதலர் கடைக்கண்
பார்வையிலடக்கிவிடலாமன்றோ! லோகாக்ஷ
கனைச் சிம்மாசனமேறிப் பட்டாபிஷேகம்
பெறுவதினும் காதலரது தர்சன ஸல்லாபமே
மேலெனக் கருதக்கூடிய வாத்மாக்களும் உலகி
லிருக்கின்றனர். ஒரு க்ஷணத்திலுதித்தவொரு
வார்த்தை, ஓர் கருத்து, ஓர் புன்முறுவல்,
ஆயுள் பரியந்தம் நடைபெறும் மற்றெல்லா
வியவகாரங்களினும் பெரிதாகி அவற்றை
இருந்தவிடந் தெரியாது விழுங்கி விடுகிறது
முண்டு. பாரதப்போரின் படுகளமுழக்கத்தி
னும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் கண்ணொ
ளியே அர்ச்சுனன் மனதை வலுவாகக் கவர்ந்
தது. மின்மினிப் பூச்சிபோல் இருளும் ஒளி
யும் வெம்மையும் தண்மையுமாய் அந்தரத்தில்
சுழன்றுவரும் அண்டகோடிகளிலெல்லாம்
இப்பூமி எத்துணை? அதில் மனிதன் எத்
துணை? அதிலும் அவன் செயலெத்துணை
யென வுன்னிப் பார்க்குமிடத்து, கைகால்
வெலவெலத்து நெஞ்சு சில்லிட்டுப்போகிறது.

இப்படிப்பட்ட உலகில் மனிதன் தேடுவது
தான் என்ன? ஆநந்தமே. அது எத்தன்மை
யது, எக்காரணங்களினின்று உதிக்கிறதென
ஆராயப்புகின் ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள
வனுக்கு இரண்டாயிரம் ரூபாய் வருமானம்
ஏற்பட்டுவிட்டால், ஆநந்தமுண்டாகிறது.
ஆனால் மூவாயிரம் ரூபாய் கிடைத்துக்கொண்
டிருந்த ஒருவனுடைய வருமானம் அதே
இரண்டாயிரத்துக்கு வந்தவிடத்துத் துக்க
மேற்படுகிறது. ஆதலால் ஆநந்தமென்பது
2000 ரூபாயில்லை. ஆனால் ஆயிரத்திலிருந்து
இரண்டாயிரத்துக்கு வரும் வழியேயாகும்.
அம்மாதிரியே துக்கமென்பதும் மூவாயிரரூபா

யிலிருந்து இரண்டாயிரத்துக்கு வரும் வழியே யாகும். தூக்குப் போட்டுவிடும்படி தண்டனை பெற்ற வொருவனைத் தீவாந்தரத்துக்கனுப்பி விடும்படி உத்திரவானால் அது அவனுக்கு ஆநந்தமாகிறது. ஆனால் இரண்டு வருஷங் கடுங்காவல் தண்டனை பெற்றவனுக்கு மறு விசாரணையில் அதே தீவாந்தர சிக்ஷை ஏற்பட்டால் அது அவனுக்குத் துக்கத்தை விளைவிக்கிறது. ஆனால் எப்பொழுதும் ஒரே அளவாய் 2000 ரூபாய் வருமானமே பெற்றுக்கொண்டிருப்பவனுக்கு உலகம் அலுத்துப்போகிறது. நாம் கீழ்ப்படியில் நிற்கிறவரையில் அடுத்த மேற்படியை எட்டிவிட்டால் கிருதகிருத்யர்களாகி விடுவோமெனத் தோற்றுகிறது. அதற்கு மேல் படியே கிடையாது, அப்படியிருந்தாலும் அது நமக்குத் தேவையில்லை எனத் தோற்றுகிறது. ஆனால் வெகு சிரமப்பட்டு அந்தப் படியேறியதும் அதற்கும் மேல் தோன்றும் வேறுபடிகளை ஆவலுடன் நோக்குகிறோமே யொழிய நாம் சிரமபரிஹாரம் செய்துகொண்டு ஸ்வஸ்தமாயிருப்போமென்று மனந்துணிகிறதில்லை. போய்க்கொண்டிருக்கையில் அதோ தெரிகிற விடத்தில் நின்றுகொண்டிருந்தால் சுகமெனத் தோற்றுகிறது. ஆனால் வெகு சிரமப்பட்டு அவ்விடத்தை யடைந்ததும் நாம் தேடிய சுகம் அடிவானம்போல் நாம் அதை நெருங்கிய அளவுக்கு விலகிப்போய் விட்டதாகத் தெரிகிறது. இதுதான் ராமனை ஏமாற்றிய மாயா மிருகம். உண்மையில் லக்ஷ்யத்தைத் தேடியுழைப்பதே சுகமாயிருக்க, லக்ஷ்யத்தை அடைந்த பின்னர்தான் சுகமுண்டாகுமெனக் கருதுவதே மாயையின் செயல். விவாக வாழ்க்கை சுகமா, தனி வாழ்க்கை சுகமாவெனக் கேட்டவர்க்கு ஸோக்ராத்தன் அளித்த பதிலிதுவாகும். "விவாகத்தில் புகுந்தவர் அதினின்றும் விலகிவர முயலுகின்றனர். தனிமையிலிருப்பவர் அதில் சிக்கிக்கொள்ள நாடுகின்றனர்" என்றான். ஸிஸிலியின் அரசனை பீரன் தன் மந்திரியாகிய கினியனைக் கூப்பிட்டுத் திக்விஜயத்துக்குப் புறப்படும் பொருட்டு ஸைன்னியஞ் சேர்க்கச் சொன்னான்.

"தாங்கள் முதலில் எங்கு படையெடுத்துச் செல்வீர்கள்?" என்று கேட்டான் மந்திரி.

"நான் முதலில் இத்தாலியாவை ஜயிப்பேன்" என்றான் அரசன்.

"அதன் பின்னர்?" என்றான் மந்திரி.

"ஆப்பிரிக்காவிற் படை செலுத்துவேன்"

"அப்புறம்?" "ஆசியாவையும் என்னரசுக்குள்ளாக்குவேன்"

"அதன் பின்?" "உலகத்தையே ஒரு குடை கீழாக்குவேன்"

"அதற்கப்புறமோ?" "அப்புறம் சுகமாயிருப்பேன்"

"தாங்கள் இப்பொழுதே அவ்வாறு சுகமாயிருப்பதை யார் தடுக்கிறார்கள்?" என்று மந்திரி கேட்டதற்கு அரசன் பதில் சொல்ல மாட்டவில்லை. ஆதலால் மனிதனுக்கும் அவன் தேடும் சுகத்திற்கும் குறுக்கே நிற்பது அவனது ஸங்கற்பமே.

மகா அலெக்ஸாந்தர் சாகுந்தறுவாயில் "இனிமேல் ஜயிப்பதற்குப் பூமியில்லையே" என்று விசனித்தான்.

ரோம ஸாம்ராஜ்யத்தின் அந்திய சரித்திரத்தை எழுதி முடித்ததும் அந்நூலாசிரியரான கிப்பன் "நெடுநாள் துணையாய் நின்று வந்தவொரு வேலையை இழந்தேன்" என்று வருந்தினான்.

தூரப்பிரயாணம் புறப்பட்டவொருவன் தான் கையில் கொண்டுவந்திருக்கும் சிற்றுண்டியையும் கதைப் புத்தகத்தையும் வெகு சீக்கிரத்தில் ஆவலுடன் முடித்துவிடில் அப்புறம் செவிக்கும் வயிற்றுக்குமுணவில்லாது விழிக்க வேண்டி வருமேயென்று பயந்து சிறுகச் சிறுக மென்று மென்று ருசி பார்த்துப் படிப்பது போல் நமக்குக் கிடைத்த வேலையை ஒரே மூச்சில் முடித்துவிடாது ஆயுள் முழுவதும் நீடித்து வறுமாறு சிறுகச் சிறுகச்செய்து முடிப்பதே அறிவாளர்க்கு இலக்கணமாம்.

செல்வம் இன்றியமையாதது.

(தமிழ் மாணவன் குழற்கோவலன் எழுதியது.)

1 அற்பரையுங் கற்றறிந்த ஆன்றோரேன் றேபுகழ்வர்
கற்பகமே யென்பார் கருமிகளைப் — பொற்பிலரைக்
கையிற் சிலைபிடித்த காமனேனப் போற்றிடுவார்
கையிற் பொருளிருந்தக் கால்.

2 கல்லாக் கயவர்தமைக் கற்றவரா கச்செயலாம்
இல்லார்கட் கீந்திங் கினிதுறலாம் — வில்லார்ந்த
வாரணியுங் கோங்கை மடமாதே சுகம்பெறலாம்
தாரணியிற் செல்வமிருந் தால்.

3 குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை போக்கு
மிடிக்கு மருந்தாய் மிளிரும் — வடித்தபொருள்
என்றும் சுகம்பெற் றிருப்போர்க்கிம் மைப்பிறப்பில்
இன்றி யமையா தது.

4 இல்வுலகில் வேண்டு மேதையும் கொடுக்குமற்
றவ்வுலகிற் செல்லுதற்கும்ஆகும் — செவ்விமிகு
கல்விநலம் மெய்யழகு காண்டலிவை செய்வதினில்
செல்வம்போல் இல்லை செகத்து.

5 நன்னெறியும் நல்லறிவும் ஞான்ற வருளுடையார்
பொன்னுற் புகழுறுதல் பொற்பாமோ — நன்னுதலாய்
கல்லோலிநீர் ஞாலத்துக் கல்வியிலா மாக்களுக்குஞ்
செல்வத்தாற் சேருஞ் சிறப்பு.

6 கடல்படுவ கான்படுவ கல்படுவ ஆகி
உடைவழங்கி ஊண்வழங்கு முண்மை — அடரும்
செறுநருகச் சீரோங்கச் செல்லழிக்குங் கேளிர்
அறம்வளர்க்கும் ஆகூழ்ப் பொருள்.

நான் கண்ட கனவு.

(தென்னுப்பிரிக்கா—டர்பன்—திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ஆக்கியது.)

சோதரர் கேளீர்! சோதரர் கேளீர்!
பாரதத் தாயின் பேறெனத் திகழும்
சோதரர் கேளீர்! சொல்லுவன் சொப்பனம்
கண்டேன் ஒன்றீண் டதனைக் கவனமாய்.
ஒரு நாள் அடியேன் உலவுவான் அழகார்
பூங்கா வனத்திற் புகுந்தனன் போனேன்;
மாலைப் பொழுதால் மந்தமா ருதத்தால்
உளங்களித் தோன்றும் தோன்றே னுகைச்
சென்றேன், நெடுந் தொலை சேர்ந்தேன் ஒருசுனை;
ஆங்கொரு பளிக்குப் பாறையாம் அழகிய
ஆசனம் கண்டேன், அதன் கரை அருகே
அமர்ந்தனென் விரும்பிச் சம நிலை யுடனே
இருந்தனென் அமர்ந்தேன் இழந்தேன் எந்நிலை
அந்நிலை அடியேன் "அந்தோ மகனே
அந்தோ மகனே" என்றோர் அபயக்
குரல்தனைக் கேட்டேன்; குறித்த அக் குரலின்
வழியே சென்றேன், வந்தடைந் தேன்ஓர்
அற்புதச் சித்திரப் பொற்பமை மண்டபம்;
தன்னில் ஆங்கே தமனியத் தவிசுகள்
தம்மில் மணிமுடி தரித்தனர் பல்லோர்
தேவிமார் கொலுவீற் றிருந்தனர் திகழ; அத்
திருவோ லக்கம் தன்னிற் சீரிய
சிங்கா தனம் ஒன்று "எங்கே எனை ஆள்
அரசியார்க் காணேன் அரசியார்க் காணேன்"
என்றுரைப் பதுபோல் இருந்தது நாப்பண்;
கண்டனன் திகைத்தேன், கொண்டனன் மனத்திடம்
வேண்டினேன், அனுமதி பெற்றனன் புகுந்தேன்,
வலமாய் வந்தேன், வந்தனை புரிந்தேன்,
"உலகரா ணிகள்" என்று ணர்ந்தேன் அவர்கள்
தம்மை அத்திருச் சபைக்கு இருத்தற்
குரிய நம் தாயைக் கண்டிலேன் அந்தோ!
கலங்கினேன் உள்ளம் துளங்கினேன் உடலம்
"எங்கே எந்தாய், எங்கே எந்தாய்"
என்றே கதறினேன், ஏங்கினேன்; அக்கால்
முற்குரல் வழியே மீட்டும் ஒருகுரல்
வந்ததால் எளிமைக் குறிப்புடன் : அதுதான்
"மகனே: கேளாய்! வறிதே ஏன் நீ
அலறுவை? இங்குன் அருமைத் தாய்நான்
ஈண்டிருக் கின்றேன், இஃதொரு மூலைகாண்;
என்னெனிற் கேளாய்! எனக்கோ முப்பது
கோடிக் கதிகமாம் கோழைகள் குழந்தையாய்த்
துலங்குகின் றீர்கள்; தூக்கமும் சோம்பலும்

நீங்கினீர் அல்லீர்! நம்உயர் நிலையை
நினைத்தலும் செய்யீர்! நித்தம் அடிமைத்
தொழிலையே நயந்து துன்புறு கின்றீர்!
இதனால், உலகிற் கிராணி யாகும்
தரத்தினைப் பெற்றயான் தரிக்க ஓர் ஆடையும்
பெற்றிலேன்; ஐயகோ! பேரெழில் அழிந்தேன்;
ஒளியினை இழந்தேன் உற்றசோ தரிமார்
மதியா ராயினர்; மனமழிந் திழிவுற்று
ஒதுக்கிடத் துள்ளேன்; உன்குறை அன்றிது;
அன்றியும் வறிதாண் டிருக்கும் அரியணை
எனதே, காணாய்! இனியா கிலும் நீ
சென்றனை நின்சீர்ச் சோதரர் கட்குச்
சொல்லுவாய், எனதுறு துயரையும் நிலையையும்;
போக்கியான் உலகிற் புகழ்பெற் றுயரவும்
பண்டைப் போலிவார் பட்டுடை உடுத்தவும்
நினைப்பீரேல், ராட்டினால் நூற்கவும் நெய்யவும்
பணித்தேன் என்றே; அன்றியும் பயத்தை
நீங்கிப் பாரில் நிமிர்ந்துல வச் சொல்;
என்றும் அன்போ டொற்று மை யுற்றுய்ந்து
எதனையும் தன்னலம் என்பதே இல்லாது
இயற்றச் சொல்; நமக் கெல்லா நலமும்
வரும்; உயர் வுறுவீர்; வாழ்வீர்; யானும்
மதிக்கப் பெறுவேன் வருவேன் அவைமுன்;
கொலுவீற் றிருப்பேன், கும்பிடப் படுவேன்;
போய்ப்புரி மகனே! புந்திநைந் தழியேல்''
என்பதாம் கேட்டேன் என்னிலை பெற்றேன்
"***பாரதத் தாயின் பணி***" எனக் கொண்டேன்
எழுந்தேன் பளிக்குப் பாறையில் இருந்தே
வணங்கினேன் தாயை வாழ்த்தினேன் மகிழ்ந்தேன்
என்னே செய்வதென் றெண்ணினேன் இன்று
இன்னுரை யாம் இதை என்துணை வர்க்கீண்டு
அறியச் சொல்வேன் அன்னை சொற் படியே
செய்யத் தூண்டுவேன் முயல்வேன் செய்வேன்
என்றுளங் கொண்டேன் மீண்டேன் எனதிலம்.
ஈதுநான் கண்ட கனவுமற் றிதனை
நனவாக் கொள்ளுதல் நன்றாம் ஒருதலை
ஆதலின் சோதரீர் அருமைத் தாய்மொழி
தன்னைத் தலைமேல் தாங்கிச்
சொன்னவா றுழைப்போம்; சுதந்திரம் ஆமே.

வரருசி.

(தமிழ்மாணவன் குழற்கோவலன்.)

பாரத பூமியின்கண் கௌசாம்பி என்ற நகரில் வஸுதத்தை என்ற மனைவியோடு கூடின ஸோமதத்தர் என்ற பிராமணருக்கு வரருசி என்ற பிள்ளை பிறந்தான். வரருசிக்கு மூன்றுவயது ஆவதற்குள்ளாகவே, ஸோமதத்தர் விண்ணுலகடைந்தார். வரருசியை அவனுடைய தாயான வஸுதத்தை மிகுந்த சிரமத்துடன் வளர்த்து, முடிந்தவரையில் அதிதிகளை வரவேற்று உபசரித்தும், விருந்தினர்களை ஓம்பியும் காலம் கழித்து வந்தனள்; ஏழ்மை நிலையால் வருந்தினபோதிலும், சக்திக் கேற்றவாறு அதிதிகளை உபசரித்து வந்தனள். வரருசியோ, இளம்பிராயத்திலேயே நகரில் நடக்கும் சபைகளுக்கும் சங்கீதக் கச்சேரிகளுக்கும் சென்று, வித்தைகளை நன்றாய் கிரஹித்துக் கொண்டும், வருத்தமறியாமல் தாயால் போஷிக்கப்பட்டும் வந்தான்.

ஒரு ஸமயம் வியாடி இந்திர தத்தன் என்ற இரண்டு அந்தணர்கள் யாத்திரை செய்து கொண்டுவரும்போது, கௌசாம்பி நகரில் வந்து, வரருசியின் வீட்டில் ஓரிரவு தங்கினார்கள். அன்று வரருசியுடன் பழகினதில், அவன் ஒரு தடவை சொன்ன மாத்திரத்திலே யாவற்றையும் கிரஹிக்கும் சக்திவாய்ந்தவன் என்பதை அறிந்தனர். பிறகு வேதபாடத்தால் பரீக்ஷித்து உண்மையாக ஒரு தடவையிலேயே சொன்னதை கிரஹிக்கும் தன்மை இவனுக்குண்டு என்பதைத் தெளிந்து தாயிடமும் தெரிவித்தனர். அன்றியும் வஸுதத்தையைப் பார்த்து வணங்கி, "பாக்கியமுள்ளவளே! பதிவிரதா சிரோமணியே! உன் புத்திரன் சாமான்யமானவன் அல்லன். இவனை நாடியே நாங்கள் இவ்விதம் வந்துள்ளோம். எங்களுடைய இடம் வைதஸபுரி என்பது. நாங்கள் செல்வவந்தர்களாயிருந்தும், கல்வியை முன்னிட்டுத் தவம் செய்தோம். எங்களுக்கு குமரக்கடவுள் காட்சி யளித்து, "நந்தனால் ஆளப்படும் பாடலீ புத்திரம் சென்று வர்ஷர் என்ற பிராமணரிடம் கல்வியை அடையுங்கள்" என்று சொன்னார். அதன்படியே, நாங்களும் பாடலீபுத்திரம் சேர்ந்து, வர்ஷர் என்ற பிராமணரைத் தேடியலைந்து, கடைசியில் மிகவும் பாழான வீட்டில், மிக்க அசுத்தமான உடைகளையும் இளைத்த சரீரமுடைய மனைவியையும் கொண்டவரும் மூர்க்கர் என்று பெயர் பெற்றவருமான வர்ஷரைக் கண்டோம். அவர் மனைவியிடம் எங்கள் வரலாற்றைச் சொன்னோம்; அதற்கு அம்மாது, எங்களைப் பார்த்து "ஐயா, இவ்வர்ஷர் சபரஸ்வாமி என்ற பிராமணருக்குப் புத்திரர்; இவருக்கு உபவர்ஷர் என்று செல்வரான தம்பியுண்டு. இவர் தவம் செய்து குமரக்கடவுளால் எல்லாங் கற்றும், 'ஒரு தடவை சொன்னதைக்கூட கிரஹித்துக் கொள்ளும் மாணவனுக்கு வித்தைகற்பி' என்று குமாரர் ஆணையிட்டார்; அதன்படி கிடைக்கவில்லை. அதனால் ஜபம் செய்து கொண்டேயிருக்கிறார். ஆதலால் அப்பேர்பட்ட மாணவனை முதலில் தேடுங்கள்" என்று சொல்லிவிட்டாள். அதன்படி நாங்கள் இப்பொழுதுதான் அடைந்தோம். வரருசியை எங்களுடன் அனுப்பவேண்டும்" என்றனர்.

உடனே அம்மாது மனமகிழ்ந்து அவர்களைப் பார்த்து, 'ஐயா அப்படியே ஆகட்டும். இவன் பிறக்கும்போதே "ஒரு தடவையிலேயே வர்ஷரிடமிருந்து வித்தையை அடையப்போகிறான்" என்றும், "உலகில் வியாகரணத்தை நிலைநிறுத்தப் போகிறான்" என்றும், "எது எது சிறந்ததோ, அதெல்லாம் இவனுக்கு ருசிக்கின்றதாகையால், இவன் வரருசி என்ற பெயரடையட்டும்" என்றும் அசரீரி வாக்கு உண்டாயிற்று. தாங்களும் அதைப் பின்பற்றியே வந்தீர்கள்' என்று வரருசியை அவர்களிடம் ஒப்புவித்தனள். வியாடியும் வரருசியை அழைத்துக்கொண்டு வஸுதத்தைக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து தேற்றி விடை பெற்றுக்கொண்டு இந்திரதத்தனோடு பாடலீபுரம் வந்து வர்ஷரின் வீட்டை அடைந்தார்.

வர்ஷர் வரருசியைக் கண்டதும் அளவில்லாத ஆநந்தம் கொண்டவராய் கட்டியணைத்து, 'சிஷ்யனே, வரவேண்டும் வரவேண்டும்' என்று

சொல்லி உட்காரச்செய்து வேதங்களை கற்பிக்கத் தொடங்கினர். ஒருதடவை கேட்டதால் வரருசியும் இருதடவை கேட்டதால் வியாடியும், மூன்று தடவை கேட்டதால் இந்திரதத்தனும் குருவால் சொல்லப்பட்டதை அறிந்து கொண்டனர்; வர்ஷரிடம் சிஷ்யர்கள் வரவர அதிகரித்தனர். வர்ஷரின் புகழானது பாரதவர்ஷம் முழுதும் பரவினது; எல்லா ஜனங்களும் இதைக் கொண்டாடினர்கள். நந்தராஜனும் வர்ஷரைப் பணிந்து செல்வங்கள் நிரம்பக் கொடுத்தான். இவ்விதமாகச் சிலகாலம் செல்ல, வரருசியும் இளம்பிராயம் நீங்கி கல்விக் கடலின் கரைகண்டு, குருகுலவாஸத்தையும் முடித்துக் கொண்டான்.

ஒருஸமயம் வரருசி வியாடியுடனும் இந்திரதத்தனுடனும், இந்திரோத்ஸவத்தைப் பார்க்க நகர்வலம் செய்தனன். அப்பொழுது, வரருசி மிக்க அழகு கொண்டவளும் தோழிகளோடு கூடினவளுமான ஒரு கன்னிகையை வீதியில் கண்டான். அவளும் இவனைப் பார்த்தனள். வரருசி அவளைப் பார்த்த மாத்திரத்தில் காதல் கொண்டு, தன் மனதை அடக்க முடியாதவனாய், அவளைச் சுட்டிக் காண்பித்து, வியாடியை நோக்கி 'இப்பெண்மணி யார்' என்றனன். வியாடியும், வரருசியைப் பார்த்து, 'நண்பா, இப்பெண்மணியின் பெயர் உபகோசை என்பது. நமது குருவர்ஷரின் தம்பியான உபவர்ஷரின் புத்திரியாவாள்' என்றனன். வரருசி நகர்வலம் முடித்துக்கொண்டு வீடுவந்து கார்யங்களை முடித்துக்கொண்டு உறக்கம் கொள்வானனன். ஆனல் உபகோசையின் நினைவே நினைவாக, எல்லாவற்றையும் மறந்து அவளை எண்ணிக்கொண்டு படுத்திருந்தான். விடிதற்குச் சிறிது நேரமிருந்தது. அப்பொழுது வெள்ளாடையுடுத்த ஒரு பெண்மணி இவன் கண்முன் தோன்றினள். உடன் இவனைப் பார்த்து, 'பிள்ளையே, நான் உன்னிடம் வசிக்கும் கலைமகள். நீ காதலித்துள்ள உபகோசை என்பவள் முற்பிறப்பினும் உன்னுடைய மனைவிதான். கவலைப்படாதே; அவள் உன்னை விரும்புகிருள். அவளையே நீ அடைவாய்' என்று கூறி மறைந்தனள். உடனே வரருசி மனமகிழ்ந்து, உபகோசையின் வீட்டை நோக்கிப்போனன். அங்கு உபகோசையும் மதனவேதனையால் வருத்தப்பட்டு வரருசியை நினைந்து வருந்தித் தோழிகளால் தேற்றப்பட்டுக்கொண்டு இருந்தனள். வரருசி அவ்விடம் செல்லவே, தோழிகளால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப் பட்டான். ஆனல் தர்மம் தெரிந்த வரருசி, கீர்த்தியை விரும்பும் விவேகியான ஆண்மகன் இவ்விதமாக குரு உத்திரவில்லாமலும் தாய் உத்தரவில்லாமலும் களவில் கருத்தை நிறைவேற்றுவது தகுதியல்ல என்றறிந்து மீண்டான். பின்பு இவ் விஷயம் தோழிகளால் உபகோசையின் தாயாருக்கும் பின்பு உபவர்ஷருக்கும் எட்டவே, அவர்கள் மனமகிழ்ந்து விவாஹம் நிச்சயப் படுத்தினர்கள். பின்பு வியாடியால் வரருசியின் தாய்க்கு விஷயத்தைத் தெரிவித்து வரவழைத்து, அவள் உத்திரவினல் கலியாணம் அக்நிசாக்ஷியாக நடந்தேறியது. வரருசி அதுமுதல் தாயாரோடும் மனைவியோடும் அந்நகரிலேயே இல்லறம் நடத்தி வந்தார்.

நிற்க, வர்ஷருக்கு, பாணினி என்ற ஓர் சிஷ்யர் இந்தார். அவர் குருவுக்குப் பணிவிடை செய்வதே கடமையாக இருந்து வந்தார்; ஒருகால் வர்ஷரின் மனைவியானவள் பாணினியை 'தவஞ்செய்து உமாகாந்தனல் கல்வியை அடைவாய்' என்றுசொல்ல, பாணினியும் அவ்விதமே தவஞ்செய்து, சிவனிடம் நேராக வியாகரணத்தை அறிந்து பாடலீபுரம் வந்தார்; வரருசியையே வாதுக் கழைத்தார். அதில் பாணினி தோல்வியடைய, பரமேசுவரனல் ஹுங்காரம்செய்யப்பட்டு ஐந்திரவியாகரணமானது பூமியில் அழிந்தது; உடனே பாணினியால் வரருசி தோற்கடிக்கப்பட்டார். இதைக் கண்டு சகியாத வரருசி, தான்தேடிய பொருளை ஹிரண்யகுப்தன் என்ற வைசியனிடம் வைத்துவிட்டு, அதை மனைவியிடமும் தெரிவித்து, அவள் அனுமதி பெற்றுக்கொண்டு, சங்கரனை நோக்கி தவஞ்செய்ய இமயமலையை அடைந்தார்.

உபகோசை யானவள் கணவனை உத்தேசித்து பல நோன்புகளைச் செய்துகொண்டு தெய்வங்களை பூஜித்து வந்தாள். சந்திரனைப் போன்ற முகமுள்ளவளும் கங்கையில் நீராட வருபவளுமான உபகோசையை, அரசனின் புரோஹிதனும், குமாரசிவன் என்பவனும், சேனதிபதியும் கண்டு காதல் கொண்டனர்.

உபகோசையானவள் கங்கையில் நீராடித் திரும்பி வரும்பொழுது குமாரசிவன் நடுவழியில் மறித்துக் கொண்டு காதலைத் தெரிவித்தான். இதைக் கண்ட உபகோசை மீளாத்துயர் கொண்டு வருந்தி, தனது புத்தி சக்தியால் அவனைப் பார்த்து, 'ஐயா, நாளை வஸந்தோத்ஸவம்; ஆதலால் நகரஜனங்கள் இங்கிருக்கமாட்டார்கள். என் கணவனும் ஊரில் இல்லை. ஆதலால், நாளை இரவில் முதல் யாமத்தில் வாருங்கள் என் வீட்டிற்கு' என்று சொல்லியனுப்பினள். அவனும் அப்படியே சென்றுவிட்டான். பிறகு சிறிதுதூரம் செல்ல, அப்பதிவிரதாமணியைக் காமங்கொண்ட புரோகிதன் தடுத்தான். இவனுக்கும் முன்போலவே அதே இரவில் இரண்டாம் யாமம் வரும்படியாக சொன்னாள். பிறகு இன்னும் சிறிது தூரம் செல்லச் சேனாபதி தன் எண்ணத்தை தெரிவித்தான். அவனுக்கும் அதே இரவில் மூன்றாவது யாமம் வரும்படியாகச் சொல்லியனுப்பினள். பின்பு மனம் வருந்தி தன் நிலைமைக்கு துயரங்கொண்டு கணவனை நினைத்துக் கொண்டு வீடு சென்றனள். நடந்த சமாசாரங்களை தோழிகளிடம் கூறி 'நான் இறந்துவிடுகிறேன் என் கற்பு கெடுவதைவிட என் உயிர் போவதே சிறந்தது' என்று கூறிப் புலம்பினாள்.

அதுகேட்ட தோழிகள் உபகோசையைத் தேற்றி, 'அம்மா, அவர்கள் இஷ்டம்போல் வரட்டும்; பயனை அனுபவிக்கிறார்கள்; தாங்கள் கவலைப்படவேண்டியதில்லை. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்றனர். உபகோசை கணவனை எண்ணிக் கொண்டே அவ்விரவைக் கழித்துவிட்டு, காலை எழுந்து ஹிரண்யகுப்த செட்டியிடம், தன் கணவன் கொடுத்த திரவியத்தை வாங்கிவரச் சேடியை அனுப்பினாள்.

ஹிரண்யகுப்தனும் நேரேவந்து தான் உபகோசைமீது கொண்டுள்ள காதலைத் தெரிவித்து, இணங்காவிடில், கணவன் கொடுத்த திரவியம் இல்லை என்று சொல்வேன் என்றனன். இது கேட்ட உபகோசை, வருந்தி யுக்தி செய்துகொண்டு, 'ஸரி, நாளை இரவு நான்காம் யாமம் வா' என்று சொல்லி அனுப்பினாள். இதைக்கண்ட தோழிமார்கள் உபகோசையைத் தேற்றி 'அம்மா, நீங்கள் கவலைப் படவேண்டாம். இந்த நால்வரையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இன்று அவர்களுக்கு ஸரியான புத்தி புகட்டிவிடுகிறோம்' என்று சொல்லி எல்லோருமாக ஆலோசனைசெய்து கஸ்தூரிமுதலான வாஸனை திரவியங்களோடு சேர்ந்த எண்ணெயோடு, கசடு முதலியன கலந்து அதில் நனைக்கப்பட்ட வஸ்திரங்களையும் தயார்செய்து, ஓர் பெரிய பெட்டியை உள்ளே வைத்து துஷ்டர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். அந்த ஸமயம் முதல் யாமத்தில், குமாரசிவன் நன்றாக அலங்கரித்துக் கொண்டு அப் பதிவிரதையின் வீட்டுள் இரவில் பிறர் காணாமல் நுழைந்தான். நுழைந்ததும், சேடிகள் குமாரசிவனைப் பார்த்து—'ஐயா நீராடாமல் இருக்கிற உங்களை எங்கள் தலைவி தொடமாட்டாள். ஸ்நானம் செய்ய வாருங்கள்' என்று சேடிகளால் உபசரிக்கப்பட்டு, இருட்டு நிறைந்த உட்கட்டிடத்தில் அழைத்துப்போய் முன்பு தயார் செய்த எண்ணெய்க் கசடுகளையும், அதில் நனைக்கப்பட்ட வஸ்திரத்தையும் கொடுத்து தேய்த்துக் கொள்ளச் சொன்னார்கள். அவனும் மனமகிழ்ந்து தன்னைப் பெரும் பாக்கியசாலியாக எண்ணி இருட்டில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். இப்படியிருக்கும்போதே முதல் யாமம் முடிந்து விட்டது. அச்சமயம் இரண்டாம் யாமத்தில் புரோஹிதர் வரலானார். உடனே, சேடிமார்கள் குமார சிவனிடம் போய், 'ஐயா, வாருசிக்கு நண்பரான புரோஹிதர் வந்து விட்டார். முகூர்த்தநேரம் மறைந்திரும்' என்று அவனைப் பெட்டியில் தள்ளித் தாளிட்டுவிட்டார்கள். அவ்வாறே புரோஹிதரும் ஏமாற்றப்பட்டு நீராடும் காரணமாக அழைக்கப்பட்டவராய் இருட்டில் கசண்டால் தேய்க்கப்பட்டு சேனைத்தலைவன் வரும் சமயத்தில், பெட்டியில் குமாரசிவனைப்போல் தள்ளப்பட்டுத் தாளிடப்பட்டார். அப்படியே சேனாபதியும் இவர்களைப்போல் வியாபாரி வரும் ஸமயத்தில் பெட்டியில் தள்ளப்பட்டுத் தாளிடப்பட்டான். இம்மூவரும், 'அந்ததாமிஸ்ரம்' என்ற நரகத்தை அனுபவித்துக் கொண்டி

ருந்தார்கள். ஒருவருக் கொருவர் பயத்தால் பேசிக்கொள்ளாமல் ஒருவர்மேல் ஒருவராய்க் கிடந்தனர்.

பின்பு, சேடிமார்களால் செட்டியும் உபசரிக்கப்பட்டு நீராடிவிட்டு வந்தான். வந்தவுடன் உபகோசையானவள் செட்டியைப் பார்த்து, 'ஐயா, என்கணவர் கொடுத்த பொருளைக் கொடும்' என்றாள். அவனும் "அப்படியே கொடுக்கிறேன்" என்றான். அவன் சொல்லும்போது, உபகோசையானவள் பெட்டியிலுள்ளவர்கள் கேட்கும்படியாக, 'ஏ வீட்டுத்தெய்வங்களே, ஹிரண்யகுப்தனின் வார்த்தையைக் கேளுங்கள்' என்று சொல்லிவிட்டு, கேடுகெட்டவனை 'வீடுபோய்ச் சேர்' என்று சேடிமார்களால் தள்ளி, ஒரே துண்டையுடுத்தவனாய் விரட்டப்பட்டான். வியாபாரி, 'தலைதப்பினது தம்பிரான் புண்ணியம்' என்று தலைகால்தெரியாதபடி, விதிவழியாக ஓடி வீடுபோய்ச் சேர்ந்தான்.

பிறகு சேடிகளுடன் உபகோசையானவள் நந்தராஜனின் சபையை அடைந்து, அரசனைப் பார்த்து, 'ராஜனே, என் கணவனால் கொடுத்து வைக்கப்பட்ட பொருளைத் திரும்பக் கேட்கும்போது ஹிரண்யகுப்தனென்ற வைசியன் தர முடியாது என்கிறான். அதை எனக்கு வாங்கித் தரவேண்டும்' என்று சொன்னாள். அரசனும் ஹிரண்யகுப்தனை வரவழைத்துக் கேட்க, 'இல்லவே இல்லை' என்று சொல்லிவிட்டான். உடனே உபகோசை அரசனைப் பார்த்து, 'ராஜனே! பெட்டியில் எனது கணவனால் வைக்கப்பட்டிருக்கிற வீட்டுத் தெய்வங்களே இதற்குச் சாக்ஷி' என்றனள். அரசனும் அவ்வாறே வேலையாட்களைக் கொண்டு பெட்டியை எடுத்து வரச் சொன்னான். பெட்டி வந்ததும் உபகோசையானவள், 'ஏ தெய்வங்களே, ஹிரண்யகுப்தன் முன்பு என்ன சொன்னானோ அதை உண்மையாய்ச் சொல்லுங்கள்' என்றனள். பெட்டியுள் இருப்பவர்களும், எங்கே தங்களது குட்டு வெளியாய் விடப்போகிறதோ என்று நினைத்துப்பெட்டியில் இருந்தவண்ணம், "எங்கள் முன்னிலையில் இவனால் தங்களுக்கு கொடுக்கவேண்டிய பொருள் ஒப்புக்கொள்ளப்ளப்பட்டது உண்மைதான்" என்றனர். உடனே ஹிரண்யகுப்தன் பேந்தப் பேந்த முழித்தான். அரசனும் இவ்வாச்சர்யத்தைக் கண்டு உபகோசையை மஹாபதிவிரதா சிரோமணி என்று புகழ்ந்து, பொருள் கொடுக்கப்பட்டது உண்மை எனவே சபையில் தீர்மானிக்கப்பட்டதால் அதனைப் பறிமுதல் செய்து கொடுக்கச் செய்தான்.

பிறகு உபகோசை மனம் மகிழ்ந்து பெட்டியை திறக்கச் செய்து அம்மூன்று முண்டங்களையும் எண்ணெய்க் கசண்டு வேஷத்துடன் வெளிவரச் செய்தனள். இதைக் கண்ட அரசன் திகைத்து 'இதுஎன்ன' என்று ஆச்சர்யத்துடன் உபகோசையை நோக்கினான். உபகோசையும் நடந்த வரலாற்றைத் தெளிவுற அரசனுக்கு அறிவுறுத்தினாள். சிரமப்பட்டு மந்திரியால் அவர்கள் இன்னாரென்று அறிவிக்கப்பட்டுச் சபையில் பரிகசிக்கப்பட்டனர். உடனே அரசன் கோபங் கொண்டு அம்மூவரையும் ஹிரண்யகுப்தனையும், தேசப்ரஷ்டம் செய்து நன்றாக தண்டித்துத் துரத்திவிடச் செய்தான். அவர்கள் நால்வரும் வெறுக்கத்தக்க நிலைமையோடு உயிர் துறந்தனர். உபகோசையின் கற்புமகிமை நகரெங்கும் பரவிற்று; வர்ஷோபாத்தியாயர் உபவர்ஷர் எல்லோரும் புகழ்ந்தனர். அவள் கற்பிற் சிறந்த கன்னிகையாக எல்லாராலும் போற்றப்பட்டாள். பிறகு கணவனை நினைந்த வண்ணமாய் வீட்டிலேயே உபகோசை வாழ்ந்து வந்தனள்.

வரருசியானவர் இமயமலையில் தவம் செய்து கங்காதரனின் அருள் பெற்று பாணினீய வியாகரணத்தை அறிந்து மற்றதையும் தானே பூர்த்தி செய்தார். பிறகு அம்மொழி ஸம்ஸ்க்ருதம் என்று வழங்கலாயிற்று. தவம் முடிந்த வரருசியும் பாடலீபுரம் வந்துசேர்ந்து நடந்த வரலாறுகளை அறிந்தார். உபகோசையின் கற்பிற்கு மகிழ்ந்து, கற்பிற்சிறந்த இம்மாதின் இல்வாழ்க்கையை போற்றிப் புகழ்ந்தார். வர்ஷர் உபவர்ஷர் முதலானவரை வணங்கினார். வர்ஷரும், பாணினீய வியாகரணங்களை முருகன் முகமாகக் கேட்டு இந்திரதத்தன் வியாடி இருவருக்கும் சொன்னார். இருவரும் குருகுலம் முடிந்து வர்ஷரிடம் விடைபெற நினைத்து, 'குருவே. தங்களுக்கு என்ன தக்ஷிணை வேண்டும், தயவு செய்து தெரிவிக்கும்படியாய் வேண்டுகிறேன்' என்றனர்.

அதற்கு வர்ஷரும், 'கோடி ஸுவர்ணம் கொடு' என்றார். உடனே இருவரும் ஒப்புக்கொண்டு வரருசியிடம் வந்து விஷயத்தைத் தெரிவித்து, தொண்ணூற்றொன்பது கோடிக்கதிகாரியான நந்தனிடம் வாங்கித் தரும்படியாக வேண்டினர். வரருசியும் அவ்விதமே என்ன மூவருமாக நகரை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது, நந்தன் இறந்தானெனச் சமாசாரம் எட்டிற்று. அரண்மனை எங்கும் கலவரமாக இருந்தது. இதைக் கண்ட இந்திரதத்தன் யுக்திசெய்து வரருசியைப் பார்த்து, 'அப்பா, நான் யோகசக்தியால் நந்தன் உடலில் புகுந்து நந்தன் பிழைத்ததுபோல் ராஜசபை வருகிறேன். அப்பொழுது நீ அங்கு வந்து கோடி ஸுவர்ணமும் யாசிப்பாய். நான் கொடுத்து விட்டுத் தனியாக சமயம் பார்த்துத் திரும்பி விடுகிறேன். அதுவரையில் என் சரீரத்தை வியாடி காத்துக்கொண்டிருக்கட்டும்' என்றான். வரருசியும் 'அப்படியே' என்று சொல்லி வியாடியை அங்குள்ள இடிந்த கோவிலில் உட்கார வைத்து, இந்திரதத்தன் சரீரத்தைக் காக்கும்படியாகச் சொல்லி, தான் அரண்மனையை நோக்கி நடந்தார்.

அரண்மனையில் நந்தனின் மனைவிகள், பிணத்தின் மேல்விழுந்து அழுதுகொண்டிருந்தனர். மந்திரியான சகடாலன் மனம் வருந்தி 'ஹா, நந்தரே, நந்தரே' என்று கதறியழுதனன். குடிகளெல்லாம் 'தர்மம் அழிந்து விட்டதே, நீதி போய்விட்டதே, உயிர்களெல்லாம் நந்தனில்லாமல் சோகமுறுகின்றனவே' என்று கதறியழுதனர். எல்லோரும் பிணத்தைச்சூழ்ந்துகொண்டு அழுதுகொண்டேயிருந்தனர். இந்திரதத்தன் தன் சரீரத்தைவிட்டு நந்தன் சரீரத்தில் புகுந்து கொண்டு இதை எல்லாம் கண்மூடிய வண்ணமாய் கேட்டுக் கொண்டிருந்து, மெதுவாக கண்ணையும் திறந்தான்; உடனே சிறிது புன்சிரிப்பும் செய்தான். இதைக்கண்ட சகடாலன் மெதுவாகத் தலையை தொட்டான். உடனே நந்தனும் எழுந்து 'நான் இறக்கவில்லை. இன்னும் நூறு வருடங்கள் நான் இருப்பேன்' என்றான். எல்லோரும் ஆச்சர்யமடைந்து யோக நந்தனாகிய இந்திரதத்தனை உற்றுப் பார்த்தனர். சகடாலன் அறிவின் மிக்க மந்திரியாவான். யோக நந்தனோ உல்லாஸமாக அந்தப்புரம் சென்று பழைய நந்தனின் மனைவிகளோடு போகம் அனுபவித்துக் கொண்டிருந்தான். எல்லா ஜனங்களும் நந்தன் பிழைத்ததை அறிந்து சந்தோஷமெய்தினர். தாதுக்களைப் பார்த்து நந்தன் இறந்தான் என்று சொன்ன வைத்தியர்கள் பாடு அவமானமாய், தூற்றப்பட்டனர். ஒரு தூதுவன் அந்த சமயம் யோகநந்தனிடம் வந்து 'மஹாராஜரே, அரண்மனைவாசலில், சகல கலாவல்லபரான வரருசி வந்திருக்கிறார். தங்களைப் பார்க்கவேண்டுமாம்' என்றனன். உடனே இந்திரதத்தனாகிய யோகநந்தன் 'அப்படியே வரவிடு' என்றுசொல்லிச் சபைக்கு வந்தான். வரருசியும் யோகநந்தனிடம் வந்து, 'அரசனே நீ மறுபடியும் பிழைத்தாய்' என்பதுகேட்டு மிக்க மனம் மகிழ்கின்றேன். இந்த மகிழ்ச்சியில், எனக்கு ஒரு காரியமாக கோடி ஸுவர்ணம் வேண்டும் என்றார். அரசனும் சகடாலனைப் பார்த்து, 'சகடாலா, வரருசிக்கு கோடிஸுவர்ணம் கொடு' என்றான். உடனேபுத்தியிற்சிறந்த சகடாலன் யோஜித்து, 'இந்நந்தன் உண்மை நந்தனல்ல, யோகநந்தனே' என்று சொல்லிவிட்டு, தனக்குள், 'ஹா! என்ன ஆச்சர்யம்! இறந்தவன் பிழைத்தான். நந்தனின் பிள்ளையோ சிறுவன். விரோதிகளோ நான்கு பக்கமும் இருக்கின்றனர். ஆகலால், எப்படியாயினும் ஸரி, இவன் யோகிதான். இவன் வந்ததும் வரருசி வந்திருக்கிறான். அன்றியும் 'கோடிஸுவர்ணம்' கொடு என்று யோஜனையின்றிக் கூறுகிறான்; ஏதோ தந்திரம் இருக்கிறது. ஆதலால் இந்நகரிலுள்ள எல்லாச் சவங்களையும் உடனே எரித்து விடும்படி சொல்லி வேலையாட்களை அனுப்பி எரித்து விடவேண்டும். அப்பொழுது இவனுடைய உண்மைச் சவமும் எரிபடும்; யோகநந்தனும் நம்மிடமே இருப்பான்' என்று எண்ணி, அதன்படி வேலையாட்களை விட்டுச் செய்வித்தான். இதற்குள்ளாக யோகநந்தனால், 'மீண்டும் கோடிஸுவர்ணம் வரருசிக்கு சீக்கிரம் கொடு' என்று வற்புறுத்தப்பட்டான். மந்திரியும் அப்படியே இதோ என்று சற்று தாமதம் பண்ணிக் கொண்டிருக்கையில் 'அநியாயம், அநியாயம், அநீதி, அநீதி, யோகாப்யாஸத்திலிருந்த பிராமணனை இறந்தானென்று ராஜ வேலையாட்கள் பகிரங்கமாக எரித்து விட்டனர்' என்று வியாடி சபையில் வந்து புலம்பி

ஞன். உடனே வாருசியும் இது சகடாலன் சூழ்ச்சி என்றறிந்தார். சகடாலன் கோடி ஸுவர்ணமும் உடனே வாருசிக்கு அளித்தான். வியாடி புலம்புவதையும் சகடாலன் அறிந்து மகிழ்ந்தான்.

பிறகு தனியாக, யோகநந்தன் மிக மனம் வருந்தி, வியாடியைப் பார்த்து 'நண்பா, நான் பிராமண வருணத்திற் பிறந்தும் இதே பிறப்பில் சூத்திரனுனேன். என்விதி இது' என்று வருந்தினுன். அவனை நோக்கி, வியாடியானவன், 'நண்பா வருத்தப்படாதே. இச்சகடாலன் முன் நந்தனுடைய பிள்ளையான சந்திரகுப்தனிடம் ப்ரீதியுள்ளவனுகையால் உன்னை நாசம் செய்தாலும் செய்து விடுவான். உன்னையும் அறிந்துகொண்டான். ஆதலால் நீ வருசியை மந்திரியாக வைத்துக்கொண்டு சகடாலனைக் கொலை செய்வதற்கு வழிதேடு. நான் இக்கோடி ஸுவர்ணத்தையும் இப்பொழுது வர்ஷருக்கு அளிக்கப்போகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றுன். உடனே யோகநந்தன் வாருசியை முதன் மந்திரியாக்கியதோடு, சகடாலன் இருந்தால் கேடு ஸம்பவிக்கும் என்று அறிந்து யோகாப்யாஸத்திலிருந்த பிராமணனை அகாரணமாய்க் கொலை செய்ததன் காரணமாக குற்றம் சாட்டி சகடாலனையும் அவனது நூறு புத்திரர்களையும், பூமியின் கீழுள்ள அந்தகூபம் என்ற இடத்தில் சிறை வைத்தான். அன்றியும் அவர்கள் எல்லோருக்குமாக, ஒருவர் சாப்பிடும் ஆகாரமே அளிக்கப்பட்டு வந்தது. அது ஒருவருக்கே போதுமானதாக இருந்தமையால், சகடாலன் புத்திரர்களை நோக்கி, 'பிள்ளைகளே இவ்வாகாரம் ஒருவருக்கே போதுமானதாய் இருக்கிறது. ஆதலால், யாராவது ஒருவர் யோகநந்தனைப் பழிவாங்க சக்தியுள்ளவர்களாயிருந்தால் அவர்மட்டும் இதை சாப்பிட்டுப் பிழைக்கட்டும். மற்றவர்கள் இறந்துவிடுவோம்' என்றுன். அதைக் கேட்ட புத்திரர்கள், தந்தையைப் பார்த்து 'அப்பா, நீதான் அதற்கு தகுதியுள்ளவன்' என்று சொல்லிவிட்டு உடனே யாவரும் சகடாலன் கண்காண உயிர் துறந்தனர். சகடாலன் அந்த ஆகாரத்தை உண்டு, நந்தனைக் கொல்ல சமயத்தை எதிர் பார்த்திருந்தான். யோகநந்தனே, காமத்தில் மூழ்கியவனுய் சகடாலன் நினைவே இல்லாமலிருந்தான். எப்பொழுதும் அந்தப்புரமே கதியாக இராஜ்யாதிபாரங்களைக் கவனியாமல் இருந்து வந்தான். எல்லா பாரமும் வாருசியைப் பொறுத்திருந்தது. வாருசியோ ஸாஸ்வதியின் உதவியினுல் அரசுபுரிந்து வந்தார். இந்தசமயம் வியாடியும் வர்ஷருக்கு குருதக்ஷிணை கொடுத்துவிட்டுத்தவம் செய்ய எண்ணி இமாலயம் தான் செல்வதை யோகநந்தனுகிய இந்திரதத்தனுக்கு அறிவிக்க வந்தான். யோகநந்தன் வியாடியைப் பார்த்து, 'நண்பா, அதிர்ஷ்டத்தால் கிடைத்த செல்வத்தை நீயும் கொஞ்சநாள் இங்கிருந்து அநுபவித்துவிட்டு போ' என்றுன். இதைக் கேட்ட வியாடி தன் வைராக்கியத்தை யோகநந்தன் அறியவில்லை என்றறிந்து, மோஹம் பிடித்திருக்கும் நந்தனைப் பார்த்து, 'நண்பா கானல் நீருக்கு சமமான இந்த லக்ஷ்மி அறிவாளியைத் தொடமாட்டாள். நீதான் உன் யோகசக்தியை எல்லாம் இழந்து இவ்விதம் சிக்குண்டாய். நான் தவம் செய்யப்போகிறேன்' என்று சொல்லி, வாருசியிடமும் விடைபெற்றுக்கொண்டு சென்றுன்.

முதன் மந்திரியான வாருசி, சதுரங்க சேனையுடன் ஸாஸ்வதி தேவியினுல் ராஜ்யாதிகாரம் செலுத்திக்கொண்டும் தாயாராலும், ஆசார்யராலும் உபசரிக்கப்பட்டும், பதிவிரதையான உபகோசையால் பணிவிடை செய்யப்பட்டும் மிகுந்த செல்வத்துடன் இல்லறம் நடத்தி வந்தார். ஆனுல் சிற்றின்பமே எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டிருக்கும் யோகநந்தனின் செய்கையைப் பார்த்து வருந்தி 'என்ன! கல்வியின் கரைகண்டு யோக சாதனம் செய்து மஹா தபஸ்வியாயிருந்த இந்திரதத்தனு இவன்? என்ன ஆச்சர்யம்? வலுவில் கிடைத்த செல்வம் யாரைத்தான் மோஹிக்கச் செய்யாது என்பதற்கு நந்தன் உதாரணமாய் விட்டானே. இவன் கார்யங்களைப் பார்ப்பதால் என் தர்மம் கெட்டு விடுகிறது. ஆதலால், அந்தகூபத்திலிருக்கும் சகடாலனையே மறுபடி மந்திரிப் பதவியில் வைப்போம் என்று தீர்மானம் செய்து யோகநந்தனுக்கும் அறிவித்து அவ்விதமே. சகடாலனை மந்திரியாக்கினுர். சகடாலனே மனம் மகிழ்ந்து யோகநந்தனை பழிக்குப்பழி

வாங்க சமயம் எதிர்பார்த்திருந்தான். அன்றியும் வாருசி இருக்கும் வரையில் நந்தனை வெல்லமுடியாது என்று கவலையிலாழ்ந்து சமயத்தை எதிர்பார்த்த வண்ணமாய் இராஜ்யாதிகாரம் செய்து வந்தான்.

யோகநந்தன் மிகுந்த பிரியமுள்ளவனாய் வாருசியை நடத்தி வந்தான். ஒரு ஸமயம் இரவில் நகரங்களைப் பரிசோதிப்பதற்கு நியமிக்கப்பட்ட வேலையாட்கள் ஒவ்வொருவரும் நடு இரவில் சஞ்சரித்துக் கொண்டு வருகையில் நாசமடைந்து வருவதைக் கேட்டு, நந்தன் அக்காரியத்திற்கு வாருசியையே நியமித்தான். வாருசியும் ஓரிரவு நகர சோதனைக்குப் போனான்; நடு இரவில் வீதியைச் சுற்றிக் கொண்டு வருகையில் ஒரு அரக்கனைக் கண்டான். கண்டு 'உனக்கு என்ன விருப்பம்?' என்று கேட்டான். அதைக்கண்ட அரக்கன் ஆச்சரியமும், பயமுமுள்ளவனாய், இந்நகரில் 'அழகுள்ள பெண்யார்?' என்று கேட்டான். உடனே வாருசியானவர் சிரித்து, 'அடே மூடனே! இது என்ன வார்த்தை? எவனுக்கு எவளிடத்தில் விருப்பமதிகமோ அவள் அவனுக்கு அழகுள்ளவள் ஆகிறாள்' என்றார். உடனே அரக்கன் வெட்கமடைந்து வாருசியைப் பார்த்து, 'மஹானே! உன்னால் நான் வெல்லப்பட்டேன். இனி நான் உன் தோழன். நீ நினைக்கும் சமயம் நான் உன்னிடம் வருவேன்' என்று சொல்லிப்போனான். பிறகு வாருசியால் இவ்விஷயம் அறிந்த அரசன் சந்தோஷமடைந்தான். சகடாலனுக்கு வருத்தந் தான்.

இவ்விதமாக வாருசியின் வல்லமையால் யோகநந்தன் கவலையின்றி அரசுபுரிந்து வந்தான். ஒருஸமயம் அந்தப்புரத்தில் சிற்றின்பத்தில் மூழ்கினவனான நந்தன், ஒரு பிராமணன், மாளிகையின் மேலிருக்கும் பட்டமகிஷியை நோக்க அவளும் அவனைப் பார்த்ததை அறிந்து, பிராமணனை வதை புரியும்படியாய்க் கொலையாளிகட்கு உத்திரவிட்டான். யோகநந்தனின் அவிவேகம் அதிகமாயிற்று. பிராமணன் கொலைக்களம் கொண்டு போகப்படும்போது, வாசலில் உயிர் துறந்த மீனொன்று கயிற்றால் கட்டப்பட்டு தொங்கினபடி, இவர்களைப் பார்த்துச் சிரிக்க, அதைக் கண்ட யோகநந்தன் பிராமண வதத்தைத் தடுத்து, 'இதற்கு என்ன காரணம்' என்று வாருசியைக் கேட்க, வாருசியும் 'நாளைச் சொல்கிறேன்' என்று சரஸ்வதியின் அருளால், பதில் சொன்னார். அதன்படி, வாருசி சரஸ்வதியை நினைக்க, சரஸ்வதியும் 'இங்கு தங்கி நடப்பதைப்பார். பின்பு மச்சம் சிரித்த காரணம் தெரியும்' என்றனள். வாருசியும் அன்றிரவு அங்கேதங்கி நடப்பதைக் கவனித்தார்.

அப்பொழுது, ஒரு அரக்கி ஒரு குழந்தையுடன் அங்கு வந்து தங்கினாள். அக்குழந்தையானது அரக்கியைப் பார்த்து 'அம்மா, தின்பண்டம் தா' என்றது. அதற்கு அவள், 'அப்பா, நாளை பிராமண வதை நடக்கும், அப்பொழுது தருகிறேன். இன்று அவன் வதைக்கப்படவில்லை' என்றனள். அக்குழந்தை 'என் கொல்லப்படவில்லை' என்றது. அதுகேட்ட அரக்கி, 'அப்பா, அரண்மனையில் ராஜபுருஷர்கள் புகுந்து ராஜஸ்திரீகளைக் கெடுத்து விடுகின்றனர். அவர்கள் பெண் வேஷம் பூண்டுபோவதால் தெரியவில்லை. இதை அறியாமல், குற்றமற்ற பிராமணனை வதை புரியும்படி அரசன் கட்டளையிட்டான். அதைக் கண்டு ஒரு மீன் நகைத்தது. அதைக் கண்டு இன்று கொலையைத் தவிர்த்தான்'' என்றனள். இதைக் கேட்ட வாருசியானவர் யோகநந்தனிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்து பிராமணனை விடுதலை செய்தார். யோகநந்தன், பெண் வேஷங்கொண்டு பட்டமகிஷிகளைக் கெடுக்கும் ராஜபுருஷர்களை எல்லாம் கொலை செய்து திருப்தி யடைந்தான். இவ்விதம் அரசன் செய்தது வாருசிக்கு பிடிக்கவில்லை. நண்பன் என்ற முறையில் அங்கு இருந்துவந்தான்.

நிற்க, ஒருஸமயம் சிற்பி ஒருவன், யோகநந்தனையும் பட்டமகிஷியையும் படத்தில் வரைந்து, அரசனிடம் காண்பித்துப் பரிசுபெற்றுச் சென்றான். வாருசி அப்படத்தைக் கண்டு, சாமுத்திரிகா லக்ஷணத்துடன் கூடின அப்பட்டமகிஷியின் படத்தில் ஒரு குறை இருக்கின்றது என்று தனது புத்திவல்லமையினால் அறிந்து இருதனத்திற்கும் நடுவில், இவளுக்கு மச்சம் இருக்கவேண்டுமே என்று, தான் ஒரு வர்ணக்குச்சியால் அம்மச்சத்தைப் பூர்த்தி செய்தார். இதைக் கண்ட யோகநந்

தன் செல்வத்தின் செருக்காலும், அவிவேகத்தாலும், சிற்றின்ப விருப்பினாலும், மனங் கலங்கி, வாருசிமீது மஹாக்ரோபம் கொண்டு, 'இவன் நடத்தை பிசகானது. எனது அந்தப்புர ஸ்திரீகளை இவன்தான் கெடுக்கிறான். அன்றியும் இதனால்தான், அந்தப்புரத்தில் பெண் வேஷங்கொண்டு சஞ்சரிக்கின்ற ராஜ புருஷர்களை இவனறிந்தான்' என்று எண்ணி வாருசியைக் கொலை செய்விக்கும்படி சகடாலனுக்குக் கட்டளையிட்டான்.

சகடாலனோ, இதைக்கேட்டு 'அப்படியே' என்று சொல்லிவிட்டு வாருசியை அழைத்துக் கொண்டு, இவனைக் கொல்வது எவராலும் முடியாது. அன்றியும் என்னை அந்தகூபத்தினின்று மீட்டவன் இந்த புத்திசாலியான வாருசியன்றோ? செய்நன்றி மறந்தவன் மீளாநரகத்திற்குப் போவான். ஆதலால் என் வீட்டில் இவனை இருக்கச் செய்கிறேன் என்று எண்ணித் தன் வீட்டில் ஒருவருமறியாமல் வைத்துக் கொண்டான். அரசன் வாருசி கொல்லப்பட்டான் என்று எண்ணியிருந்தான். ஆனால் யோகநந்தனின் சபையானது, நீரில்லாத நிலம்போலவும், மணமற்ற பூப்போலவும் ஆயிற்று. நகரெங்கும் வாருசி கொல்லப்பட்டானென்று தெரியவே, எல்லாரும் துக்கித்தனர். நந்தனை இகழ்ந்தனர். நகருக்குக் கொஞ்ச தூரத்தில் வசித்துவந்த உபகோசையானவள் இதைக் கேட்டு, மூர்ச்சையடைந்து ஒன்றும் தோன்றாமல் கணவனை நினைந்த வண்ணமாய் அக்கினிப் பிரவேசம் செய்து புகழ் பெற்றனள். வர்ஷர் உபவர்ஷர் முதலானவர்கள் துக்கித்தனர்.

இவ்விதமாகச் சிலகாலம் செல்ல யோகநந்தனுக்குப் பதினெட்டு வயதுள்ள ஹிரண்யன் என்ற புதல்வன் இருந்தான். அவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வேட்டையாடிக் களைப்படைந்து ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து களைப்பாறினான். அப்பொழுது ஒரு ஸிம்ஹம் கர்ஜித்துக்கொண்டு அவனை நோக்கி வந்தது. அப்பொழுது இருட்டிவிட்டதாகையால், ஓட வழிதெரியாமல் நடுநடுங்கி மரத்தில் ஏறினான். அம்மரத்தில் ஒரு கரடி உட்கார்ந்து கொண்டிருந்ததைப் பார்த்து நடுநடுங்கி நின்றான். அப்பொழுது கரடியானது அவனை நோக்கி, 'அப்பா பயப்படாதே, வா. நான் ஒன்றும் செய்யமாட்டேன்' என்று பிரியமுடன் சொல்லிற்று. அவனும் சற்று மனம் தைரியம் அடைந்து கரடியிடம் சென்று அதன் மடியிலேயே படுத்துறங்கினான். அப்பொழுது சிங்கமானது அவனைத் தன்னிடம் தள்ளிவிடும்படி மன்றாடியது. ஆனால் கரடி முடியாதென்று சொல்லிவிட்டது. பிறகு ஹிரண்யன் தூங்கி எழுந்து, தன் மடியில் கரடியை படுக்க வைத்துக்கொண்டான். அப்பொழுது ஸிம்ஹமானது அவனை நோக்கிக் கரடியை தன்னிடம் தள்ளி விடும்படி வேண்டிற்று. ஹிரண்யனோ செய்நன்றி கெட்டவனாய், மிருகத்தினும் இழிந்தவனாய்க் கரடியை தள்ள முயன்றான். ஆனால் கரடி விழித்துக்கொண்டு, ஹிரண்யனைப் பார்த்து கோபம் கொண்டு 'அடே நன்றிகெட்டவனே! இக்கொடூரமான செய்கை வெளியாகும் வரையில் பைத்தியமாக இருக்கக் கடவாய்' என்று சபித்தது. பிறகு மறுநாள் விடிந்ததும் சிங்கம் போனவுடன் கரடியும் சென்றுவிட்டது. ஹிரண்யன் மட்டிலும் பைத்தியம் பிடித்தவனாய் மரத்திலேயே உட்கார்ந்துகொண்டு தனக்குத் தானே பேசிக்கொண்டேயிருந்தான்.

நிற்க, யோகநந்தன் பிள்ளையைக் காணாமல் வருந்தி வேலையாட்களைக்காட்டிற்கனுப்ப அவர்கள் தேடி அலைந்தார்கள். கடைசியில் இவனைக் கண்டு பிடித்து அரசனிடம் கொண்டுபோக, யோகநந்தன் 'இவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதே' காரணம் என்ன என்று அறிவதற்கு வாருசிஇல்லையே. ஐயோ, ஸகல கலாவல்லபனான வாருசியைக் கொல்லச் செய்தேனே' என்று வருந்தினான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த சகடாலன், மனம் மகிழ்ந்து வாருசியை வெளிப்படுத்துவதற்குச் சமயம் வாய்த்ததை எண்ணி அரசனைப் பார்த்து, 'ராஜனே என்னால் நன்றியுடன் வாருசி காக்கப்பட்டிருக்கிறார். தாங்கள் உத்தரவிட்டால், வெளியில் வரவழைக்கிறேன்' என்றான். இதைக் கேட்ட யோகநந்தன் ஆச்சரியமடைந்து 'ஹா! வாருசியா? என் அருமை நண்பனா? எங்கே சீக்கிரம் வெளியில் வரவிடு' என்று உத்திரவிட்டான். உடனே சகடாலனால் வாருசியும் வெளிவந்து சபையையடைந்தார். உடனே

யோகநந்தன், அவரை வணங்கி செய்த பிழையை மறந்து விடும்படியாகச் சொல்லி விட்டுத் தன்மகனுக்குப் பைத்தியம் பிடித்தது ஏன் என்றுகேட்க, வரருசியானவர் கலைமகளின் அருளினால் உண்மை தெரிந்து, அரசனே! இவனால் மித்ரத்ரோகம் செய்யப்பட்டது. அதன் பயனை அனுபவிக்கிறான் என்றார். உடனே காடியின் சொல்படி, பைத்தியம் நீங்க ஹிரண்யனால் காட்டில் நடந்த வரலாற்றை எல்லாருக்கும் அறிவித்தான். பின்பு, யோகநந்தன், வரருசியைப் பார்த்து, இது நீ எவ்வாறு அறிந்தாய் என்று கேட்க, அதற்கு வரருசியானவர், "ராஜனே! புத்திமான்களது புத்தியானது, லக்ஷணம் அநுமானம் பிரதிபாசக்தி இவைகளால், சொல்லப்படாத விஷயத்தையும் அறியப்படுத்தும். இவ்வாறே தான் முன்பு உனது பட்டமகிஷியின் தனத்திற்கு நடுவில் இட்ட மச்சம் எனது புத்தியாலேயே அறிந்து எழுதப் ட்டது" என்றார். யோகநந்தன் தன் செய்கைக்கு மனம் வருந்தி வாருசிக்கு மேலான மரியாதைகள் செய்தான். தன் நடத்தை சுத்தமாய் இருப்பதாலேயே தன்னை பாக்கியசாலியாக நினைத்து மகிழ்ச்சி கொள்ளும் உபகோசையின் கணவனான வரருசி வைராக்கியம் கொண்டு "நிலையற்ற இவ்வரசனின் அனுக்கிரஹம் எனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டு வீடு நோக்கிச் செல்லலானார்.

மாப்பிள்ளை வீடுவந்ததும் உபவர்ஷர், வரருசியைப் பார்த்து, "வித்துவானே! உனது மனைவி நீ இறந்துவிட்டாய் என்று எல்லோரும் சொல்லக்கேட்டு, எங்களால் தடுக்கப்பட்டும் கேட்காமல் அக்கினிப்பிரவேசம் செய்தனள். உன் தாயோ, மிகவும் புலம்பியவண்ணமாய் ஹிருதயம் வெடித்து இறந்தனள். உன்னை நினைந்தே தாயார் வெகு காலம் உயிர் வாழ்ந்திருந்தனள். கடையில், நீ இறந்தாய் என்று சொல்லப்பட, திடீரென்று உன்னைக்கூப்பிட்டபடி இறந்தனள்" என்றார். இதைக் கேட்ட வரருசியானவர் "ஹா அம்மா! உபகோசா!" என்று சொல்லிக்கொண்டே மூர்ச்சித்து விழுந்தார். வெகு நேரம் கதறிக்கொண்டேயிருந்தார். "சுற்றத்தாரின் நாசத்தினால் ஏற்படும் சோகாக்நியானது யாரைத்தான் கொளுத்தாது?" பிறகு வரருசி இவ்வாறு புலம்புவதைக் கேட்ட வர்ஷோபாத்தியாயர் அவ்விடம்வந்து வாருசியைத் தேற்றி, "சிஷ்யனே! நீ அறிந்தவனாயிருந்தும் இவ்விதம் மயங்குவது பிசகான காரியமாகும். நீயோ தர்மநுட்பம் தெரிந்தவன்; உலகநடவடிக்கை தெரிந்தவன்; கற்றவன்; இவ்விதம் கலங்காதே; ஆத்மாவை நன்றாய் ஆராய்ந்து பார். தைரியம் அடைந்து கடவுளைத் தியானம்செய் என்றார். உடனே வர்ஷரின் உபதேசம் பெற்ற வரருசி, துக்கத்தை உதறித்தள்ளி வைராக்கியம் பெற்று, சகல ஆசைகளையும் துறந்து காட்டை நோக்கித் தவஞ்செய்யச் சென்றார்.

இது நிற்க, பாடலீபுரத்தில் சகடாலன் யோகநந்தனைக் கொல்வதற்கு உபாயம் தேடியவனாய், அந்நகரில் யாத்திரைக்கு வந்த சாணக்கியன்என்ற பிராமணனைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு போய், அவனால் தான் எண்ணிய காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணி கூட்டிச்சென்றான். ஓர்நாள் அரண்மனையில் பல பிராமணர்களுக்கு தக்ஷிணையுடன் போஜனம் நடத்த அரசனால் ஆக்ஞாபிக்கப்பட்டது. அப்பிராம்மணர்களில் முதல்வனாக, லக்ஷம் ஸுவர்ணம் தக்ஷிணை கிடைக்கும்படியாக, சாணக்கியனை சகடாலன் நியமித்து, சாணக்கியனிடம் விஷயத்தை தெரிவித்தான். ஆனாலும் அதே முதல் ஸ்தானத்தில் தன்னை நியமிக்கும்படியாக அரசனுக்கு வேண்டிய ஸுபந்து என்பவன் வேண்ட, முன்பே சாணக்கியன் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், நந்தனால் நீக்கப்பட்டு ஸுபந்துவே நியமிக்கப்பட்டான். அரசன் நம்மை அவமானம் செய்தானென்று எண்ணம் கொண்ட சாணக்கியன் கோபம் கொண்டு செல்வச் செருக்கு கொண்ட இந்த நந்தனை ஏழே நாளில் வதை செய்கிறேன். வதை முடியும் வரையில் இந்தக் குடுமியைக் கட்டுவதில்லை என்று சபதம் செய்து சகடாலனால் ரகஸ்யமாகப் போஷிக்கப்பட்டு வந்தான். சாணக்கியன் தன்னுடைய யோகசக்தியால், அபிசார தேவதையை வசப்படுத்தினான். அதனால் யோகநந்தன் பீடிக்கப்படவே கொடுமையான தாஹஜ்வரத்தால் ஏழாவது நாளில் இறந்தான். உடனே சகடாலன் சாணக்கியனை மந்திரியாக்கி, ஹிரண்யனைக் கொன்று, பழைய நந்தனின் மகன் சந்திரகுப்தனை அரசனாக்கினான்- ஆனால் சகடாலன்

தன்னுடைய பிரதிக்கினை நிறைவேற்றினாலும், புத்திரசோகத்தால் ராஜ்யத்தில் இருக்க விரும்பாது காடு நோக்கித் தவம் செய்யப்போயினான். காட்டிற்குத் தவம் செய்யச் சென்ற வாருசியானவர் யோகநந்தன் இறந்தானென்று சில பிராமணர்களால் அறிந்து "உலக வாழ்க்கை பயனற்றது என்பதை உணர்ந்து பனிமலையின் பக்கத்துக் கானகங்களில் சஞ்சரித்துக்கொண்டு, காய் கனி கிழங்குகளை உண்டு இருந்துவருகையில் சாகரன் என்ற முனிவனைக் கண்டு அவனைச் சோதிக்க எண்ணி அவன் கையில் தர்ப்பத்தால் கீறப்பட்டும், ரத்தம் வாராமல், உப்பு நீராக மாறும்படியாகச் செய்தார். அதைக் கண்ட அவன் நான் ஸித்தனாய் விட்டேன் என்று கர்வம் கொண்டான். உடனே வாருசி, அந்த கர்வமானது உன் அறிவைத் தடை செய்துவிடும் என்று அறிவுறுத்தி தன்னால் தான் ரத்தம், உப்பு நீராக மாற்றப்பட்டது என்று சொல்லி, உபதேசம் செய்து ஞானமார்க்கத்திற்கு அஹங்காரம் தடையாகும் என்பதையும் தெரிவித்துத் தவவழி அடைந்தார்.

பின்பு வாருசியானவர், உலகத்தில் தான் செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்தமையால், மோக்ஷவிருப்பம் கொண்டு, ஜீவாபிமானத்தைத் துறந்து தீவிரமான தவம் செய்து, யோகபலத்தால் சரீரத்தை எரித்து ஆனந்தமயமான மோக்ஷகதியை அடைந்தார்.

(இது வடமொழியினின்றும் சுருக்கி எழுதப்பட்டது.)

ராகக் க(கொ)லை.

(டாக்டர். வே. ராகவன் எழுதியது.)

I

[ப்ருஹத்தர்மம் என்ற புராணத்தில் இருக்கும் ஒரு கதையின் அஸ்திவாரத்தின் மேல் எழுப்பிய கோபுரம் இந்த நாடகம். ஸங்கீத ஸம்பந்தமாயுள்ள அப்புராணக் கதையில் உண்மையான சங்கீதத்தின் வழி நன்கு காட்டப்பட்டிருக்கிறது. இசை என்பது ராகம்; ராகந்தான் சுத்தமான, பூர்ணமான கலப்பில்லா இசை. இந்த ராகத்தை நாரதர் கொலை செய்வதையும், சிவன் மறுபடியும் அதை உயிர்ப்பித்துக் காட்டிய அற்புதத்தையும் இப்பொழுது நாடகமாகக் கேளுங்கள். தேவர்களுக்கு குருவான பிரஹஸ்பதி கலைகளுக்கு தேவதையான ஸரஸ்வதியிடம் வருகிறார்.]*

ஸரஸ்வதி:—ப்ருஹஸ்பதே, தேவகுரோ, என்ன இங்கு வந்த விசேஷம்?

ப்ருஹஸ்பதி:—தேவி, எனக்கு தேவலோகத்துலே இருக்கப்படலே; என்ன பண்ரதுன்னு புரியல்லே.

ஸரஸ்வதி:—என்னது? என்ன வந்தூடுத்து?

ப்ருஹஸ்பதி:—அதையேன் கேக்கரே. மனுஷ்யாளுக்காவது ஆபிஸுலே பாதி ராத்திரியாப்போய் தூக்கத்துலே கழிஞ்சுபோயிடரது. நூறுன்னு வேதத்துலே ஒங்க பர்த்தா ப்ரம்ம தேவன் ஆயிஸை வெச்சான் அவாளுக்கு; அதுவும் இப்ப நல்ல வேளையாய் கொரஞ்சுண்டு ஸராஸரி இருபத்தஞ்சு, முப்பதுக்கு வந்தூடுத்து. அதுவுமில்லே மனுஷ்யாளுக்கு, கஷ்டங்களும், ஆபத்துகளும், துன்பங்களும் ஸௌகர்யமாய் ஏற்பட்டுப் போரது. ஆகையினாலே மனுஷ்யன் பூலோகத்துலே ஒரு மாதிரி காலத்தைக் கழிக்கத் தெரிஞ்சுண்டுருக்கான். இங்க தேவலோகத்திலேயோ, தூக்கம்தான் கிடையாது; சாவுமில்லே; துக்கம் கிரது கிட்டவாதில்லே. இந்த தேவர்களுக்குப் பொழுதே போகமாட்டேங்கரது.

ஸரஸ்வதி:—ஒனக்கு நல்ல கவன சக்தி கொடுத்தேனே? அதைப் பத்துப் பேருக்கு தேவலோகத்துலே சொல்லிவச்சு காவ்யாஸத்

---

* இது 29-5-39ல் சென்னை ரேடியோவில் போடப்பட்டது.

தை அனுபவிச்சுண்டுருக்கும்படி பண்ணினு, காலம் போரது தெரியாமப்போகுமே!

ப்ருஹஸ்பதி :—எல்லா அனர்த்தமும் அந்த பால்கடல் கடஞ்சதுலேந்து வந்து சேந்தது. அம்ருதம் கிடச்சுப்போச்சா? போரும் போராத்துக்கு இந்த அப்ஸரஸுகள் வேர ஏகத்துக்குக் கிடச்சுப்போச்சு. இந்திரனுக்குக் கொஞ்சம் வியாகரணம் சொல்லிவச்சு, மேலே கவனம் வரைக்கும் கொண்டுவிட்டேன். உடனே ச்ருங்காரத்துலே விழுந்து, அதின் கரையை ஒரு வழியாக் கண்டுடரதுன்னு ஸங்கல்பம் பண்ணினுட்டான். என்ன பண்றது? தேவராஜா தான்! என்னென்னமோ கசமுசான்னு இறங்கிவிட்டான். நம் சிஷ்யன்னு சொல்லிக்கரத்துக்கு வெக்கமாருக்கு.

ஸரஸ்வதி :—தேவரிஷிகள்ளாம் என்ன பண்ணிண்டுருக்கா? அவாளுக் கெல்லாம் நல்ல புண்யகதைகள்ளாம் கல்பனே செய்யும் சக்தியைக் கொடுத்தேனே? அந்த சக்தியைக் கொண்டு புராண கதா காலக்ஷேபம் செய்யும்படி அவர்கள் செய்யலாமே?

ப்ருஹஸ்பதி :—அந்தக் கதைகள்ளே எல்லாருமாகச் சேந்துண்டு, ஓங்க புள்ளே நாரதனே இங்குமங்கும் புடிச்சு இழுத்து, சந்தி சிரிக்க வச்சுட்டா; நாரதனுக்குக் கடுங்கோபம் வந்தாடுத்து. எங்கே பாத்தாலும் ஒத்தொருக்கொத்தரை சிண்டு முடிஞ்சுவிட்டு, ஒரே கலஹமா அடிச்சுட்டான் நாரதன். அஸுரரோடே கலஹம் முடிஞ்சு ஸௌக்யமாயிருக்கோம்னு நினேச்சுண்டுருந்தேன்; இந்த தேவலோகத்துக்குள்ளேயே ஒத்தனுக்கொத்தன் கருவிண்டு இருக்கான்; அப்படிப்பண்ணி விட்டான் நாரதன்.

ஸரஸ்வதி :—ஸரி, நல்லது ஒண்ணேக்கொடுத்தா, அதை ஒடனே தனக்கு வேண்டாததாப் பண்ணிண்டுடர சக்தி மனுஷியாளுக்குத்தான் இருக்கூன்னு நினேச்சேன்; தேவாளுக்கும் அந்த சக்தி வந்தாடுத்தா?

ப்ருஹஸ்பதி ;—ஆகையால்தான் நான் இங்கே வந்திருக்கேன். எனக்கு நீ பல அரிய கலேகளேயும் வித்தைகளேயும் அருள் செய்துருக்கே; ஆத்மாவுக்கு பரம ஆனந்தத்தோடே, பொரத்தையாருக்கு ஒருவித இடஞ்சலில்லாமல், தானும் இன்பமடஞ்சு, பொரத்தையாருக்கும் இன்பத்தைக் கொடுத்துண்டு அழகா காலத்தைப் போக்கிரதற்கு, புதிதா ஒரு அத்புதமான வழி ஒன்று நீ சொல்லவேண்டும்.

ஸரஸ்வதி :—அழகா காலத்தைக் கழிக்கணும்! நன்னச் சொன்னே. பொழுதுபோக்குடன் அழகு என்கிற பாதத்துவத்தையும் அனு வித்தாக வேண்டும்.

ப்ருஹஸ்பதி :—ஆமாம், அதற்கே உன்னிடம் வந்தேன்.

ஸரஸ்வதி :—ஸரி, நீ போ. அந்த கலஹக்காரன் நாரதனேயே வரச்சொல்லு * * * * * இதோ வரானே கொழந்தை நாரதர்.

ப்ருஹஸ்பதி :—ஸரி, நான் போயிட்டு வரேன்; இங்கே இருந்தேன்னு ஒனக்கும் எனக்கும் மனஸ்தாபம் வரும்படியாய் பண்ணிடுவன்.

ஸரஸ்வதி :—போய்வா, ஒண்ணும் கவலேப்படாதே ஒருபுதிய கலே ஒண்ணு, அத்புதமானது அனுக்ரஹம் பண்ணப்போரேன்.

(ப்ருஹஸ்பதி போய்விடுகிருர்; நாரதர் நுழைகிருர்).

நாரதர் :—என்ன அம்மா, வாத்யார் மொள்ள நழுவி விட்டார்?

ஸரஸ்வதி :—நீ தேவலோகம் முழுதும் ஒரே கலஹமாய் பண்ணிவிட்டுட்டயாமே?

நாரதர் :—இப்ப வாத்யார் சொன்னபடி ஒரு பயல் கேக்கரதில்லே தெரியுமோல்யோ?

ஸரஸ்வதி :—ரொம்ப பெரிய தர்மகார்யத்தைச் செஞ்சுட்டேபோ.

நாரதர் :—என்னமோ, அது ஒரு விளேயாட்டு.

ஸரஸ்வதி:—விளேயாட்டா, நன்னு இருக்கு. தான் ஆனந்தப் படணும்னு பிறரும் ஆனந்தப்படும்படியான வழிலே ஆனந்தப்படணும். சூரியன் தான் வெளிச்சமாயிருந்து, மற்றதுக்கும்

தன் வெளிச்சத்தைக் கொடுக்கிறுன்பார். வா, என்னுடைய உத்யானத்துக்குப் போவோம்; உத்யானத்துலே நடந்துண்டே, பேசிண்டு போகலாம்.

நாரதர் :—ஸரி.

(இருவரும் உத்யானத்திற்கு வருகிறார்கள்)

ஸரஸ்வதி :—இதோபார், நான் வந்ததும் என் மயில் சப்திக்கிரது.

நாரதர் :—என்ன கத்ரது இந்த மயில்?

ஸரஸ்வதி :—மயில் சப்[illegible]ப்பது ஷட்ஜம்.

நா[illegible]தர் :—ஷட்ஜமா ?

ஸ[illegible]ஸ்வதி :—ஆமாம் ; இதோர் பார், அந்த மாந்தளிரைக் கடி[illegible]துவிட்டு, குயில் ஒன்[illegible] கூவுகிறது. குயில் [illegible]வுகிறது 'பஞ்சமம்'.

நாரதர் :—பஞ்சமமா?

ஸரஸ்வதி :—அதோ பார், வேதரூபமாய் என் தோட்டத்தில் அலையும் ரிஷபம்; அதன் சாரீரம் பேசுவது ரிஷபம்.

நாரதர் :—இதென்ன, இந்த மூங்கில் கொத்தில் வண்டுகள் இட்ட துளைகளில் ஆகாச கங்கையின் மாருதம் அடித்து சப்திக்கிரதே!

ஸரஸ்வதி :— ஆகா, ஸப்தஸ்வரங்களையும் இளப்பி இயற்கையிலமைக்கப்பட்ட வேணு நாதத்தைக்கேள்.

நாரதர் :—பார்த்தயா அம்மா, ஏத்தலும், குறைச்சலும், இப்படியும் அப்படியும், ஒன்று விட்டு ஒன்றும், ஒன்றுமாறி ஒன்றுமாய், விசித்ரமாய் மூங்கில் குழாய்கள் சப்திக்கின்றனவே ?

ஸரஸ்வதி :—இந்த வேணு நாதம், வேணுவில் இயற்கையாய் அமைந்த ராகஸ்வரூபமொன்றை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது. இப்படி வா, ஜலம் விழும் ம்ண்டபத்திற்குப் போவோம்.

நாரதர் :—இதென்னம்மா, ஜலம் விழுவது ஏதோ கணக்குப் பண்ணினாற்போல விசித்ரமாய் விழுகிறதே?

ஸரஸ்வதி :—நாரதா, இது விழும் காலப்ரமாணத்தை எண்ணிப்பார்; இது விழும் அளவே முதல் தாளம். இதோ மண்டபத்தில் பின்னியிருக்கும் கம்பிகளை உன் விரல்களாலும் நகங்களாலும் மீட்டிவிடு.

நாரதர் :—மீட்டாரதா?

ஸரஸ்வதி :—இதோ பார் இப்படி.. (என்று கம்பிகளை மீட்டுகிறாள்)

நாரதர் :—ஆகா, அந்த வேணுவும், அந்த மயில், குயில், ரிஷபம் முதலியனவும் எழுப்பிய சப்தங்களே இங்கும் கேட்கின்றனவே!

ஸரஸ்வதி :—இவைகளை வெரும் சப்தங்கள் என்று சொல்லாதே. ஸ்வரங்கள் என்று சொல்லு.

நாரதர் :—ஸ்வரம் என்றால்?

ஸரஸ்வதி :—ஸ்வயம் ப்ரகாசம் என்று பொருள்; ஸ்வ:, ஸ்வர், ஸ்வம் — என்ற பரலோகம், ஆத்மா, ராகமூர்த்திகளான ஸ்வரங்கள் எல்லாம் ஒரே ஸ்வயம்ப்ரகாசமான ஆனந்த ஸ்வரூபம்.

நாரதர் :—இந்த அதிசயங்கள் எல்லாம் ஏனம்மா இத்தனை நாள் எங்களுக்கெல்லாம் காண்பிக்காமல் மறைத்து வைத்திருந்தாய்? காவ்யம், இதிஹாஸம், புராணம், சாஸ்த்ரம் எல்லாத்திலேயும் போட்டு சிரமப்படுத்திவிட்டயே! இப்படி காதுலே விழுந்ததும் ஆனந்தத்தைக் கொடுக்கர வித்தையை எனக்கு சொல்லிவச்சூடு மொதல்லே, எனக்கே சொல்லிவச்சூடு. இங்கே, வாத்யார் ப்ருஹஸ்பதி, அடிக்கடி வந்து போயிண்டுருக்காரே. அவருக்கு வேண்டாம். எனக்கே மொதல்லே சொல்லிவச்சூடு.

ஸரஸ்வதி :—அதெல்லாம் பயப்படவேண்டாம், ப்ருஹஸ்பதியாயிருந்தாலும் ஸங்கீதம்கிரது ஸ[illegible]லபமா வந்துடாது. ஒனக்கும்கேட்டதும் சொல்லிவிடாரது, சொன்னதும் அது வந்துடாதுன்னு இல்லே. இது வாச்சேதியாய் பேசர விஷயமில்லே.

நாரதர் :—நீ சொல்லிக்கொடுத்தூடேன். ஒரு நொடியிலே நான் இந்த வித்தையை நீ ஆச்சரியப்படும்படி காட்ரேன்.

ஸரஸ்வதி :—நீ விஷ்ணுகிட்டப்போ, அவர் சிரமப்பட்டு சொல்லிவைக்கிரத்துலே கெட்டிக்காரர்; ஒங்கப்பாவுக்கு அவர்தான் வேதத்தையெல்லாம் சொல்லிவச்சார்.

நாரதர் :—எனக்குச் சொல்லிவைக்க அதிக சிரமப்பட வேண்டாம் அம்மா, நீ வேண்ணுப் பாரேன்.

ஸரஸ்வதி :—ஸரி போ.

II

(தேவலோகத்தில் நந்தவனத்திற்குப் போகும் வழி. கந்தர்வரும், கின்னரரும், கிம்புருஷரும், அப்ஸரஸுகளும் கூடிப் போய்க்கொண்டிருக்கின்றனர்.)

ஒருவன் :—ஏ விச்வாவஸு! எங்கே வேகமாய் போறே?

விச்வாவஸு :—தும்புரு, வா, நந்தவனத்திற்குப் போவோம். அங்கே, நாரதன் ஒரு அபூர்வ வித்தையை விஷ்ணுவிடமிருந்து தெரிந்துகொண்டு வந்திருக்கிறனும்; எல்லாருக்கும் சொல்லி வைக்கருனும். மஹரிஷிகள் ளாங்கூட புராணங்களை விட்டெரிஞ்சுட்டு, அதோப்போரா பாரு—பரதர், மதங்கர், கோஹளர், தத்திலர்—

தும்புரு :—யாஷ்டிகர், சார்த்தூலர், விசாகிலர்—ஏ அப்பா, பெரிய கோஷ்டியாத்தான் போரது.

விச்வாவஸு :—இதோ வந்தூட்டமே. என்ன கூட்டம்டா? என்னமோ காதுலே சப்தம் விழரதே என்னது? பரதமஹர்ஷே, என்ன இந்த சப்தம்?

பரதர் :—இதை கீதம், கானம் என்று ஸரஸ்வதியும், விஷ்ணுவும் சொல்லுகிறுர்கள் என்று நாரதர் சொன்னதாக, இங்கே முன் நிற்கிறவர்கள் சொல்வதாகத் தெரிகிறது!

நாரதர் :—கொஞ்சம், நிச்சப்தமாயிருக்கணும். இது பைரவி என்ற ராகம்; இதை நான் பாடப்போகும் ஆச்சரியத்தை நீங்கள் அனுபவிக்கவேண்டும்.

(நாரதர் பைரவி பாடுகிறுர். அபஸ்வரம்; நாரதர் நாயாய்க் குலைக்கிறுர்.)

நாரதர் :—தும்புரு இப்படி வா, நீ இந்த பிலஹரி என்ற ராகத்தைப்பாடு, நான் சொல்லி வைக்கிறேன்.

(இருவரும் குதிரை கனைப்பதுபோல் கனைக்கிறுர்கள்.)

பலர் பேசுகின்றனர் :—நகருங்கள், நகருங்கள், விஷ்ணுவும், ஸரஸ்வதியும் வருகிறுர்கள்.

(எல்லோரும் நகர்ந்து இடம் கொடுக்கிறுர்கள்.)

நாரதர் :—வரணும், வரணும்.

ஸரஸ்வதி :—இங்கே, என்ன, சற்று நேரம் முன் குதிரைக் கனைப்பு பலமாய்க் கேட்டதே? இந்திரனின் உச்சைச்ரவஸை வைத்துக்கொண்டு விளையாடுகிறீர்கள் என்று நினைத்தேன்.

விஷ்ணு :—ஸரிதான், உனக்குக் குதிரைக் கனைப்பு மட்டுந்தான் கேட்டதா? அதற்குமுன் நாயின் குரைத்தல் கேட்டதே அது உன் காதில் விழவில்லையா? பைரவமூர்த்தியின் நாய் தான் கத்துகின்றதென்று எண்ணினேன்.

நாரதர் :—என்ன கேழ்வி இது? நாயாவது, குதிரையாவது? மொதலில் நான் பைரவி பாடினேன், பின்பு நானும் தும்புருவும் பிலஹரி பாடினேம். சற்று இரும், மற்ற கந்தர்வர்களும், கின்னரரும் கிம்புருஷரும் பாடுவார்கள், கேழ்க்கலாம். விஷ்ணே, தாங்கள் சொல்லி வைத்ததை இங்குள்ள எல்லாருக்கும்சொல்லி வச்சுருக்கேன். இதோ விச்வாவஸு பாடப் போரான்.

(விச்வாவஸு கர்ணகடோரமாய்க் கத்துகிறுன்)

விஷ்ணு :—இது சனைச்சரதேவனுடைய காக்கை கரையும் சப்தம்.

விசாகிலன் :—இந்த கந்தர்வர்கள் கிடக்கட்டும்; விஷ்ணோ, பாரதி, நான்பாடுகிறேன், சற்றுக் கேட்கவேண்டும். (பாடுகிறார்)

ஸரஸ்வதி :—எங்க ஆத்துக்காரர் சொல்லி வச்ச வேதாத்யயனத்தைப்போல இருக்கு இது. அது இருக்கட்டும், விஷ்ணோ, என் இந்த விச்வாவஸு கண்ணை எருக்கி மூடினாட்டான்? நாம் அவன் பாட்டைக் கேட்டு படர கஷ்டத்தைத் தான் பாக்கவேண்டாம்னு எண்ணம்போல இருக்கு.

விஷ்ணு :—இது நீமீலகன் என்ற ஜாதி. இதுபோல ஸந்தஷ்டகன் என்றவன் பல்லைக் கடித்துக்கொண்டு பாடுபவன்; அதற்கு இங்கு ஒருவருமில்லை போலிருக்கிறது.

நாரதர் :—அம்மா, இதென்ன, எதுக்கெடுத்தாலும் ஒரு நொடி சொல்லுகின்றீர்கள். இதோ பார் ஸரஸ்வதீ ராகம் பாடி ஒரேயடியாய் ஒன்னை திருப்திபண்ணி வச்சூடப்போறேன்.

ஸரஸ்வதி :—அடே, நாரதா, வேண்டாம், வேண்டாம்.

நாரதர் :—ஒண்ணும் பயப்படாதே அம்மா, இதோ பார்.

(நாரதர் ஸரஸ்வதி ராகம் பாடுவதாய் எண்ணிக் கொலை செய்கிறார்.)

ஸரஸ்வதி :—அய்யோ வேண்டாமே, அய்யோ (என்று துடித்துக்கொண்டு கீழே விழுந்துவிடுகிறாள்.)

விஷ்ணு :—மாத்ருஹத்தி பண்ணிவிட்டாயேடா? ஒன் அம்மாவின் ராகத்தை யார்டா தொடச்சொன்னது? கூப்பிடு அப்ஸரஸுகளை, இவளைத் தூக்கிக்கொண்டு வைகுண்டத்திற்கு வரச்சொல்லு.

நாரதர் :—அய்யோ, அம்மா, மன்னித்துக் கொள்ளு. நான் நன்றாய்ப் பாடுவதாய் நினைத்துக்கொண்டுவிட்டேன்.

விஷ்ணு :—பைத்யமே, நீ என்னிடம் ஸங்கீதம் என்றால் என்ன என்று சற்று நேரமே கேட்டுக்கொண்டிருந்தாய். ச்ருதி, ஸ்வரம், கிராமம், ஜாதி, ராகம், ப்ரபந்தம், தாளம் இவைகளைப்பற்றி நான் உனக்கு சாஸ்திரமாய் உபதேசம் செய்தேன். நீ என்னிடம் சொல்லாமலேயே பாட ஆரம்பித்து விட்டாயே! வைகுண்டம் வா, எல்லோரும் வாருங்கள். ஸரஸ்வதி மூர்ச்சித்து விட்டாள்.

(எல்லோரும் வைகுண்டம் போகிறார்கள்)

III

(வைகுண்டத்தில் எல்லோரும் கூடியிருக்கிறார்கள். விஷ்ணு எல்லோரையும் பார்த்துப் பேசுகிறார்)

விஷ்ணு :—நாரதா, தும்புரோ, விச்வாவஸோ, பரதன் முதலிய தேவரிஷிகளே, இப்படி வாருங்கள், இதோ பாருங்கள்.

நாரதர் :—ஆகா, என்ன ஆச்சரியம், என்ன அத்புதமான ஸௌந்தர்யம்! என்ன புன்னகை பூத்த முகம்! யௌவனமான சரீரம்! புருஷோத்தமா, இதோ புமான்களாயும், இதோ ஸ்திரீகளாயும் காணப்படும் இந்த திவ்யஸுந்தர விக்ரஹங்களுடைய வ்யக்திகள் யார்? ஒவ்வொருவருக்கும் ஒரு தனிக்களையல்லவா தோன்றுகிறது!

விஷ்ணு :—நாரதா, நான் உனக்கு ராகம் என்று சொன்னேனே, அவைகளே இவர்கள்.

நாரதர் :—ராகங்களா? ராகம்னு ஏதோ அவரோஹண ஸ்வரங்களும் ஆரோகண ஸ்வரங்களுமானு சொன்னேள்?

விஷ்ணு :—அப்படியல்ல நாரதா. ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு ஸ்வரூபமுண்டு; அந்த அழிவில்லா ஸ்வரூபத்தை மனதில் வாங்கிக்கொண்டு பாடினால்தான் பாட்டு. வெறும் ஏற்றமும் இறக்கமும் ராகமாகாது. ஸ்வரங்களை ஏத்தி இறக்கிவிட்டு, அது பாடிவிட்டேன் இது பாடிவிட்டேன் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். அது தவறு.

நாரதர் —இந்த ராகதேவதைகளில் ஆணும் பெண்ணுமாயிருப்பது எப்படி?

விஷ்ணு:—ராகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கலையுண்டு; சில பௌருஷமாய் தோன்றும்; சில ஸுகுமாரமாய் இருக்கும். ஆகையால் ராகங்கள் புருஷர்களாகவும், ஸ்த்ரீகளாகவும் இங்கு காணப்படுகிறார்கள்.

நாரதர்:—அய்யய்யோ, இதென்ன, இவ்வளவு ஸௌந்தர்ய வனமாயிருக்கும் இக்கூட்டத்தில் இங்கு சிலர் நொண்டியும், பொட்டையுமாயிருக்கின்றனரே!

விஷ்ணு:—நாரதா, இந்த நொண்டி, நீ முதலில் கத்திய பைரவி; இந்த பொட்டை நீயும் தும்புருவும் கனைத்த பிலஹரி; இதோ ஸரஸ்வதி மூர்ச்சித்திருப்பதுபோல் தானும் கீழே விழுந்து கிடக்கும் மூர்த்தி ஸரஸ்வதீ. இதைக் கொலை செய்த புண்ணியம் ப்ரத்யேகம் உன்னையே சேர்ந்தது.

நாரதர்:—இனி என்ன செய்வது? இவைகளுக்கெல்லாம் சரீரபூர்த்தியும், ஜீவனும் எப்படித் திரும்பிவரும்? வருமா வராதா?

விஷ்ணு:—வர ஒரே உபாயம்தானிருக்கிறது. நான் சாஸ்த்திரத்தை உனக்குச் சொன்னதும் நீ பாடிவிட்டயே, அது மிகவும் பிசகு. பாடுவதைக் கேட்டு அதன்படி பாடவேண்டும். இந்த ராகங்கள் அனைத்தும் சிவனுடைய கண்டத்தில் இருக்கின்றன. ராகங்களின் உண்மையான பூர்ணஸ்வரூபத்தை வ்யக்தம் செய்விக்கும்படி பாடும் சக்தி அவருக்குத்தான் உண்டு. அவர் வந்து பாடினல் இந்த ராகங்களுக்கு மறுபடியும் உயிர் வரும்; அங்கங்களிலும் ஊனஹீனங்கள் போய்ப் பூர்ண ஸௌந்தர்யம் மறுபடியும் ஏற்படும். எல்லோரும் இப்படியே உட்காருங்கள். நான் மனதால் சிவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

(அப்படிச் செய்கிறார்கள்)

விஷ்ணு:—ஆ! இதோ சிவன் வரும்போதே ஏதோ வைகுண்டம் முழுதும் நாதம் நிரம்பி நிற்கிறதே! இதோ வந்துவிட்டார் சிவன். பரமேச்வரா! அருளவேண்டும். இதோ பாருங்கள்; சில ராகங்களை ராகம் இன்னவென்று அறியாமல் நாரதாதிகள் கத்திக் கொலை செய்துவிட்டனர். தாங்கள் அவைகளுடைய உண்மையான பூர்ணஸ்வரூபத்தை எழுப்பி எங்களுக்குக் காட்டவேண்டும்.

சிவன்:—அப்படியே ஆகட்டும். பாடவேண்டுமானல் இனி எல்லோரும் நான் ராகங்களை உல்லேகம் செய்வதைப் பார்த்துக்கொண்டு பாடவேண்டும். முதலில் ஸரஸ்வதியின் மூர்ச்சை தெளியவேண்டுமாதலால், அதன் ஜீவரூபத்தைக் காண்பிக்கிறேன்.

(ஸரஸ்வதீ ராகத்தை சிவன் பாடுகிறார்)

ஸரஸ்வதி:—(மூர்ச்சையிலிருந்து எழுந்து) உயிர்ப்பிச்சை கொடுத்தாய். என்னை மட்டும் காப்பாற்றியது போதாது, அதோ பைரவியும் பிலஹரியும் அங்கஹீனமாய் நிற்பதைக்கண்டு ஸஹிக்கமுடியவில்லை எனக்கு.

சிவன்:—இதோ பாடுகிறேன்.

(பைரவியை சிவன் பாடுகிறார்)

பைரவி:—ப்ரபோ, இதோ பைரவி, தமது பக்தை, நமஸ்கரிக்கிறேன்.

(சிவன் பிலஹரி பாடுகிறார்)

பிலஹரி:—ஸ்வாமி, பிலஹரி இதோ நமஸ்கரிக்கிறேன்.

ஸரஸ்வதி:—ப்ரபோ, பரமேச்வரா, தங்களுடைய ஹாரமான சங்கராபரணத்தின் ஸ்வரூபத்தை விளக்கவேண்டும்.

(சிவன் சங்கராபரணம் பாடுகிறார்)

நாரதர்:—என்ன, ஒரே ரஸப்ரளயமாய் வைகுண்டம் ஆய்விட்டதே, எல்லோரும் மிதக்கிறோமே, விஷ்ணுவைக் காணோமே; என்னம்மா இது?

ஸரஸ்வதி:—நாரதா, விஷ்ணு கான ரஸத்தின் உரு. சிவன் உண்மையாக ராகத்தை உருகப்பாடியவுடன் விஷ்ணு ரஸமயமாய் மாறிவிட்டார். கேளு, சிவன் பாடிக்கொண்டே இருக்கிறார்.

(சிவன் சங்கராப்ரணம் பாடிக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய் த்வனியைக் குறைத்துக்கொண்டு வருகிறார். கடைசியில் அவ்யக்த நாதமாய் நிற்கிறது.)

கோவிந்து ராமதாஸ் ஆனகதை.

'வில்லன்'

"சே! இது என்ன வாழ்வு? மனிதத் தன்மை, வீரம், தீரம், பராக்கிரமம், புத்தி சாதுரியம் ஏதேனும் இதில் உண்டா? வயிறு கழுவதுதானா ஒரு பெரிய காரியம்? தெருவில் அலையும் நாய்கூட எச்சிற் கலையைப் பொறுக்கித் தின்று பிழைத்து விடுகிறது. வாழ்க்கையில் வேறு லட்சியம் ஏதொன்றுமில்லையா? போதும், இனி இப்பிழைப்பு எனக்கு வேண்டாம்."

இவ்வண்ணம் முடிவு செய்தான் ஒற்றைக் கண்ணன் கோவிந்து.

அவன் நகரின் ஒதுக்குப்புறத்தில் அசுத்தமான ஒரு சேரியில் இடிந்துபோன குடில் ஒன்றில் வாழ்ந்து வந்தான். பகவான் அவனுக்கு இருகண்களையும்தான் படைத்தார். ஆயினும் அவன் ஒற்றைக் கண்ணனாயிருந்து ஒற்றைக்கண்ணன் என்றே பெயர் பெற்றான். அவனது தகப்பன், சிற்றப்பன், மாமன், தாயாதிகள் முதலியோரனைவரும் பிச்சைத் தொழிலாற்றிப் பெரிதும் சம்பாதித்தனர். அவர்களிற் சிலர் கண்ணிருந்தும் குருடனைப் போலவும், காலிருந்தும் நொண்டியாகவும், கையிருந்தும் முடமாகவும், முதுகிருந்தும் கூனாகவும், வாயிருந்தும் ஊமையாகவும் வெகு தந்திரமாகப் பாசாங்கு செய்து பல வருஷங்களின் பயிற்சியினால் இயற்கைக் குருடன், நொண்டி, முடவன் கூனன்போலவும் ஆய்விட்டனர். தனது முன்னோர்களைப் பின்பற்றின கோவிந்தும் பிறவியிலேயே ஒற்றைக்கண்ணனைப் போலாகி, தொழிலில் தேர்ச்சியடைந்து அதிக லாபம் திரட்டினான்.

ஆனால் அவனது உள்ளத்தில் சிறிதளவும் சந்துஷ்டியேற்படவில்லை. தேகபலமும், புஜபலமும், சுறுசுறுப்பும், துணிச்சலும், புத்தி கூர்மையுமிருக்க, பிச்சைக்கலயமேந்தி வீடுவீடாக ஏறிச் செல்லுவது ஈனமென்பதையுணர்ந்தான். மேலும் தான் மேலானதொரு தொழில் செய்யப் பிறந்திருப்பதாகவே எண்ணினான். உள்ளத்தில் பேராசை குடிகொண்டது.

ஒற்றைக்கண்ணன் எங்கேயே மறைந்து விட்டான். பிச்சைக்காரக் கோஷ்டியுடன் அவனைக் காணாத ஊரார்கள் "அவனெங்கேடா கோவிந்து?" என்று கேட்கலாயினர். கோவிந்து திருட்டுத் தொழிலில் இறங்கியிருந்ததை அநேகர் அறியார்.

கோவிந்து முதலில் சந்தைக்குச் செல்லுவோரை வழிமறித்துக் கொள்ளையிடவும், சிறு கடைக்காரர்கள் நடுப்பகலில் தூங்கி விழுகையில் போணிப் பெட்டியைத் திறந்து காசைக் கொள்ளையடிக்கவும் ஆரம்பித்தான். பின்னர் நாற்சந்திகளில் முடிச்சவிழ்த்தான். மெல்ல மெல்ல நன்றாகக் காவல் போட்டிருந்த வீடுகளிலும் நுழையவாரம்பித்தான். நாளடைவில் ஒரு சிறு கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைவனாகி, பெரிய ரஸ்தாக்களில் சென்ற வியாபாரிகளைத் தாக்கிப்பணம் பறித்தான். சுற்றுப் புறத்திலுள்ளவர்கள் அவனது வீரத்தைப் புகழ்ந்து பேசினர்.

அவனது ஆசை இதோடு முடியவில்லை. அரசனது கஜானாவை எப்படியேனும் கைப்பற்ற எண்ணங்கொண்டான். கொள்ளைத் தொழிலில் விருத்தியடையயடைய இவ்வெண்ணமும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது.

இவ்வெண்ணம் அவன் மனதில் குடிகொண்டபோது அவனுக்கு வயது இருபத்தைந்து. தனது எண்ணத்தை நிறைவேற்றுவதற்கான வழிகளையெல்லாம் நன்காராய்ந்தான். கஜானாவைக் காக்கும் பாராக்காரர்களும் அரண்மனைச் காவற்காரர்களும் மதுபானக் கடையில் ஒன்று கூடுவதையறிந்து தானும் அங்கு சென்று அவர்களுடன் பழகிப் பல உளவுகளையறிந்தான். பாராக்காரர்கள், காவற்காரர்கள் யார்யார், எந்தெந்த நேரங்களில் யார்யார் மாறுகின்றனர் முதலிய எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டான். அரண்மனையின் ஆறு சிறுமதில்களையும் தாண்டி மூன்று கதவுகளையுடைய ஒரு சுரங்க அறையில், தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்

கார், முதலியன அடங்கிய கஜாணு பெட்டி இருப்பதை அறிந்து கொண்டான். இவ்வளவு மதில்களையும் வாயில்களையும் தாண்டி சுரங்க அறைக்குள் நுழைய எத்தனிப்பது ஒரு பைத்தியக்காரயோசனை யென்பதை அவனும் உணர்ந்தான். ஆயினும் பகவான் அவனுக்கு அபார நம்பிக்கையும் விடாமுயற்சியும் பொறுமையும் அளித்திருந்தபடியால், அவனது கருத்தைக் கைவிடாமலிருந்து வந்தான்.

ஒரு நாளிரவு எவருமறியாமல் சேரியிலிருந்து கிளம்பி, நகரத்தைத் தாண்டி அதற்கப்பாலுள்ள பலகிராமங்களையும் கடந்து சென்று ஒரு மலையடிவாரத்தை யடைந்தான். அங்கிருந்து தினந்தோறும் இரவில் மாறுவேடம் பூண்டு குக்கிராமங்களுட்சென்று சிறுகளவுகள் செய்து ஜீவித்து வந்தான். இவ்வண்ணம் பன்னிரண்டு மாதங்கள் அஞ்ஞாதவாசம் செய்துவந்ததின் பலனாக அவனது உருவம் முற்றிலும் மாறிவிட்டது. அவனுடன் நெருங்கிப் பழகினவர்களும் அவனை எளிதில் கண்டு பிடிக்க முடியாது. தனது பெயரையும் ராமதாஸ் என மாற்றிக் கொண்டான். ஒரு நாள் மலையடிவாரத்தை விட்டு மீண்டும் நகரத்திற்குச் சென்றான்.

ராமதாஸ் வாட்டசாட்டமாயிருக்கக் கண்ட அரண்மனைக் காவற்காரர்கள் அவனையும் ஒரு காவற்காரனாகச் சேர்த்துக் கொண்டனர். இவ்வேலையில் வருஷா வருஷம் படிப்படியாக ஏறி, கடைசியாக ஆறும் மதிலின் பிரதம வாயிற்காப்போனாக ஆனான். தனது ஒழுங்கினாலும் கண்டிப்பினாலும், யோக்கியப் பொறுப்பினாலும் அதிகாரிகள் ஒவ்வொருவருடைய நன்மதிப்பையும் பெற்றான். நாளடைவில் கஜாஞ் அதிகாரியின் நட்பும் அவனுக்குக் கிடைத்தது. வெகு சீக்கிரத்திலேயே கஜாணுவின் முதற்கதவுக்கும் இரண்டாம் கதவுக்கும் பாராக்காரனாக நியமிக்கப்பட்டான். இது சமயம் அவனுக்கு நேர்மேலாக உத்தியோகத்திலிருந்தது கஜாணு அதிகாரியான 80 வயதான ஆத்மாராம் என்பவர் ஒருவரே. இவரிடமே மூன்றும் கதவின் சாவிகளிருந்தன. கிழ ஆத்மாராம் உயிர் துறந்தால் அரண்மனை விதிப்படி ராமதாஸே கஜாணுதாராக வரவேண்டியது. இதற்காகத்தான் ராமதாஸ் பத்து வருஷங்கள் காத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் ஆத்மாராம் நோய்வாய்ப்பட்டு திடீரென இறந்தான். இருபத்தைந்து வருஷங்கள் மிகவும் நாணயத்துடனும், பொறுப்புடனும், பொறுமையுடனும், ராஜவிசுவாசத்துடனும் உழைத்து வந்த ராமதாஸே கஜாணுதாராக நியமிக்கப்பட்டான். ராமதாஸின் எண்ணம் கைகூடும் சமயம் வாய்த்துவிட்டது.

ராமதாஸ் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டபோது கஜாணுவின் ஐந்து சாவிகளும் அவனிடம் ஒப்படைக்கப்பட்டன. சாவிகளைக் கையில் வாங்கும்போது அவனுக்கு மயிர்கூச்செறிந்தது. இது கனவா நனவா என அவன் பிரமித்துப்போனான். அன்றைபதினம் மாலை கஜாணுவைத் திறந்து பொக்கிஷத்தைக் கண்ணால் பார்த்தான். இதற்காகவே அவன் தனது இளமையையெல்லாம் தியாகம் செய்தானல்லவா? அதை நினைக்கையில் அவனது இதயம் அவனை இறுக்கியது. சிறு வயதில் சிறு காசுகளைப்பெற அவன் பட்டபாடெல்லாம் நினைவுக்கு வந்தது. இதுசமயம் அவனுக்கு வேண்டிய தங்கத்தையும் முத்தையும் பைக்குள் போட்டுக்கொண்டு கிளம்பிவிட வேண்டியதுதான். அவனிடம் முன்னமே பத்துப்பைகள் தயாராகவிருந்தன. அவைகளை நிரப்பித் தனது மேற்போர்வைக்குள் மறைத்துக்கொண்டு அரண்மனைக்கு வெளியே சென்றுவிடலாம். அரண்மனையின் வாயிற்காப்போனவரையும் அவன் அறிவான். அவனை எவரும் தடுக்கவோ சந்தேகிக்கவோ துணியார்கள். அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதேயில்லை. முத்துக்களைப் பார்த்துக்கொண்டே கையால் அள்ளினான். ஆனால் கையிலிருந்து பைக்குள் போட்டுக்கொள்ள மட்டும் அவனது கை ஓடவில்லை. அப்படியே சற்றுத் தயங்கினான். இதென்ன விபரீதம்! கைக்கெட்டினது வாய்க்கெட்டாத கதையாயிருக்கிறதே. அவனது இளவயதில் இருந்துவந்த சூடும், உற்சாகமும் வேகமும் எங்கு சென்றன? கைகள் வெடவெடென நடுங்கவாரம்பித்தன. அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. அவன் அரண்மனை உத்தியோகத்தில் தலை நரைத்துவிட்டான். அவன் காட்டிய சுறுசுறுப்புப், யோக்கியதையும், கண்டிப்பும், உண்மையும், வெளி

(380ம் பக்கம் பார்க்க)

(348ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பின்னரே இவை யெல்லாம் புத்தக வடிவில் வரலாயின.

இக்கவிதைகளுள் "காதலும் சாதலும்" என்னும் இதிகாச காவியம் மிகச் சிறப்புடையது. இக்காவியத்தை அவர் தமது 27ம் வயதில் (1896) எழுதினர். இதில் உலகத் தொல்லிலக்கியங்களில் காணப்படும் நடையின் இனிமையும், உயர்வும், வேகமும், மெல்லிய இந்திரஜாலமும், எல்லாம் பொருந்தியிருக்கின்றன. இக்காவியத்தின் கதை பின்வருமாறு.

சியவன புத்திரனாகிய ருரு கானத்தில் தனது இளமனைவியாகிய பிரியம்வதையுடன் களித்திருந்தான். ஒருநாள் காலை அவளை விட்டுப்பிரிந்து வெகுதூரஞ்சென்று அலைந்து திரிந்து இயற்கையின்பத்தில் திளைத்துத் திரும்பி வந்தபோது பிரியம்வதை அரவம் தீண்டப்பெற்று துடிதுடித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் உயிர்விட்டாள். அவளது உடலைச் சில வனதேவதைகள் தூக்கிச் சென்றன. ருரு பிரிவாற்றாது ஓலமிட்டழுதான். ஒரு அசுவத்த மரத்தில் காமன் ஒரு அழகான சிறுவன் வேடம் பூண்டு வில் அம்புடன் தோன்ற, ருரு தனது துயரத்தை அவனுக்கறிவித்தான். காமன் இரங்கி அவனுக்கொரு மலர் தந்து, கங்கை கடலிற் கலக்குமிடம் சென்று சமுத்திர ராஜனையணுகி அவனுதவியை நாடும்படி கூறி மறைந்தான். ருரு அவ்விதமே செய்து மலருடன் கடலில் மூழ்கினன். பாதாளத்திலுள்ள பல லோகங்களைக் கடந்து சென்று அங்கு வேதனைப்படும் ஜீவன்களை யெல்லாம் கண்டு பிரியம்வதையைப் பற்றி வினவிக் கொண்டே சென்று கடைசியாக சிம்மாசனத்தில் வீற்றிருந்த யமதர்மராஜனை யடைந்தான். அவனது கையிலிருந்த மலர் அவனைக் காத்தது. தர்மராஜன் பிரியம்வதையைப் மீளப்பெற அவனது பாதி ஆயுளைத் தர வேண்டுமென்றான். ஆனல் ஆயுளை வைத்துக் கொண்டு சர்வ நலங்களையும் பெற்று கடைசியாக முதுமைப் பருவத்தில் ஈசுவரனையும் தரிசிக்கலாமென்றும், ஒரு பெண்ணுக்காக ஆயுளைத் தியாகம் செய்வது முறையாகாதெனவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ருரு பிடிவாதமாக நின்று பிரியம்வதையின் பொருட்டுத் தனது பாதி உயிரைத் தத்தம் செய்தான். முடிவில் கடைசி நரகத்தில் காதலியைக் கண்டான். அவளைத்தொட அவள் உயிர்பெற்றுஎழுந்தாள்.

இக்காவியத்தில் காதலர்களின் காதலின்பமும் பிரிவாற்றாமையின் துன்பமும், மதனன் தனது பிரபாவங்களை ருருவுக் குறைத்தலும், பாதாளங்களின் வருணனைகளும், யமதர்மராஜனின் உபதேசமும், ஸ்ரீ அரவிந்தரது கற்பனைத் திறமையையும் அருட்புலமையையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றன.

"பாஜி பிரபு" என்பது ஸ்ரீ அரவிந்தர் எழுதிய மற்றுமோர் இதிகாச காவியம். இது வேறு போக்குடையதாயினும், மேலே சொன்ன காவியத்திற்கு எவ்விதத்திலும் தோற்றதல்ல. மொகலாயருடன் விடாது போர் புரிந்த சிவாஜி சற்றுப் பின்வாங்கி ராஜகிரஹத்துக்குச் சென்று புதிய முஸ்திப்புடன் திரும்பி வர வேண்டியிருந்த நிலைமையில், பின் தொடர்ந்த நிலைமையில், பின்தொடர்ந்து வந்த 12,000 சிப்பாய்களடங்கிய மொகலாயப்படையைத் தடுத்து ரங்கண்ண கணவாயை 50போர் வீரர்களுடன் காத்த பர்ஜிபிரபுவின் வீர சரித்திர நிகழ்ச்சியை ஆதாரமாகக்கொண்டு இது எழுதப்பட்டது. இக்காவியத்தில் ஸ்ரீ அரவிந்தர் பக்தர் ராமதாசரிடமிருந்து அருளும் ஆவேசமும் பெற்றவரும் பவானி தேவியின் தாஸன் என்றெண்ணியே கருமம் செய்தவருமான, சிவாஜியின் தலைமையின் கீழ்க் கிளம்பின மாராத்தியரின் வீரத்தையும் ஆத்ம சக்தியையும் நன்கமைத்துப் பாடியிருக்கிறார். வீரத்தையும் நாட்டுப்பற்றையும் தூண்டும் இக்கவிதை அவர் நமக்களித்த நன்கொடைகளில் சிறந்தவொன்றாகும்.

"அஹனவும் இதர பாடல்களும்" என்னும் பெயருடன் புதுவையில் முதன் முதலாக புத்தகவடிவில் வெளிவந்த கவிதைகள், அநேகமாக ஸ்ரீ அரவிந்தர் பரோடாவிலிருக்கும்போதே எழுதப்பட்டவை. அத்தியாத்ம யோக மார்க்கத்தில் சென்றுகொண்டிருந்த ஸ்ரீ அரவிந்தரின் உள்ளநிலை அவ்வகளில் காணப்படு

கின்றபடியால் அவை வேறொரு ரகத்தைச் சேர்ந்தவை யென்றே சொல்லவேண்டும். வேறொரு ரகமென்றால் ஸ்ரீ அரவிந்தர் கவிதையை வெறும் தத்துவமாக ஆக்கி விடுகிறாரென்றோ, தத்துவத்தைப் பிரசாரம் செய்ய கவிதையை ஒரு சாதனமாக ஆக்கிவிடுகிறாரென்றோ, அர்த்தமாகாது. ஏனெனில் கவிதை பூரணம் பெற்று அது உண்மையாக நாடுவதை அடைய வேண்டுமென்பதே அவரது கருத்து. இதைச் சற்று விளக்குவோம்.

கலைஞன் பிரத்யக்ஷ உலகைப் படம் பிடிப்பதே தனது குறியெனக் கொள்ளுவதில்லை. அவன் வெறும் புலனறிவோடு நின்று விடுவானாகில் அவனது கவிதை ஆழமும் உயர்வுமின்றி அரைகுறையாகவே இருக்கும். அவன் தரிசித்து வரையும் உருவததில் தோற்றத்திற்குப் பின் மறைவாயுள்ள அவனது ஞான திருஷ்டியும் உணர்வும் சிந்தனைகளும் வியாபித்து இயங்குகின்றன. அவன் காணும் ஒவ்வொரு உயிரின் உயிர்த்துடிப்பையும் அதற்கு அதீதமாயுள்ள உயிரின் தீவிரப்போக்குடன் இசைக்கிறான். இந்நிலையில் அவன் காணும் ஒவ்வொன்றும் பிரபஞ்சசக்தியின் அம்சங்களாக ஆகின்றன. அவனதுள்ளம் அச்சக்தியின் க்ஷேத்திரமாயிருப்பதால் உலகப் பன்மையெல்லாம் ஒருமையாக விளங்குகிறது. அவனது இத்தகைய திருஷ்டி ஞானிகளின் அகப்பார்வையை ஒத்திருக்கிறதென்னலாம். இந்த திருஷ்டியை அவன் கவிதையில் உவமை முதலிய உருவக அலங்காரங்கள் மூலம் வெளியிடுகிறான். பிரபஞ்சத்தில் மறைந்துள்ள இசைகளை வெளிப்படுத்துவதே சொல் அணிகளின் வேலையல்லவா? அவன் இவ்வண்ணம் அவ்வப்போது அனுபவிக்கும் ஆவேசத்தையோ ஆதர்சத்தையோமட்டும் வெளியிடும் கருவியாகக் கவிதையைக் கருதுவானாயின், அத்தகைய கவிதை சாதாரண கவிதையைவிட சிரேஷ்டமாயிருக்கக் கூடுமாயினும் உன்னதமான கவிதை யாகாது; அவனது சிறந்த பாவங்களின் இசைகளை நீடித்த நிரந்தரமான அனுபவங்களாக ஆக்கிக் கொள்ளாதவரையில் அவனது கவிதை உண்மையாக நாடுவதை அடையவோ, அல்லது அதன் உள்ளுயிர் மகோன்னதமான பரிபூரண வாக்கில் விடுதலையடையவோ முடியாது. யோகப்பயிற்சியினால் தான் கவி இந்நிலையை, இப்பரந்த நிரந்தரமான உணர்வை யடையமுடியும். யோக நிலையில் தான் கவிதை ஆனந்தத்தின் ஜோதியாகவும், சாதாரண நடைமுறை உலகின் ஊடேயும் பிரபஞ்ச ரகசியத்தை மக்களுக்குணர்த்தும் நிரந்தரமான இசையாகவு மிருக்க முடியும். கவிதையை இந்நிலைக்கு உயர்த்துவதே ஸ்ரீ அரவிந்தரது நோக்கம். இத்தகைய கவிதைக்கு "அஹனாவும் இதர பாடல்களும்" இலக்கியமாக விளங்குகின்றன,

இக்கவிதைக் கொத்தில் உபநிடதம் போன்று சிறந்து விளங்குவது 'ரிஷி' என்னும் பாடல். இதில் துருவ கண்டமிருந்தபோது அதில் வசித்த ரிஷியொருவரும் பிரம்மவித்தையை யறிய நாட்டங் கொண்ட மனு ராஜனும் சம்பாஷிக்கின்றனர். ரிஷி அவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் உத்தரம் சொல்லியும் யோக அறிவின் பலஅம்சங்களைப் பற்றிப் பேசியும், கடைசியாக, வெறும் வரட்டுத்துறவல்ல, நிர்வாணமல்ல, இப்புவியின் வாழ்க்கையிலேயே மனுதீதமான உயர் நலங்களைக் கீழேகொண்டு வந்து வெளிப்படுத்துவதே வாழ்க்கையின் லட்சியமென உபதேசம் செய்கிறார். இச்சம்பாஷணையின் கடைசிவரிகள் பின்வருமாறு :

ரிஷி :

செஞ்சுடர்ப் பூரணனது பொறிகளே நாம். அவ்வாழியின் அலைகளே நாம்; அவனிடமிருந்தே நாம் வருகிறோம்; அவனிடமே செல்லுகிறோம்; அவனையே எக்காலமும் விரும்புகிறோம்; அவனது திருவுள்ள முள்ளவரையில் நமது தனிப்பிறவியுமிருக்கும்.

ஆரியனே! வாழ்விலிருந்து பின் வாங்காதே. அவன் புரியும் நன்மை, தீமை, பாவ புண்ணியங்களை, மகிழ்வுடன் ஏற்று அவன் உத்தரவளிக்கும் வரையில் அனுபவி.

ஆனால் உயிருள்ள வரையில் உனது வினையை முழுதிலும் ஆற்று. உலகம் உனது அரங்க மேடை யென்றும், நீ திறமையுள்ள நடன் என்றும், அவன் நாடக மென்று மறி.

பணி செய். ஆனால் எல்லாமாயிருக்கும் பரமனுக்கே பலன் உரியது. இறைபணி, பதிபக்தி, பதிஞானம், இவற்றின் மூலமாகவே உனது ஜீவன் இறவா ஆனந்தமெய்தும்.

தியாகய்யர் அவர்களின் ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள்.

(பிரம்மஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள்)

பல்லவி

ஸ்ரீ நாரத! நாத ஸரஸீருஹ ப்ருங்க!
சுபாங்க!

அனுபல்லவி

தீனமானரக்ஷக! ஜகதீச! பேசஸங்காச!

சரணம்

வேதஜனித! வரவீணாவாதன தத்வஜ்ஞ!
கேதகரத்ரிதாபரஹித! கேசரவினுத!
யாதவகுலஜாப்த ஸதா மோத ஹ்ருதய!
முனிவர்ய!
ஸ்ரீத! த்யாகராஜனுத ஸ்ரீகர! மாம்பாலய.

ஸ்ரீநாரத—ஏ நாரதஸ்வாமி !

நாதஸரஸீருஹ ப்ருங்க—நாதமாகிற தாமரை புஷ்பத்திலிருக்கும் வண்டு போன்றவரே !

சுபாங்க—வெண்ணிறமுடைய அழகிய சரீரமுடையவரே !

தீனமானரக்ஷக—எளியவரின் மானத்தை காத்தருளுபவரே!

ஜகதீச—உலகத்திற்கதிபதியானவரே!

பேசஸங்காச—சந்திரனைப் போல் பிரகாசிப்பவரே!

வேதஜனித வரவீணா வாதன தத்வஜ்ஞ—வேதத்தினின்றும் உதித்த ச்ரேஷ்டமான வீணையை வாசிப்பதின் மர்மம் அறிந்தவரே!

கேதகர் த்ரிதாப ரஹித—துக்கத்தை தருகின்ற ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்களாகிற மூவகைத் தாபங்களால் தாக்கப்படாதவரே!

கேசரவினுத—தேவர்களால் புகழப்பட்டவரே!

யாதவகுலஜாப்த ஸதாமோதஹ்ருதய—யாதவகுலத்துதித்த ஸ்ரீகிருஷ்ணபகவானால் அடையப்பட்டு என்றும் ஆனந்த பரிதமான ஹ்ருதயத்தை யுடையவரே!

முனிவர்ய—மஹர்ஷி ச்ரேஷ்டரே!

ஸ்ரீத—மங்களத்தை கொடுப்பவரே !

த்யாகராஜனுத ஸ்ரீகர—தியாகராஜனால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு அவனுக்கு க்ஷேமத்தை யளிப்பவரே !

மாம்—என்னை பாலய—ரட்சிப்பீராக.

இந்த கீர்த்தனமானது தியாகய்யர் அவர்களால் தனக்கு "ஸ்வரார்ணவம்" என்ற உயர்ந்த சங்கீத சாஸ்திரத்தை கொடுத்துதவிய குருச்ரேஷ்டரான நாரதஸ்வாமியின் பேரில் முதல் முதலாக பாடப்பெற்றதென்று சொல்லப்படுகிறது. இது அழகான ஸம்ஸ்கிருத நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இக்கீர்த்தனத்தில் ஸம்ஸ்கிருத கவிகளின் நடையை யொட்டி 'ரூபகம்' 'உவமை' என்ற அலங்காரங்களும் நேர்மையான சமாஸங்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இக்கீர்த்தனத்திலிருந்தும் பல ஸம்ஸ்கிருத கீர்த்தனங்களிலிருந்தும் தியாகய்யர் அவர்கள் ஸம்ஸ்கிருத ஸாஹித்ய மார்க்கத்தில் நன்று பழகியவரென்றே வெளியாகிறது. இக்கீர்த்தனத்தில் நாரதருக்குரிய பல ஸம்போதனங்கள் உள. இந்த ஸம்போதனங்களினால் அய்யர் அவர்கள் தனது குருவான நாரதஸ்வாமியின் பெருமைகளைப் போற்றுகிறார். ஸ்ரீநாரதர் அழகிய வனப்புடையவரும் சந்திரன்போல் பிரகாசிக்கும் வெண்ணிறம் வாய்ந்தவருமாவார்.

அவர் தேவரிஷிகள் முதன்மையானவர். ஸதா பகவத்குணங்களை கானம் செய்துகொண்டு இருப்பவர். அவர் கையிலிருக்கும் 'மஹதீ' என்ற வீணையானது வேதங்களிலிருந்து உற்பத்தியானது. ஸ்ரீநாரதர் கானரஸத்தை, வண்டு தேனை உண்டு களிப்பதுபோல், என்றும் பருகி மகிழ்கின்றார். தாமரையை வண்டு சுழன்றுவரும் ஸங்கீதத்திற்கு ஸூக்ஷ்ம ஸ்வரூபமான நாதத்தில் நாரதர் ஈடுபட்டவர். நாதத்தை தாமரஸப் புஷ்பமாயும், நாரதரை அதில் மொய்க்கும் வண்டாகவும் வர்ணித்தது புதுமையாயிருந்தாலும் மிக்க கம்பீரமான மனோபாவங்களை புகட்டக்கூடியதாயிருக்கிறது. பத்மம் நாதமெனப்பட்டாலும் நாம் கேட்டு ஆனந்திக்கக்கூடிய ரீங்கார த்வனியானது வண்டினிடத்தில்தான் அமைந்திருக்கிறது! இதனால் நாதப்ரும்மத்தை உபாஸித்து கான தத்வத்தை அறிந்து வெளிப்படுத்தியவர் ஸ்ரீநாரதஸ்வாமி என்பது பொருள்.

இதுமட்டுமா! மேல் விவரிக்கபபட்ட பல்லவி ஸாஹித்யம் கானடா ராகத்தில் ரீங்கார ப்ரதானமான "க்ரஹத்தில்" அமைக்கப்பெற்றிருக்கிறது. ஷட்ஜமாகிற நாத ப்ரும்மத்தை ரிஷபரூபமாகவும் நிஷாதரூபமாகவும் த்வனிக்கும் கானப்ருதமாகிய வண்டு சுழன்று சுழன்று வருவதால் கீதத்தின் தாத்பர்யார்த்தம் கேட்போர்களின் அந்தராத்மாவில் ஊடுருவிப் பாய்ந்து பூரிக்கச் செய்கிறது.

இவ்விதமல்லவா தியாகைய்யரின் கிருதிகளின் அமைப்பு. அவைகளை ஆத்மானுபவத்திற்குக் கொண்டுவந்து கனிந்து சுரந்து மெய்மறந்து ஆனந்திப்பவர் தன்னியராவர்.

குறிப்பு :— புஸ்தகங்களில் "பேஷஸங்காச" என்றிருப்பதை "பேச" என்று திருத்தி அர்த்தம் செய்யப்பட்டு இருக்கிறது.

(381ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று, இதைப்போல நூறு பங்கு அபசாரம் செய்திருந்தபோதிலும் மனமுருகி ஒரு ஸாமத்தைச் சொல்லித் துதித்தாலும் போதும், பகவான் அவனுக்கு வசமாகி விடுவார். ஸாமத்தில் அவ்வளவு பிரியம் பகவானுக்கு. அது ராவணனுக்குத் தெரியும். ஸாமத்தில் பகவானுக்கு எவ்வளவு பிரியமோ, அதைவிடப் பிரியம் தேவியான மலைமகளிடம். அதுவும் ராவணனுக்குத் தெரியும். அவன் மலையைத் தூக்கினதுதான் தாமதம், அதுவரையில் பிணங்கி பகவானுடன் உரையாடாமலிருந்த பார்வதி பயந்து பரபரப்புடன் தானேவலிந்து பகவானை ஆலிங்கனம் செய்தாள்; பார்த்தார் பகவான், இம்மாதிரி தேவியைக்கொண்டு நம்மை மகிழ்வித்தவன் யார் என்று. பத்து வாய்களிலிருந்து எழுந்த ஸாம கான வெள்ளம் பெருமானைத் திருமஞ்சனமாட்டியது. 'ராவணா! நீ கோருவது என்ன?' என்றார் பகவான். ராவணனும் "ஸ்வாமி! தங்கள் கட்டைவிரல் என்னை நசுக்குகிறது. என்னை உயிருடன் விட்டால் போதும்" என்றான். அப்படியே அவனுக்கு உயிர்ப்பிச்சை தந்தருளினார். அதன் பிறகு ராவணன் தண்டகாரணியத்திலுள்ள ரிஷிகளின் மூக்கையும் காதையும் தன் ராக்ஷஸர்களைக் கொண்டு அறுத்து ஹிம்சித்ததும், அதற்குப் பிரதியாக ராமன் சூர்ப்பணகையின் மூக்கையும் காதையும் அரிந்ததும், பிற கதைகளும் ராமாயணத்தில் காணக் கிடக்கின்றன. ஆனால் சிவபிரானிடமிருந்து தப்பின பிறகு, ராவணன் பஞ்சவடிக்கு வடக்கே காலடி கூட வைத்ததில்லை. பஞ்சவடியில் புகுந்தபோதும், ஒரே தலையுடன் ஸன்னியாசி வேஷம் தரித்தே வந்தான்.



மொழிபெயர்ப்புப் பகுதி.

*“ கிராதார்ஜுநீயம் ”

(ஸ்ரீ வாதூலன்.)

நாடக பாத்திரங்கள்.

ஸூத்திரதாரன் :	நூலைப் பயிலுவிப்போன்
ஸ்தாபகன் :	ஸூத்திரதாரனின் நண்பன்
ஸித்தாதேசன் :	யக்ஷன்
கிராதார்ஜுனன் :	வேடுவ வேடம் புனைந்த மத்தியம பாண்டவன்
சார்தூலன், கண்டீரவன்	வெள்ளியங்கிரியில் வாழும் வேடர்கள்
கோமாயுகன் :	ஹரகிராதனின் வேவாள்
மஹேந்திரன் :	விண்ணவர் தலைவன்
ஹரகிராதன் :	வேடுவ வேடம் புனைந்த சிவபெருமான்
ஹரதுரியோதனன் :	சுயோதனன் வேடம் புனைந்த சிவபெருமான்
சங்கரன் :	கைலாசபதி

நீரர மகளிரின் விமானத் தோற்றங்கள்.

இடம் : கங்கையின் தீரத்தேயுள்ள கைலைமலைச் சாரல்.

---

* அமாத்ய வத்ஸராஜனால் இயற்றப்பட்ட ‘கிராதார்ஜுநீயம்’ என்ற வியாயோகத்தை மொழி பெயர்த்தது.

கிராதார்ஜுனீயம்.

போற்றுதும் போற்றுதும் பேரருட் பேறப்
போன்னின் போலிந்த கபோலம்
முக்கணன் விரும்பி முத்த மிட்டதால்;
ஆங்கு,

ஆற்றுதும் ஆற்றுதும் அநங்கன் ஆற்றலை
அன்பி னேகிழ்ந்து அம்மை பெருக்கிய
உடலஞ் சிலிர்த்த வடைவால்
ஏற்றிய வில்லோடு எய்த்தனன் மதனன்.

(நாந்தியின் முடிவில்)

ஸூத்ரதாரன் :—யார் அங்கே?

(ஸ்தாபகன் பிரவேசம்)

ஸ்தாபகன்:—கூறுவது என்ன? தாங்களோ சைவர்? சிவபெருமானைக் குறிப்பிக்கின்றவை களும், வீர ரஸத்தை மிகுதியும் பெற்றவை களுமாகிய வேறு மங்களகீதங்களையும் பாடுவீ ராக.

ஸூத்ர :—(முகமலர்ச்சியுடன்) ஐய! அது எவ்விதம் முடியும்?

ஸ்தா :—ஆர்ய! பாடுங்கள்!

ஸூத்ர :—

நன்மை பயக்குக நம்பனின் சூலம்
வன்கண னந்தகன் வலிபெறு வுடலாங்
குடையிற் கோத்த காம்பா மஃதே;
இடையிற் பைந்தொடி ஏந்தி யன்று
அரக்கர் வேவப் பாய்ச்சியது மஃதே;
உம்பர் கோனின் உரமுடை வஜ்ரம்
தம்பித் தோவியமாகச் செய்தது மஃதே;
மன்னொளி வீசும் பிறைசூடியின்
நன்மை பயக்குநெடுஞ் சூலம் வாழ்க.

இப்பொழுது என்ன செய்யவேண்டும் என்று கூறுவாயாக!

ஸ்தா :—பெரியோய்! காலஞ்சர தேசத் தலைவனும், வீரச்சுவையினையே பிரதானமா கக் கொண்டவனுமாகிய த்ரைலோக்யவர்ம தேவன் என்ற அரசனால் வத்ஸராஜா என்ற கவி இயற்றிய "கிராதார்ஜுனீயம்" என்ற "வ்யாயோக"த்தை அபிநயிக்கும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறது. அதனாலேயே என்னால் வீர ரஸத்தை உணர்த்தக்கூடிய நான்கு மங்களகீதங்கள் பாடப்பட்டன.

ஸூத் :—(ஸந்தோஷத்துடன்) தகுந்தவை களே!

கார்மேனியும், கட்டமைந்ததால் அழகிய தும், பத்மங்களாகிற கரங்களின் நுனியில் தாலாட்டப்பெற்றதும், சுழன்று திரிவதால் மனதைப் பறிக்கின்ற அழகு பொருந்தியது மாகிய உடைவாள் எனும் கொடிதான் த்ரை லோக்ய வர்ம ராஜனுடைய மனதிற்கு ஆனந் தத்தை விளைவிப்பது, : இராசமாதேவி எனும் கொடி அல்ல.

(சிந்தித்து மகிழ்ச்சியுடன்)

வத்ஸருடைய கவிதையோ மிகவும் சிறந் தது. நடிகர்களோ நாடக உறுப்புக்களை நன்கு உணர்த்துவதில் திறமையுள்ளவர்கள்; சரித்தி ரமோ இம்மைக்கும் மறுமைக்குமாய புனித மான 'சிவார்ஜுனனை'ப் பற்றியது. மண் ணும் விண்ணும் நன்மையுறக் காரணமாகிய கட்டளையே அளித்துள்ளார். இப்பொழுது மன்னர்பிரானால் இக்கட்டளை அளிக்கப்பட் டது.

அறிஞ! சரித்திரத்தை அபிநயிக்க எப் பொழுது குறிப்பிடப் பட்டிருக்கிறதோ?

ஸ்தா :—பூஜ்ய! இயற்கையின் களிப்பாகும் இம்மாலைவேளையேதான், நிச்சயம். இதோ,

வெள்ளை மதியும் கிழ்த்திசையில் தனது உதயத்திற்குக் காரண பூதரான சிவபெருமா னையும் விளங்கச் செய்துகொண்டு இருளை அகற்றி உலகிற்கும் மிகுந்த ஆனந்தத்தை விளைவிக்க எழுகின்றான்.

சந்திர குலத்தவனை அர்ஜுனனும் பரம சிவனைத் துதித்து முன்னிலைப் படுத்திக் கொண்டு அஸ்திரம் பெற்று எதிரிகளை இற கொடிந்த பறவைகளை யொப்ப நாசமாக்கி உலகை மகிழ்விக்கப் போகின்றான்!

(திரைக்குள்)

நன்று! நட படு! நன்று! இப்பொருளைக் கேட்டேன்; இப்பொருள் அமைந்த கீதம் நலம் பயக்கட்டும்.

ஸுமித்ர :—(நன்கு கேட்டு மகிழ்வுடன்) ஐயன்மீர்! ஹிமயமலைச் சாரலில் தவஞ்செய்து கொண்டிருக்கின்ற அர்ஜுனனுடைய நண்பனும், வியாஸமுனிவரால் அனுப்பப்பட்ட வேலைக்காரனுமான ஸித்தாதேசன் அன்றோ பேசுகிறான்! ஆதலின் நாம் பின்னர் செய்ய வேண்டியவற்றைச் சேகரஞ் செய்வோம். வாருங்கள்!

(என்று மறைகின்றனர்)

அங்கம் I　　　களம் I

(அர்ஜுனனும் ஸித்தாதேசனும் பிரவேசிக்கின்றனர்.)

ஸித்தா :—நெடியோய்! உனது விருப்பம் யாவும் நிறைவேற்றித் தரக்கூடிய நிறை செல்வத்தைப் பெற்றும் மனமுடைந்தவன் போல் காணப்படும் காரணம் என்ன?

கி. அர்ஜுனன் :—(சிற்றத்துடன்) மனமுடைந்த எனக்குப் பரிஹாரம் ஏது! எப்பொழுது எங்கள் அரசர் யுதிஷ்டிரர், யுத்த பூமியில் கௌரவர்களின் வலிய முண்டங்களுடைய நடனங்களால் கண்குளிர்ந்த ஆனந்தத்தை அநுபவிக்கின்றாரோ, அதுகாறும் அர்ஜுனனாகிய நான் பயனற்றவன்; நாண் பூட்டப்பட்ட இக்காண்டீவமும் பலமற்றதுதான். எங்கும் பரந்து திரிதல் வல்ல இவ்வம்புகளும் இப்பொழுது காலொடிந்தவைகளே.

ஸித்தா :—வாழ்வுடையோய்! ஏன் தாங்கள் இவ்விதம் வருந்துகின்றீர்? தங்களது பகைவர்களோ, வாழ்ந்திருப்பினும் மந்திரவாதியின் திரைக்குள் அழிந்து காணமற்போகும் பதுமைகள் போன்றவர்களே! இப்பொழுது தான் என்ன? தருமர்தாம் அரசராயிருக்கின்றார்! எனெனில்,

அந்தப் பகைவர்களின் ராஜ்யமோ கூற்று வந்து குடியிருக்க ஹேதுவானது; உங்களுடைய அரசுதான் மிகவும் நன்மை பயக்கக் கூடியது. மாமன்னருக்குரிய சூதாட்டத்தில் அன்று தருமர் இழந்த அரசை மீண்டும் பெற்று தர்மத்தை அபிவிருத்தி செய்யாமலா இருக்கப் போகிறார்?

மேலும்,

தாரணையுடைய வில்வித்தையிலே தேர்ந்தவனும், வாஸுதேவனின் உயிர்த்துணைவனுமாகிய தங்களுடைய கொடிய தவவேள்வியினும் துயரத்தினைப் பொறுப்பதற்காற்றும் இம்முறையை உசிதமாக நான் நினைக்கவில்லை.

கி. அர்ஜுனன் :—தோழ! முன்னவரின் கட்டளைக்கிணங்க யான் இம்முனி வாழ்க்கையை மேற்கொண்டேன்; ஸித்தாதேச! இத்தவநிலையிலும் வேறொரு மாதிரியான தவநிலையே உவந்ததாயிருக்கின்றது. கூறுகிறேன், கேள்.

அக்கொடிய கௌரவர்கள் குறிப்பிட்ட எல்லையாகிற இருட்காலங் கடந்து, அவர்களுடைய புஜங்களாகின்ற குன்றுகளில் மிகுந்த சௌரியமாகின்ற வேள்வியிடத்தில் கோபக் கனலைத் தோற்றிக் கர்வங்கொண்ட யுத்த வீரர்களின் அவயவங்களாகிற ஸமித்துக்களாலும் கொடிகளாலும் என்றும் ஹோமம் செய்யுகின்ற முனிவனாகவே இருக்க விரும்புறேன்.

மேலும்,

உரமே உருக்கொண்ட நெஞ்சையும், சிறந்த ஆயுதங்களைப் பிரயோகிப்பதில் வல்லமை கொண்ட கல்லெனும் புஜங்களையும் பெற்ற பலசாலிகளுக்கு இஃதொன்றே வழியாகும். இன்றேல், ஆயுதப் பிரயோகத்தில் மந்திரங்களை உச்சரித்தல் அவர்களுக்கு வெட்கத்தைத்தான் விளைவிக்குமென்று நான் கருதுகிறேன்.

ஸித் :—(முன்னிலையை நோக்கிக் களிப்புடன்) தெய்வானுக்கிரகத்தினால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரு

இன்றாய். உனதுவேள்வியும் வெற்றியடையப் போகின்றது. அதோ பார்! எங்கும் சூழ்ந்த வைகளும் அழகியவைகளுமாய ரத்தினங்க ளால் ஸூர்யனின் சோபையைக் குறைவு படுத்துபவைகளும், வெள்ளியங்கிரியை மேரு வாக்க முயன்றவைகளும்போன்று காணப்படு கின்ற தேவ விமானக் கூட்டங்கள் உன்னை நோக்கி வருகின்றன.

அர்ஜுனன் :—(பரிஹாஸமாக) ஆஹா! நண்பனின் விழைவு நன்றாயுள்ளது! பகை வர்களுடைய ரதங்கள் தங்கள் பார்வையில் இல்லாமலிருக்கும்பொழுது வீரத்தன்மையில் லாதவர்கள் அடைகின்ற ஸந்தோஷம் இம்மா திரிதானோ?

ஸித் :—தனஞ்ஜயன் நகைக்கட்டும். நான் மாத்திரம் ஒருவராலும் செய்யமுடியாத கடுந்தவத்தால் மிகவும் ஸந்தோஷமடைந்தவர் களான க்ருதாசீ, ரம்பா, ஊர்வசீ, திலோத்த மை முதலான அப்ஸரஸ்த்ரீகளின் விமானங் களை மீண்டும் காண்கிறேன்.

அர்ஜுனன் :—(அலக்ஷ்யமாக நகைத்து) நண்பன் என்னை ஏமாற்றும்படி என் செய்ய வேண்டும்?

யுத்தகளத்தில் சௌரியத்தைக் காட்டிச் சாவினை யடுத்த என்னையோ பகைவனையோ அழைத்துச் செல்ல வருவது எப்பொழுதோ அப்பொழுதுதான் தேவஸ்த்ரீகளின் விமானங் களை பார்த்து நான் களிப்புறுவேன்.

அங்கம் I களம் II

(திரைக்குள்)

இயமநியமங்களால் மிகவும் வாடியும், மிக வும் சோபை பூண்டதும், மிகவும் மெலிவடை ந்ததுமான இம்முனிவருடைய சரீரத்தைப் பா ருங்கள். இவ்வளவு இளைத்துங்கூடப் பிரகா சிக்கின்ற அழகின் தன்மையினைப் பாருங்கள்.

அர்ஜுனன் :—(கேட்டு) வானின்று ஸமீ பத்து இழிகின்ற அவ்விமானங்கள் எத்துணை வசீகரம் கொண்டவைகள். (துக்கத்துடன்) ஆஹா! இந்த மாரனுகின்ற விரோதி தடுக்க முடியாதவன். இவனுல் விளைகின்ற இடை யூறுகள் தடுக்கக்கூடாதவை. இந்தத் தேவஸ்த் ரீகளின் கூட்டங்கள் மன்மதனுடைய முக்கிய மான ஆயுதங்கள் அன்றோ! (விசேஷ ஊஹத்து டன்) இவைகளை எதிர்க்கும் பணியில் எந்த பாணங்கள் தான் பயனுள்ளவைகளாகும்? ஒன்றுமில்லை. சபித்தல், ஒருவன்தான் செய்த தவத்திற்குக் குறைவேயன்றி நிறைவாகாது. ஆகையால், சிற்றின்பமாகிற பெரிய நாட கத்தை நடத்துகின்ற மன்மதனுடைய திறமை வாய்ந்த நடிகைகளான அந்த தேவமாதர்களின் பார்வையைத் தடுக்க என்னதான் வழியிருக் கின்றது? ஹூம்! இருக்கட்டும், இவ்விதம் செய்வோம். (வெளிப்படையாக) நண்ப! பிறை சூடிய பெருமானின் அருளை விரும்பி வேள்விபுரிகின்ற நான் ஸ்ரீரமகளிரைக் காணு தல் நன்றோ? ஸித்தாதேச! பாணங்களால் நான் ஒரு திரைச்சீலையை அமைக்கின்றேன். (என்று கூறிய வண்ணம் திரைச்சீலையை அமைக்கிறான்)

ஸித் :—(நான்கு பக்கங்களையும் நோக்கிப் பெருவியப்புடன்) விஜய! மஹாபாக! அமிதத் தையும் சிறந்தவையான அனேகச் செல்வப் பொருள்களையும் குபேரனுடைய மனையில் நான் பார்த்துள்ளேன். இருப்பினும், இக்காண் டீவத்தாலன்றி, மற்ற தனுஸுகளையும் நெடிய கரங்களையுமுடைய வேறொரு வில்லாளி யால் அளவிடப்படாத பாணங்களைக் கொண்டு இவ்வழகிய காரியம் ஒருக்காலும் செய்ய முடி யாது.

(திரைக்குள்)

பாதாளத்தை அடைந்த கருடனைக் கண்ட மஹாநாகங்கள் மிகவும் பயந்து நடுங்கித் தமது நெடிய 'சித்'காரத் த்வனிகளுடன் வெளிக்கிளம்பினவா என்ன? பகல் நேரத்தி லுமா பரமன் ஆட விருப்பங் கொண்டுள்ளான்? அல்லது, சிவபெருமான் சடைக்குள் மறைந்த கங்காப்ரவாஹத்தால் அடக்கப்பட்ட நெற்றிக் கண்ணின் புகைச்சலோ இஃது?

(மறுபடியும் திரைக்குள்)

ஹா! என் இந்த வீண் ஊஹம்? நன்றாகப் பிரகாசிக்கின்ற பாணக்கூட்டங்களே இவை!

ரதத்தைத் திருப்புங்கள். இது ஒருபொழுதும் அஸுரக்கூட்டமாக இருக்காது. ஆதலின் தேவஸ்த்ரீகளாகிய நாம் மஹரிஷிகளின் உதவியை அண்டுவது இப்பொழுது உசிதமாகாது. தேவர்கோனைச் சார்வதுதான் தகுந்த நெறி; அதுதான் மார்க்கம். அவன்தான் இந்த ஆச்சரியத்திற்குத் தக்கவாறு எதையாவது செய்வான்.

ஸித் :—(கவனித்து) பார்த்த! தேவர்கோனைச் சார்ந்த அவர்களால் விமானங்கள் திருப்பப்பட்டு விட்டன!

அர்ஜுனன் :—(தன்னுள் மகிழ்ந்து) தெய்வாதீனமாக பாணங்களாலான இவ்விதானத்தால் எனது தவத்திற்கு இடையூறாய் வந்த இந்த தேவஸ்த்ரீகளின் வருகை தடுக்கப்பட்டு விட்டது. ஆம், வேள்விக்குத் துணைபுரிகின்ற ஸூர்யபிம்பத்தைக் காணும் பொருட்டு அமைத்த அச்சிறு புழையொன்றைத் தவிர மற்றெங்கும் மறைவுதான்.

ஸித் :—(வியப்புடன்) நன்றாயுள்ளது உனது கைத்திறன்! பார், பார்.

இந்த உலகமாகின்ற மனையை ஒன்றோடொன்றிணைந்த பாணங்களால் ஆகாய முழுமையும் மறைத்தும் கதிரவனைமட்டும் காண நடுவே அமைக்கப்பட்ட ஓர் துவாரத்தையும் நோக்கில் திறமை வாய்ந்த திருடர்களால் மேலே கன்னமிடப்பட்டது போல் தோன்றுகிறது.

அர்ஜு :—நண்ப! அறியாதவன் எவனும் இங்கு வராமலிருக்கும்படி நமது நண்பர்களாகிய அவ்விரண்டு வேடர்களையும் பார்த்துக் கொள்ளச் சொல்.

ஸித் :—(திரைமுகமாக நோக்கி) நண்ப சார்தூல! தோழ கண்டீரவ!

இருவரும் :—(பிரவேசித்து) எசமாங்க, உத்தரவு என்னங்க?

ஸித் :—நல்லோர்களே! நீங்கள் மற்றோர் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும். நம்மையறியாதவர் வேறு ஒருவரும் இங்கு வரக்கூடாது.

இருவரும் :—இந்திரனுமிருந்தாலும் எசமான் கட்டளை. செல்லுங்க; உத்திரவுங்க. (கொஞ்சதூரம்போய் மீண்டும் வந்து) புண்ணிய எசமாங்க! ஏதோ இரண்டு ரிஷிகளைக் கூட்டிக் கொண்டு ஒருபெரிய ரிஷி வருகிறார்.

அர்ஜுனன் :—(பேராதரவுடன்) மஹர்ஷிகளின் வரவு நல்வரவாகட்டும்.

இருவரும் :—எசமான் உத்திரவுங்க. (மறைகின்றனர்.)

அங்கம் I களம் III

(பிறகு முற்கூறியவாறு முனிவர் வேடத்துடன் மஹேந்திரன் பிரவேசம்)

மஹே :—(அர்ஜுனனைப் பார்த்துத் தன்னுள் களிப்புடன்) அர்ஜுனனுடைய பார்வை நமக்குக் கிடைத்தது தெய்வாதீனமே! (அனுதாபத்தோடு) நான் முனி வேடம் பூண்டிருப்பதால் எனது மற்றைய கண்கள் அர்ஜுனனைக் காணமுடியவில்லை. (கருணையோடு) இதுவாவது அவைகளின் நல்வினைப்பயனே!

எனது மைந்தனுடைய முக கமலத்தைப் பார்ப்பதாகிய அமுதபானம் என்ற காரணத்தால் மறைக்கப்பட்ட என்னுடைய கண்கள்தாம் வெற்றி கொண்டன. இவ்விதம் மிகக் கொடுந் தவத்தினால் வருந்தத்தக்க நிலையையுற்ற இவனைக்கண்டு உஷ்ணக் கண்ணீரை வடிக்கும் இத்துயர வேதனையை அவைகள் அடையவில்லை.

அர்ஜுனன் :—(முனிவர் வேடம் புனைந்த இந்திரனைக் கண்டு மகிழ்வுடன்) தோழ! ஆச்சரியம்! மஹாமுனிவரின் மஹிமை பொருந்திய தோற்றம்!

கருணையே உருக்கொண்டார் போன்ற வடிவமுடைய இந்த முனிவரை நான் அடிக்கடி காணுந்தோறும் பரவசப்படுகின்றேன். முன் பழகாமலிருந்தபோதிலும் இவர் வசமான எனது மனம் மகனுக்குந் தந்தைக்குமிடையே காணும் அன்புபோல் பற்றுதல் கொள்ளுகின்றது.

ஆகையால், ஸித்தாதேச! நாம் இவரை எதிர்கொண்டழைப்போம் வா. (முறையுடன் எதிர்கொண்டு அழைத்து) வையாக்கிரபாத கோத்திரனும், மத்தியமபாண்டவனும், அர்ஜுனனுமாகிய நான் தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

மஹேச :—விரும்பிய பொருளையடையக் கடவை.

ஸித்தா :—(மணையைக் கொணர்ந்து) இவ் வாசனம் தங்களால் அலங்கரிக்கப்படட்டும். (யாவரும் முறையே அமர்கின்றனர்)

மஹேச :—வள்ளலே! மாறுவேடம் புனைந்ததால் மிகுந்த ஸந்தோஷத்தை அடைந்த நான் எந்த வகையால் உபசரிக்கக்கூடும்? ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், சுருதிகள் நன்கு கற்கப்பட்டன; ஸ்மிருதிகளின் பெருந்தன்மையாகும் நெறியால் என்னுடைய மனம் கவரப்பட்டுள்ளது; மஹர்ஷிகள் அநேகர் என்னால் பார்க்கப்பட்டிருக்கின்றனர்; பெருந்துறவிகளிற் பலர் பழகினவர்கள்; தேவர்கோனின் ஸுதர்மை என்ற ஸபையையும் கண்டிருக்கிறேன். ஆனால் கோதண்டம் போன்ற வில்லினையும், இடையேயணிந்த மாவுரியினையும், ருத்திராக்ஷங்களைக் கழுத்திலும் கரங்களிலும் வளையமாகக்கொண்டு அலங்கரிக்கின்ற தோற்றத்தையும் இவ்விதம் நீ புரிகின்ற தவத்தினையும் நான் எங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஆதலின் நான் விவரிப்பது இதுவே!

நான்கு ஸமுத்திரங்களாலும் சூழப்பட்ட இப்பூவுலக முழுமையும் ஒரு குடைக்கீழ் ஆள விருப்புவையே யாகில் இந்த வில்லையே சுமந்து திரி; அதையே பூஜைசெய்; அதற்காக வீணே தவம்புரியவேண்டாம். கேவலம் மோக்ஷத்தில் பற்றுடையோன் ஆயின், இக்கொடியவில் முதலியவற்றையும் அவைகளின் பயனையும் ஒருங்கே இகழ்ந்துவிடு. ஸகல படைப்பினிடத்தும் ஸமமான அன்புடையவனாக உனது களங்கமற்ற மனது ஸமாதானத்தை அடைவதாக.

அர்ஜுனன் :—(துயரத்துடன் நெடுமூச்செறிந்து) தந்தையே! என் வரலாறு முற்றும் தாங்கள் உணராததாலன்றோ இவ்விதம் கூறுகின்றீர்கள்.

பகைமையுடையோர்களின் நூற்றுக்கணக்கான வஞ்சகச் செய்கைகளால் இப்பூவுலகில் எங்களது சுதந்தர உரிமை பறிக்கப்பட்டு விட்டது. தலைவரின் பணியைச் சிரமேற்கொண்டவன் யான். எவ்விதம் என்னால் மறுமை ஸுகத்தைப்பெற விரும்பக்கூடும்? என்றும் துயரமொன்றே வாழ்க்கையாயுடைய எனக்கு உரிமையினின்றும் விடுதலை என்ற சொல் ஹ்ருதயத்தைப் பிளக்கின்றது. பெரியோர்களின் ஆசியால் முயன்ற தொடர்வாகிய இத் தவத்திலே மேவிய விருப்பம் கொண்டுள்ளேன்.

மஹேச :—(தனக்குள் ஸந்தேஹத்துடன்) குமாரன் என்னைத் தந்தையே என்று எங்ஙனம் விளிக்கக்கூடும்? அவன் தனது தவத்தின் மஹிமையால் தெய்வீக அறிவைப் பெற்றாலல்லாது உண்மையாய் எனது உருவை உணர்ந்து கொள்ளக் கூடுமோ? இருக்கட்டும்! நானும் ஸந்தேஹத்துடனேயே ஸம்பாஷணையைத் தொடர்கின்றேன். (வெளிப்படையாக) குழந்தாய்! இப்பொழுதுகூடவா உனதுமனம் தெளிவடையவில்லை? உனது இந்தக் கொடிய முயற்சியை விட்டுவிடு. கவனித்துப்பார். உன்னால் கொல்லப்படாத அவ்விரோதிகளுக்கு மரணமில்லாது போகுமா? நீயும் அவ்விரோதிகளால் அடிக்கப்பட்டுச் சாவினை அடையப் போகிறாயா? இரண்டுமில்லை; எலியை விழுங்கிய பூனை இறப்பதில்லையா? பூனையை ஏமாற்றி வஞ்சகமாகத் தப்பிய எலிக்கு மரணபயம் நீங்கிவிடுமா? பொதுவாக ஜனனமானது மரணத்திற்குக் காரணம்; மரணமும் ஜனனத்திற்குக் காரணமாகும். ஆகையால், இக்கொடிய முயற்சியினின்றும் நீங்கி நலம் பயக்கும் வேள்வியைநாட மனதைத்தூண்டு.

அர்ஜு :—(அனுதாபத்துடன்) தந்தையே! அவமானத்தைத் தாம் அநுபவியாதவர்கள்! என்ன கூறினீர்? நன்று அதற்குரிய விஷயங்களைத் தங்களிடம் நான் கூறுவேன். ஏனெனில் தங்களது உபதேச மொழிகள் புறத்தே தள்ளத்தக்கவையல்ல. பின்னர், இம்மாதிரி தாங்கள் கூறக்கூடாது.

போரிலே இரும்பால் செய்யப்பட்ட வில்லையும், அம்பையும் கொண்டு கர்வத்தால் கொழுத்து வளர்ந்த சத்ருக்களை வேருடன்

களைந்து தனது பாணத்தால் ஸூர்யபிம்பத்தைப் பிளந்துகொண்டு போவதான முக்தி எதுவோ அது தானே எங்களுக்கும் மகிழ்வினை விளைவிக்கும். நல்வினை யறிவால் மேலோங்கி விளைகின்ற முக்தியென்ற விடுதலை தூரத்திலே உள்ளதாயினும் அதற்கொரு நமஸ்காரம் செய்கிறேன்.

மஹே :—(தன்னுள் மகிழ்ந்து) என்ன விந்தை! குழந்தையின் வீரச்சுவை யுறுதி நன்று. அம்ம! இவனது வீரம்! பூதேவியின் சுமையை யகற்றுவது தெய்வாதீனந்தானே! எவ்விதமெனில், முராரியாகின்ற மாருதத்தால் வளர்ச்சியுற்ற தனஞ்ஜயனென்ற அக்னியானது ஆசார்யர்களையும், பகைவர்களனைவரையும் பொசுக்கப்போகின்றது.

ஆகையால் குழந்தையைச் சமாதானம் செய்வதற்காக நானே என்னை இன்னாரென்று தெரியப்படுத்திக், கொள்ளுகிறேன் (என்று அவ்விதமே பழைய உருக்கொள்ளுகிறான்.)

அர் :—(பார்த்து, வியப்பும் மகிழ்வும் அடைந்து) எனது கண்களுக்கு ஆனந்தத்தை அளிக்கின்ற இவர் ஆயிரம் கண்களையும் படைத்த தேவேந்திரனல்லவா? ஆதலால் இப்பொழுது பெருமையுடன் வணங்குகிறேன் (என்று ஸமீபித்து நமஸ்கரிக்கிறான்.)

மஹே :—(வாரியணைத்து உச்சி முகந்து) புத்திர!

பூஜ்யரும் பெருமையுள்ளவருமாகிய பிதாமஹரால் பூர்வத்தில் நீர்நிலையை ஸ்ருஷ்டித்து முறையே உலகையும், மக்களையும் படைத்துப் பிறகு விஷ்ணுவால் அஸுரர்களை அழித்து இவ்வுலகைக் காப்பாற்றி முடிவில் இவ்வுலகை யழிக்கத் திருவுளங்கொண்டு ருத்ரவடிவங் கொள்ளும் பரமசிவன் உங்கள் சத்துருக்களை நாசஞ் செய்யட்டும்.

அர் :—(வணக்கத்துடன்) பெரியோய்! தேவ கணங்களின் சக்கரவர்த்தியாகிய தாங்கள் மங்கைபாகனைக் கட்டளையிடுவது போன்றே இச்சொற்கள் இருக்கின்றன. எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் ஆசியாயில்லை.

மஹே :—குழந்தாய்! குழந்தாய்! அம்மா கிரியல்ல.

எந்த சிவபெருமானையடைய என்னுடைய மனம் வெட்கமடைகின்றதோ, நீதிமான்களின் வல்லமை யாவும் எவருடைய உபாயத்திலே குன்றிவிடுகின்றதோ, பெருமை மிகுந்த பரந்தாமன் முதலியோர் எவரை வேண்டி அருளை யாசிக்கின்றார்களோ, இவ்வல்லமை யாவையும் ஒருங்கே பெற்ற சங்கரன் தமது கடைக்கண்களால் அருளுகின்றார். அத்தகைய சிவபெருமானைப்பற்றி நீ இவ்விதம் கூறுவது சிறிதும் உசிதமல்ல.

ஸித் :—ஸஹஸ்ராக்ஷ! தங்களுடைய பிரத்யக்ஷத்தாலேயே நிறைந்த மனோரதத்தோடு பார்த்தன் விளங்குகிறான். எவ்விதமெனில்,

எந்தப் பாண்டவர்களுடைய பக்ஷத்தில் தேவர்கோனாகிய தாங்கள் விழிப்புடன் இருக்கின்றீர்களோ, அந்தப் பாண்டவர்களுக்கு எவ்விதம் திருதராஷ்ட்ரர்களுடைய ஸேனைகளால் பயமேற்படக்கூடும்?

மஹே :—ஓய் யக்ஷச்ரேஷ்டரே! அப்படியல்ல.

குந்தீபுத்ரனாகிய இக்காண்டீவன் புருஷோத்தமனாகிய ஸ்ரீகிருஷ்ணனோடு ஸ்நேஹத்தையடைந்தவனாகவும் சிவபெருமானுடைய அருளால் மங்களகரமான தேஜஸ்ஸை யுடையவனாகவும், நல்ல சக்திவாய்ந்தவனாகவுமாகி, பகைவர்களின் பயங்கரமா யெழுந்த ஸேனைகளை நாசமாக்கி விளங்குவான். எனது இவ்வார்த்தையைக் குழந்தை கேட்கட்டும்.

அர் :—(கருணையுடனும் வணக்கத்துடனும்) தந்தையே!

தீயவழியினையுடைய தாயாதிகளாகின்ற கோடைகாலத்திலும் மிகவும் தாபத்தை யடைந்த எனது மனமாகிற அன்னப்பறவையானது தங்களது அன்பு நிறைந்த கண்களாகின்ற கருநெய்தல் மலர்கள் மிகுந்த உடலாகும் பொய்கையை விட்டுவிட விரும்பவில்லை.

மஹே :—குழந்தாய்! வருந்தாதே! பிறைசூடியைப் பிரஸன்னமாகச் செய்து அவாருளிய பாசுபதாஸ்திரத்தைக் கொண்டு கௌரவர்கள் அனைவரையும் கொன்று குவிக்கின்றபொழுது மீண்டும் உன்னை நான் பார்க்கப்போகின்றேன். (என்று மறைகிறான்)

அர் :—அன்ப! புனிதையாகும் பாகீரதியை வழிபட்டுப் பின்னர் சிவபெருமானைப் பூஜிப்போம், வா!

(ஆடிப்பகுதியில் இது முடிவுறும்)

கதைக் கடல்.

சதுர்தாரிகா லம்பகம்

முதல் அலை

(டாக்டர். வே. ராகவன்.)

ராஜபுத்திரர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவராயும், ஆனால் பிரபுக்களையண்டி ஜீவிக்கும் வெட்டியாட்கள் போன்ற தோற்றங் கொண்டவர்களாயுமுள்ள ஸிப்பந்தி புருஷர்களால் சூழப்பட்டவனாயும், முன்னோடிய புருஷர்களால் தெரிவிக்கப்பட்டவனாயும், மாதவன் புரோஹிதனிடம் வந்தான். புரோஹிதன் எழுந்திருந்து, ஆனந்தத்துடன் நல்வரவு சொல்லி மாதவனைப் போற்றினான். பிறகு புரோஹிதனோடு சற்று இருந்து கதைகளைப் பேசிவிட்டு, அவனால் விடை கொடுக்கப்பட்டு, மாதவன் தன்னிருப்பிடம் வந்தான். இரண்டாம் நாளும் மறுபடியும் ஒரு ஜோடி வஸ்திரத்தை கௌரவக் கொடையாக அனுப்பி, மறுபடியும் புரோஹிதனை யடைந்து அவனைக் குறித்துரைத்தான்: "எனது பரிவாரங்களின் நிர்ப்பந்தத்தால் நாம் (ராஜகரத்தில்) ஸேவையை வேண்டுகிறோம்; அதற்காகவே உம்மை யடைந்தோம்; நமக்குச் செல்வமுண்டு," என்று. அதைக் கேட்டு, தனக்குப் பணம்வரும் என்று எதிர்பார்த்தவனாய்ப் புரோஹிதன் மாதவனின் விருப்பத்தைக் கைகூட்டிவைப்பதாக வாக்களித்தான். ஒரு நொடியில் அரசனிடம் சென்று, விண்ணப்பித்துக்கொண்டான்; புரோஹிதனிடம் இருந்த கௌரவத்தால் அரசனும் 'அப்படியே' என்று ஒப்புக்கொண்டான். மறு நாள் ஸிப்பந்திகளுடன் மாதவனை அழைத்துக் கொண்டுபோய் புரோஹிதன் பெருமையுடன் அவ்வரசனுக்குத் தெரியப்படுத்தினான். அரசனும் மாதவன் அரசகுமாரனுக்கொப்பான தோற்றமுடையவனாயிருப்பதைக் கண்டு, ஆதரவுடன் அருள்செய்து, அவனுக்கு ஒரு உத்தியோகமும் அளித்தான். பிறகு அரண்மனையில் (பகலில்) அவ்வரசனுக்குப் பணிவிடை செய்து கொண்டு, மாதவன் இரவில் மந்திராலோசனை செய்யச் சிவனுடன் கூடினான். லஞ்சத்தால் ஜீவித்துக் கொண்டிருக்கும் புரோஹிதன் பேராசையால் "இங்கு என்னகத்திலேயே தங்கு" என்றுமாதவனை வேண்டிக் கொண்டான். அவ்வேண்டுகோளின்மேல், மரத்தையழிக்க மரக்கிளையை வீடாகக்கொள்ளும் 'மத்கு' என்ற பக்ஷியைப்போல், மாதவன் தன் பரிவாரங்களுடன் புரோஹிதன் வீட்டையே யடைந்தான். போலியான மாணிக்கங்கள் நிரம்பிய நகைகளால் நிரப்பப்பட்ட ஒரு பாத்திரத்தைத் தயாரித்து அதை மாதவன் புரோஹிதனுடைய பொக்கிஷ அறையில் வைத்தான். நடுவே அப்பாத்திரத்தைத் திறந்து, பற்பல வியாஜமாய் பாதியே தெரியும்படியாய் காண்பித்துக் காண்பித்து, புற்களைக்கொண்டு பசுவின் மனதைக் கவருவதுபோல், அவ்வாபரணங்களைக் கொண்டு புரோஹிதனுடைய மனதை அபஹரித்தான். புரோஹிதன் தன்னிடம் முழு நம்பிக்கை கொண்டவனானதும், ஆகாரத்தைக் குறைத்துக் குறைத்து, அதன்மூலம் இளைத்த உடலுடன் பொய்யான ஜாட்டியத்தை மாதவன் தோற்றுவித்தான். சில நாட்கள் சென்றதும், தன் படுக்கைக்கருகிலிருந்த புரோஹிதனைப் பார்த்து போக்கிரிகளுக்கெல்லாம் அரசனாய் விளங்கும் மாதவன் இரண்டொரு மெல்லிய சொற்களாற் சொன்னான்: "என்னுடைய இவ்வுடலில் விபரீதமான அவஸ்தை தோன்றியிருக்கிறது; ஆகையால், அந்தணச்சிரேஷ்டரே, ஒரு உத்தமப் பிராம்மணனைக் கொண்டுவாரும்; இஹத்திலும் பரத்திலும் இன்புறவேண்டி அவனுக்கு எனக்குள்ளவை யனைத்தையும் கொடுத்து விடுகிறேன். உடலே நிலையற்றிருக்குப்போது, மனவுறுதி கொண்டவனுக்கு பொருள்களில் என்ன இச்சை இருக்கும்?" இப்படித் தெரிவிக்கப்பட்டதும், தானம் வாங்கியே பிழைத்துவரும் புரோஹிதன் "அப்படியே செய்கிறேன்" என்றான். மாதவனும் புரோஹிதன் கால்களில் விழுந்தான். பிறகு புரோஹிதன் எந்தப் பிராம்மணனை அழைத்து வந்தாலும், பிராம்மணரிடம்

ஏதோ ஒரு அருமையைத் தான் தேடும் வியாஜமாய், அந்தப் பிராம்மணனை மாதவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதைக் கண்டு மாதவனருகில் இருந்த போக்கிரி யொருவன் சொன்னான்: "அநேகமாய் ஸாதாரணப் பிராம்மணர் இவருக்குப் பிடிக்காது. ஆகையால் சிவன் என்று ஸிப்ரா நதிக்கரையில் பெருந்தவங் கிடக்கும் பிராம்மணர் இருக்கிறாரே, அவர் ஒருவேளை இவருக்கு ஏற்குமோ என்னவோ என்று பாருங்கள்." இதைக் கேட்ட மாதவன், கஷ்டத்தைக் காட்டிக்கொண்டு, புரோஹிதனிடம் சொன்னான்: "ஹா, தயவு செய்து அந்தப் பிராம்மணனைக் கொண்டுவா; அவனைப்போல் மற்றொருவன் கிடையாது." இப்படிச் சொல்லப்பட்ட புரோஹிதன், அங்கிருந்து சிவனிடம் சென்று, நிஷ்டையில் அசைவின்றியிருக்கும் அவனைப் பார்த்தான்; அவனெதிரில் உட்கார்ந்தான்; அவனை வலம் வந்தான். அக்கணம் அப்போக்கிரியும் மெள்ளக் கண்ணைத் திறந்தான். அதன்மேல், சிவனை வணக்கமாய் நமஸ்கரித்து புரோகிதன் தெரிவித்தான்: "பிரபோ, நீர் கோபிக்காமலிருந்தால், ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன்." அதைக்கேட்ட சிவன் உதட்டைத் தூக்கும் குறியால் அனுமதிக்க, புரோஹிதன் உரைத்தான்: "இங்கு மிகப் பணக்காரனான தென்னாட்டு ராஜபுத்ரன் ஒருவன், மாதவன் என்ற பெயர் கொண்டவன் இருக்கிறான்; தேக அஸௌக்கியம் கொண்ட அவன் தனக்குள்ள தனத்தையும் கொடுத்துவிட முயலுகிறான். மனதிருந்தால் உனக்கு பலவிதமான விலையுயர்ந்த ரத்தினங்கள் நிரம்பிய நகைகளால் ஜ்வலிக்கும் தன் சொத்து முழுமையும் அவன் கொடுப்பான்." அதைக்கேட்டு மெள்ளத் தனது மௌனத்தைவிட்டுச் சிவன் சொன்னான்: "பிராம்மணா, பிரம்மசாரியாய் பிச்சையெடுத்துண்பவனுக்கு பொருள்களாலாகும் காரியம் என்ன?" "மஹாப் பிராம்மணா! அப்படிச் சொல்லாதே; ஆச்ரமமுறையை நீ அறியவில்லை. கலியாணஞ் செய்துகொண்டு, வீட்டில் வஸித்து, தைவங்களுக்கும், பித்ருக்களுக்கும், அதிதிகளுக்கும் செய்யவேண்டியவற்றைச் செய்துகொண்டிருப்பவனும் ஆச்ரமிகளுக்குள் மேம்பட்டவனுமான இல்லறம் நடத்துபவன் பொருள்களைக் கொண்டே, தர்மம், அர்த்தம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களையும் பெறுகிறான்" என்று புரோஹிதன் மறுபடியும் சிவனுக்குச் சொல்ல, சிவன் பதிலுரைத்தான்: "எனக்கேது கலியாணம்? எந்தக் குலமாகத் தானிருக்கட்டுமென்று நான் கலியாணஞ்செய்துகொண்டு விடமாட்டேன்." அதைக் கேட்டு சிவனுக்கு வரப்போகும் செல்வத்தைத் தானே ஸுகமாய் அனுபவிக்கலாம் என்றெண்ணி, நல்ல ஸமயம் வாய்த்ததென்று பேராசை கொண்ட புரோஹிதன் சிவனிடம் சொன்னான்: "எனக்கு விநயஸ்வாமினீ என்று ஒரு கன்னிப்பெண் இருக்கிறாள்; மிக அழகு வாய்ந்தவள்; அவளை நான் உனக்குக் கொடுக்கிறேன். உனக்கு மாதவன் தானஞ் செய்யப்போகும் செல்வத்தையும் நான் காப்பாற்றி வருகிறேன். ஆகையால் நீ இல்லறத்தைக்கொள்." இதைக்கேட்டுத் தான் விரும்பிய காரியம் கைகூடிவிட்ட சிவன் "பிராம்மணா! உனக்கு இவ்விஷயத்தில் பிடிவாதமிருப்பின் உன் வார்த்தைப்படி செய்கிறேன்; தங்கம், ரத்னம் இவைகளின் ஸ்வரூபம் என்ன என்பதில் தபஸ்வியான நான் மூட்டாள்; உன் வார்த்தையைக் கொண்டே பிரவிருத்திக்கிறேன்; உனக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிச்செய்" என்றுரைத்தான். சிவனுடைய இவ்வார்த்தைகளைக் கேட்டு திருப்தியடைந்த மூடனான புரோஹிதன் 'அப்படியே' என்று சொல்லிச் சிவனைத் தன்னகத்திற்கு அழைத்து வந்தான். சிவனெனும் அசிவனை (தீயோனை) தன் வீட்டில் அமர்த்திவிட்டு, அதைக் கேட்டு ஆனந்திக்கும் மாதவனிடம் புரோஹிதன் தான் செய்ததைச் சொன்னான். தன் அறிவின்மையால் பறிபோகும் செல்வமோ என்று தோன்றுகிறவளாயும், தான் கஷ்டப்பட்டு வளர்த்தவளாயும் இருக்கிற தன் பெண்ணை புரோஹிதன் சிவனுக்குக் கொடுத்தான். கலியாணஞ் செய்துகொண்ட சிவனை, மூன்றும் நாள் தானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, போலியாய்ப் பிணிகொண்டிருக்கும் மாதவனிடம் அழைத்துப்போனான். "பிறனால் அறிய இயலாத தவங்கொண்ட உன்னை நமஸ்கரிக்கிறேன்" என்று உண்மையாகவே, சொல்லி, மாதவன் எழுந்து, சிவனுடைய அடிகளில் விழுந்தான். முறைப்படி பொக்கிஷ அறையிலிருந்து கொண்டுவரப்பட்ட போலி

மாணிக்கங்கள் நிரம்பிய ஏராளமான நகைகளுள்ள பாத்திரத்தை சிவனுக்குத் தானஞ் செய்தான். சிவனும் அதைப் பெற்றுக்கொண்டு "எனக்குத் தெரியாது, உனக்குத்தான் இவை தெரியும்" என்று சொல்லி அதைப் புரோஹிதனுடைய கைகளில் அர்ப்பணஞ் செய்தான். "ஒன்றும் யோஜிக்கவேண்டாம், நான் பார்த்துக்கொள்வதாய் முன்பே ஒப்புக்கொண்டிருக்கிறேனே?" என்றுரைத்துப் புரோஹிதனும் அப்பொழுது அச்செல்வத்தை வாங்கிக்கொண்டான். மாதவனுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டு தன் மனைவியின் இருப்பிடத்திற்கு சிவன் போனதும், அந்த நகைப்பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போய்த் தன் பொக்கிஷ அறையில் புரோஹிதன் வைத்துக்கொண்டான்.

அதற்கு மறுநாள் மாதவன் தேஹ அஸௌக்யம் என்ற வியாஜத்தை மெள்ள விட்டுக்கொண்டு, தான் செய்த மஹாதானத்தின் மஹிமையில் தன் ரோகம் விலகிற்றென்று சொன்னான். "தர்மத்தைத் துணையாகக் கொண்ட உன்னால் ஆபத்திலிருந்து நான் தாண்டிவைக்கப்பட்டேன்" என்று தன்னிடம் நெருங்கிய புரோஹிதனைப் புகழ்ந்தான் மாதவன். "இந்த சிவனுடைய சக்தியாலல்லவா எனக்கு இச்சரீரம் நிலைத்தது" என்று சொல்லிக்கொண்டு வெளிப்படையாய் சிவனோடு நட்புக்கொண்டான். நாட்கள் பல கழிந்ததும் சிவன் புரோஹிதனைக் குறித்துப் பேசினான்: "இப்படியே உன் வீட்டிலேயே நான் எவ்வளவு நாள் தின்றுகொண்டிருப்பது? (நான் தானம் வாங்கிய) அந்த நகைகளை நீ விலைக்குத் தான் எடுத்துக்கொண்டு விடேன். அது விலையுயர்ந்ததாயிற்றே என்று எண்ணினையாகில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொடேன்" என்று. இதைக் கேட்டு, நகை விலையுயர்ந்ததென்றுஎண்ணிக் கொண்டிருந்த புரோஹிதன் அதற்கு விலையாகத் தனக்கு உள்ள பொருளனைத்தையும் சிவனுக்குக் கொடுத்தான். அதற்காகத் தன்கைப்பட சிவனை ஒரு விற்பனைப்பத்திரம் எழுதச்செய்தான்; தன்செல்வத்தைவிட நகைகளின் பெறுமானம் அதிகமே என்று நினைத்த புரோஹிதன் தானும் பத்திரம் எழுதிக்கொடுத்தான். ஒருவருடைய பத்திரத்தை மற்றொருவர் பெற்றுக்கொண்டு, பிரிந்து நின்றனர்; சிவன் தனிக்குடித்தனத்தை அடைந்தான். பிறகு சிவனும் மாதவனும் கூடி புரோஹிதனின் செல்வத்தை அனுபவித்துக்கொண்டு தம்மிஷ்டப்படி அவ்வூரிலேயே இருந்தனர்.

காலமானதும், ரொக்கம் வேண்டிய புரோஹிதன் அந்த நகைகளில் ஒரு கடகத்தையெடுத்து விற்பதற்காகக் கடைத்தெருவுக்குச் சென்றான். அங்கு ரத்னமர்மங்கள் தெரிந்தவர் பரீக்ஷை செய்து, "ஆகா, இந்தப் போலி நகைகளைச் செய்தவனின் அறிவு யாருக்கு இருக்கும்? கண்ணாடி, ஸ்படிகத்துண்டுகளையல்லவா பலவர்ணங்கள் ஏற்றி பித்தளையில் கட்டியிருக்கிறான்! இவை ரத்னங்களல்ல; இது தங்கமுமல்ல" என்று சொல்லிவிட்டார்கள். இதைக் கேட்டு படபடத்துப்போன புரோஹிதன் இடிவிழுந்தவன் போலானான்.

அம்முட்டாள் புரோஹிதன் உடனே சிவனிடம் போய் "உன் நகைகளைப் பெற்றுக்கொள், என் பணத்தைக் கொடுத்துவிடு" என்று கேட்டான். "இவ்வளவு நாட்கள் கழித்துப் பணம் என்னிடம் எப்படியிருக்கும்? இல்லறத்தில் காலக்கிரமத்தில் அப்பொருள் மீதியொன்றுமில்லாமல் செலவாகி விட்டது" என்று சிவன் பதிலளித்தான். இதற்குமேல், இருவருக்கும் வழக்கு ஏற்பட, சிவனும் புரோஹிதனும், பக்கத்தில் மாதவனும் வர, அரசனிடம் சென்றனர். "அரசே! கண்ணாடி ஸ்படிகம் இவைகளின் துண்டுகளை நன்றாய் வர்ணமேற்றி பித்தளையைக்கொண்டு பெரிய போலியாபரணத்தைக் கட்டி, இந்தச் சிவனால், இதையொன்றையுமே அறியாத என்னுடைய செல்வமனைத்தும் விழுங்கப்பட்டது" என்று அரசனிடம் புரோஹிதன் தெரிவித்தான். "அரசே, இளமையிலிருந்தே தபஸ்வியாக இருந்தேன் நான். இவனே என்னை வற்புறுத்தித் தானம் வாங்கிக்கொள்ளும்படி செய்தான். அப்பொழுதே ஒன்றுமறியாத நான் 'ரத்னம் முதலியவற்றில் எனக்கொன்றும் அறிவு கிடையாது, நீதான் பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று சொன்னேன். 'நான் உனக்கு இதோ இருக்கிறேன்' என்று புரோஹிதன் ஒப்புக்கொண்டான். தானத்தை வாங்கிப் புரோஹி

தன் கையிலேயே கொடுத்துவிட்டேன். பிறகு தனக்கிஷ்டமான விலையைக் கொடுத்து புரோஹிதனே இவ்வாபரணங்களை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டான். இது விஷயத்தில் நாங்கள் கைப்பட ஒருவருக்கொருவர் எழுதிக் கொடுத்துக்கொண்ட பத்திரங்கள் இருக்கின்றன. இனி மஹாராஜாதான் எனக்குச் செய்யவேண்டிய உதவியை யறியவேண்டும்" என்று சிவன் தன் சொற்களை முடித்துக்கொண்டதும், மாதவன் பேசினான்: "புரோஹிதா! அப்படியொன்றும் நீ சொல்லவேண்டாம்; நீயோ கௌரவம் பொருந்தியவன். இவ்விஷயத்தில் என்னிடம்தான் என்ன குற்றமிருக்கிறது? உன்னிடமாவது சிவனிடமாவது நானொன்றும் பெற்றுக்கொள்ளவில்லை. என்னுடைய பிதுரார்ஜித சொத்தை நான் ஒருவரிடம் வெகு காலம் அடைக்கலம் வைத்திருந்தேன். அதை அப்பொழுது எடுத்துக்கொண்டு வந்து, அப்படியே பிராம்மணனுக்குத் தானமாய்கொடுத்துவிட்டேன். உண்மையில் அது தங்கமில்லையானால், ரத்னமுமில்லையானால், பித்தளையையும், கண்ணாடியையும், ஸ்படிகத்தையும் தானங்கொடுத்த பலன் என்னை அடைந்ததாயிருக்கட்டும். ஏனென்றால், சூதில்லாத மனதுடன் தானத்தில் நம்பிக்கை வைத்தவன் நான்; பிரத்தியக்ஷமாயும் தெரிகிறது; தாண்டமுடியாத ரோகத்தை (தானத்தால்) தாண்டியிருக்கிறேன்." இப்படி முகத்தின் ஒளி மாறுபடாமல் மாதவன் மொழிய, மந்திரிகளுடன் அரசன் சிரித்தான், ஸந்தோஷத்தையுமடைந்தான். "மாதவனோ, சிவனோ நியாயம் தவறி யொன்றும் செய்யவில்லை" என்று ஸபையோர்கள் தமக்குள் நகைத்துக் கொண்டு சொன்னார்கள். பிறகு புரோஹிதன் தன் செல்வம் பறிக்கப்பட்டு, வெட்கி விலகினான்.

அதிக ஆசையால் புத்தி மழுங்கிப்போனால் எவ்வாபத்துக்கள்தான் வாரா?

அவ்விரு போக்கிரிகளான சிவனும் மாதவனும், திருப்தியடைந்த அரசனிடம் கிடைத்த கொடைகளால் இன்பமுடன் வெகு காலம் அவ்வூரிலேயே வஸித்தனர்.

புஸ்தக விமர்சனம்

ஸ்ரீ ரமண சந்நிதி முறை:—பாரத்வாஜி முகவைக் கண்ண முருகனார் இயற்றியது: ஸ்ரீ ரமண பாதானந்தரால் வெளியிடப் பெற்றது. இரண்டாம் பதிப்பு. 1939. கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—8—0.

திருவண்ணாமலையிலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரமண பகவானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இந்நூல் 118 பதிகங்களையும் 1681 செய்யுட்களையுங் கொண்டது. இவற்றுள் முதற் பதிப்போடு புதிதாகப் பாடிச் சேர்க்கப்பட்ட பதிகங்கள் 24; திருத்த முற்ற பதிகங்கள் 18; இப்பதிப்புக்கு முகவுரை எழுதிய ஸ்ரீ வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் இதற்கும் திருவாசகத்திற்கும் உள்ள ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் விவரித்துள்ளார். 'திருவாசக உறுப்புக்கள் அனைத்தும் இந்நூலின்கட் காணலாம்படி இப்பதிப்பு அமைந்துள்ளது' என்றும், 'திருவாசகத்தில் இல்லாத சொரூபத் திருவகவல், வைராக்கியத் திருவகவல், உபதேசத் திருவகவல், திருக்கண்ணோக்கம், தேசிகப் பதிகம், அடிமைப்பத்து முதலியவற்றைச் கூட்டியும் இச்செந்தமிழ் மாலையைப் பகவான் திருவடிக்குச்சூட்டியுள்ளார்' என்றும், 'பன்னிரண்டாந் திருமுறை நீங்கலாகச் சிவபிரானுக்குரிய பதினொரு திருமுறையமைப்புக்களும் இந்நூல்வயின் திகழுமாறு உள்ளது' என்றும், 'மற்றும் திவ்வியப்பிரபந்தத்திற் சில பதிகங்களும், பரிபாடற் பகுதியும் அருணகிரியார் அருளிய அநுபூதியும் தாயுமானார் இயற்றிய பராபரக் கண்ணி எந்நாட் கண்ணிகளுங்கூட இந்நூலிற் பின்பற்றப் பெற்றுள்ளன' என்றும் முகவுரையால் அறியலாம். இந்நூலிலுள்ள பாடல்கள் பாடுவதற்காக அமைக்கப்பெற்றனவாதலின், அவ்வவற்றிற்கேற்ற பண்ணும் ராகமும் குறிக்கப்பட்டுள்ளனவெனினும், நடைக்கும் பொருளுக்கும் ஒத்த வேறு ராகங்கள் அமைத்துப் பாடினும் நன்றேயாம் என்பர் முகவுரையாசிரியர்.

இப்பதிகங்களைப் படிப்போர் இவ்வாசிரியருக்கு ரமணபகவான் சிவபிரானாகவும் குமாரக்கடவுளாகவும் காட்சி கொடுத்து, திருவாசகத்தை சிவபிரான் ஏற்றுக்கொண்டது போலவே, இவற்றை அங்கீகரித்தனர் என்பது தெளிவாகும்; திருவாசகத்தின் இணையற்ற பெருமை ஒருபுறமிருக்க, அதனை அனுகரித்த இப்பாடல்களும் அதனையொப்பவே பக்தி ரஸம் ததும்புகின்றன; கேட்போர் மனதைப் பிணிக்குந் தகையவாய் விளங்குகின்றன. பழந்தமிழிலே பரிச்சயமுள்ளவர்களுக்கு இவ்வாசிரியரின் சொற்கள் தாம் அப் பழம்பாடல்களிலே அனுபவித்த அழகுகளை நினைப்பூட்டி இன்புறுத்துகின்றன; அவ்வகைப் பரிச்சயமில்லாதவர்களுக்கும் இப்பாடல்கள் பெரிதும் இன்பம் பயக்கின்றன. நெஞ்சை அள்ளும் நூதனக்கற்பனைகள் பற்பல மிளிர்கின்றன. உதாரணமாக,

1. உழலுமடியார் பிறவித்தேரை
   நிலை சேர வுய்த்த வருணேசன்.
2. என்குஞ்சிப்பூவாகக்குலவுதிருத்தாள் போற்றி
3. போதர்விழிக்கெங்கும் புலப்படூஉம் பூரணமே
4. விசையுறு வீணையில் விசும்புறு வில்லில்
   இசை நிறமேழா யிசைந்தோன் காண்க
5. மறையலா மெய்ப்பொருளை வெண்ணெயாக்கி
   விழுங்குமாறெனக்களித்த வேங்கடேச
6. தெளிகலாதாரைத் தெளித்தலன்றே தெளிந்
   தோர் செயலே (255)
7. பெண்டிர்தாமடலூரப் பெருமோனக்
   கண்டித்திட்ட கடுங்கணார்
   பண்டிதன்னை வளர்க்க நும்பாற் பெற்றுக்
   கொண்டதென்ன கைக்கூலியே (322)

சில சொற்றொடர்கள் அப்படியே நம் மனதைக் கவர்கின்றன.

1. என்பிலவை வெய்யிற் கிறப்பதுபோற்
   றும்பதைப்புற்
   றன்பிலவை மாய்த லிலாக்குற்ற மன்றே

2. சேய்பிணி தீரச்சிந்தை பொருந்தித்
தாய் மருந்துண்ணுந் தகைமைபோல
3. நாட்டமே வாயா நடமே மருந்தாத்
தேட்டமா யுண்டு சிந்தை மகிழ
4. நாதமே வெற்றி நவில்தவி லாக்வும்
அவிதாக் குரலிட வாவென் றருளியும்
5. அசலமு நாணச் சும்மா வதிதல்
6. அன்பெனுந் தெய்வ மவதரித்தாற்போல்
7. தொந்த நினைப்பே பந்த மென்ன
8. கட்டிபோன் றவென் கட்டிளங் கன்னியை
9. முண்டனச் சென்னி முனிமை யுணர்த்த
10. நாயாப் பிறக்கு நலனுடையேனாவேனே
11. கருதாத நாளெல்லாம் விருதா நாளே
12. ஆணாப் பிறந்தவமாவதுவோ

இந்நூலாசிரியர் இயற்கையிலேயே நன்றாகப் பாடும் திறமை வாய்ந்தவர் என்பதும் ஐம்பொறியின்பங்களிலும் கவிதை யின்பத்தையே மேலெனக் கருதியவர் என்பதும் மாணிக்கவாசகரிடத்துப் பெரிதும் பற்றுடையவர் என்பதும் இவர் முதலிற் பாடிய தேசிகப்பதிகத்தால் தெரியவரும். இப்பதிகத்தை ரமண பகவானுடைய பதத்திற் சேர்த்தலும்,

"ததியின் மலர்க்கண் சாத்தியருளினன்
அந்நாட் டோட்டவ னடிக்கே யெனது
செந்நாத் துதியுரித் தாயிற் றென்க" என்றும்
தீம்பாளித நீதந்தேவிட்டப் புசிப்போன்
எம்பலாய்ப் பழம்புளிங்காடியிச் சித்தாங்கு

தம் பாடலை ரமணபகவான் மெச்சி யேற்றுக் கொண்டாரென்றும் இவ்வாசிரியர் கூறுவர்.

ரமண பகவானுடைய சரிதத்தில் நிகழ்ந்த பல விசித்திரங்களும் இப்பாடல்களுள் போற்றப் பட்டுள்ளன. பகவானது கையை அவர் சீடர்கள் தங்கக்கை என்பர் என்று ஒரு பாடலால் அறிகின்றோம். பகவான் 'அள்ளக் குறையா அருளுடையான்.' அவரது சொரூபம் பரமசிவ சொரூபம்; அவரை முருகக் கடவுளாகவும் கொள்ளலாம். பகவான் 'யாவரே யெனினும் இனிது வந்தடைந்தோர் ஏவ்வித பேதமுமின்றிப் பாவமே போக்கிப் பவித்திரமாக்கும் புனிதன்'; சிந்தையெனு மதக் களிற்றியானையை மாய்க்கும் சிங்க நோக்குடைய தேசிகன்'; 'பேதைமையால் வையுமவரையும் வாழ்த்துந் திறலினன்'; 'கல்லாதே கற்றுணர்ந்த கல்விப் பொருள் தன்னைச் சொல்லாதே சொல்லித் துலக்கு மொளிர் மோனத்தான்'.

அத்தகைய பெரியாரை இவ்வாசிரியர் அணுகினர்; 'விடியாவிருள் விடிவிக்குறு மின்சார விளக்காக' விளங்கும் ரமணரின் 'தாள் சூட்டலும் அழிந்திட்டது இவர் தலை மேல் அயன் எழுத்தே'. 'புத்தமுதமுண்டு வக்கும் புத்தேளிர்க்கும் புதிதாம் சுத்த ஞான சுகத்தை அடைந்தனர்; பிஞ்சிலே பழுத்திட்ட இவர் பகவானுக்கு உணவாய்த் தம் மனதைப் பெய்தனர்', 'நஞ்சமாயினும் உண்டமைந்திடாய், நயத்தகுங் குண நாகரீகனே!' என்று. ரமண பகவான் தமது நுதற்கண்ணால் இவரது வினையை 'விழித்தே அழித்தும்' தமது 'நற்றாமரைப்பூ கண்ணோக்கால் ஞானக் கண்ணைத் திறப்பித்தும்' 'கையார் சின்முத்திரை யொழித்துக் கண்ணாலுண்மை காண்பித்தும்', 'சவலையாய் அழுங்கும் இவர்க்கு இரங்கிச் செவிலியாய் அருளமுதூட்டிக் கவலையறத் தமது கவானிடைக் கிடத்திக்கண் வளர்த்திட்டும்', 'வழுக்கலைந்த சீர்வாதவூரார் தம் வாய்மை சேர்மணிவாசகத்தொடு பழிக்க நின்ற வெண்பழுதுசேர்சொலும் பாந்தமா வுளம்பற்றி நின்றும்' இவ்வாசிரியரை ஆட்கொள்ளவே, இவர்

முத்தமிழின் சுவை பெருக
முன்பு மணிவாசகனார்
சுத்த நிலை நின்றுரைத்த
தூயதிருவாசகம் போல்
வித்தக வேங்கடன் செவிக்கிவ்
வெறியனேன் வறுமொழியும்
புத்த முதமான வா

என்றும் 'ஈச, நின்னை யாவரெங்கணென்று காண்பரெங்ஙனே?' என்றும் வியந்து, 'எது கொண்டு நான் எது செய்யினும், எம்பிரான், உனை எணல் மறக்கிலேன்' என்று உறுதி கொண்டு,

'வாழி மன்னுயிர்த் தோகை விருந்துண
வருண்மதுப் பொழி வனசலோசனம்;
வாழி நின் னெழில் வாண்முகத்திரு
வாய் மலர்ந்தருள் மதுரவாசகம்'

என்று பகவானுடைய நோக்கையும் வாக்கையும் போற்றியும், 'நின்னடிக்கீழ் வாழு நிகிலவுயிர்த்தொகைக்கும் என்னையடியனுக்கினிது' என்று வேண்டியும், கனவிலே நாயகீபாவமுற்று ரமணரை அனுபவித்ததை

'தேனும் பாலுங் தித்திக்குந் தேவாமுதமுங் கயக்குமிதழ்ப் பானஞ்செய்தபாக்கியத்தேன் விழித்துப் பார்த்துப் பதைக்கின்றேன்' என்றும், 'முத்திமகள் இன்ப நுகர்ந்து கிடக்கின்றாள்; யான் இங்கிருந்து புலம்புறுவேன்' என்றும், 'ஆளப்பெற்ற அடிநாயேன் அவலக் கடல் வீழ்ந்து அயலார்போல் மாளப்பெற்றால் மாணடிக்கு, வள்ளால், அஃதோர் வசையன்றே' என்று ஏங்கிப்பாடியும் 'கிடந்தபடிக் கேகிட' என்ற பகவானது அருள் வாக்கை நினைந்து வேண்டாமை வேண்டிப்பெற்றும் இனியராய் தமது மனோதர்மங்களை யெல்லாம் பழையன புதுக்கிய இப்பாடல்களிலேஅமைத்துக் கவியின்பமுறப்பாடி யுள்ளார் என்பது இச்சந்நிதிமுறையை வாசித்தும் பாடியும் அனுபவிப்போருக்கெல்லாம் சொல்லாமலே விளங்கும்.

:விசாரதன்.

சுகந்தா :—ஓர் இனிய தமிழ் நாடகம். (ஆசிரியன் எஸ். ஆர். சாரங்கபாணி. கிடைக்குமிடம் : ஆசிரியர், 11, டால்மியா பில்டிங், மாடுங்கா, பம்பாய்.) 1939.

இந்நூலின் முன்னுரையிலே, சென்னை மதராஸ் அபீஷீயல்ஸ் பார்ட்டி ஸ்தாபகரும் பல தமிழ் நாடகங்களை எழுதி நடிப்பித்தவருமான ஸ்ரீ. கே. ராமஸ்வாமி ஐயங்காரவர்கள், 'நாடக முறைகளைக் குறைவறப் பயின்ற எனது நண்பர் சாரங்கபாணி என்பவர் அரியதொரு ஜனசார நாடகநூலை வெளியிட வந்தது மிகவும் பொருந்தியதே' என்று இந்நூலைப் பாராட்டுகின்றார். இது பம்பாய் சரஸ்வதிகான சபையாரால் 1936 வருஷத்திலே நடிக்கப் பெற்றது என்றும், 'சிறந்த நடிப்பைக் காட்டக்கூடிய பல சந்தர்ப்பங்களும் இதிலிருக்கிறதென்பதை சரஸ்வதி கான சபையார் நடித்துக் காண்பித்ததிலிருந்து தெரிந்து கொண்டேன்' என்றும், 'எவ்வளவோ கலைச்செல்வங்களைத் தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இங்கு நாம் விருத்தி செய்த கலைகள், வித்வான்கள், புத்தகங்களைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பும் காலம் வெகு சீக்கிரத்தில் ஏற்படுமென்று நம்புகிறேன்' என்று இந்நாடக ஆட்டத்தின் முடிவிற் சொன்ன பிரமுகரின் எண்ணப்படியே இது இப்பொழுது அச்சிடப் பெற்று தமிழ் நாட்டுக்கு வந்துள்ளது' என்றும் ஆசிரியரின் தினசரிப் பகுதிகளால் அறிகிறோம். பம்பாய் நகரத்தில் 20,000 தமிழர் வாழ்கின்றன ரென்றால், அவர்களுடைய தமிழ்ச் செல்வங்களைத் தாய் நாடு பேணிப் போற்றுங்கடமை யுடையது; அக்கடமையை மேற்கொண்டு இந்நாடகத்தை இனிது வரவேற்கிறோம்; இந்நூலிலே ஆங்காங்கு சில எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் இருக்கின்றன; என்றாலும், நாடக நடை கதைபோன்று இனிமையாய்ச் செல்கின்றது; தமது நாடகத் திறமையை ஆசிரியர் பல இடங்களிலும் காட்டியுள்ளார். சம்பவங்கள் பலவும் அசம்பாவிதங்களாக இருப்பினும், நாடகத்தை வாசிப்போர்க்கு அவை அவ்வாறு தோற்றுவதில்லை.

தீர்ப்புக்கூறத் தொடங்கியபின் மறுவிசாரணை தொடங்க சட்டம் இடந்தராது என்றாலும், 'சுகந்தா' என்பவள் 'டிடக்டிவ் ஷிவராவ்' வேஷம் போடுவது நாடகத்திலே தான் இயலும் என்றாலும் இவைகளெல்லாம் இதனை நடித்துக் காண்போர்க்குத் தோஷங்களாகத் தோன்றுவன்றோ? ஆயினும், சமூகநாடகம் எழுதுவோர் தற்கால வாழ்க்கையிலே நிகழக்கூடியதாக சம்பவங்களைச் சித்திரித்தெழுதுவதே நலம். இவ்வகையிலே முயன்று இவ்வாசிரியர் நடிப்பதற்கேற்ற பல நாடகங்களை இயற்றி பம்பாய் நகர மக்களை மட்டுமேயன்றி தமிழ் மக்களனைவரையும் இன்புறுத்துவாரென்று நம்புகிறோம்.

மும்மொழியாளன்.

அழகர்மாலை :—திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு : பதிப்பாசிரியன் பந்தல்குடி செ. திருமலை அய்யங்கார். சங்க காரியதரிசி 42. ஏ வேங்கடாரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ். 1939.

சிலப்பதிகாரத்திலும் பரிபாடலிலும் ஆழ்வார்களின் அருள்வாக்குகளிலும் தென்திருமாலிருஞ் சோலையைச் சிறப்பித்து வரும் பாடல்களையெல்லாம் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தார் இந்நூலிலே தொகுத்துள்ளார்கள். ஈடு முதலிய வைஷ்ணவ வியாக்கியானங்களைப் பின்பற்றி இச்சங்கத்தலைவரும் உபதலைவரும் காரியதரிசியும் ஸ்ரீ குருச்சி ஸ்வாமிகளின் அருமைப் புதல்வர் ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ ர. ஸ்ரீநிவாஸ தேசிகமய்யங்காரும் எழுதிய கட்டுரைகள் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன. இச்சங்கத்து வித்வான் ராவ் ஸாஹெப். மு. இராகவையங்கார் அவர்கள் அழகர்மலையின் பழம் பெருமையை சிலப்பதிகாரச் செய்திகளாலும் சங்கப்பாடல்களாலும் சாஸனங்களாலும் விளக்கும் கட்டுரை இத்தொகுதியை அணி பெறுத்துகின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் போற்றிவரும் அட்வோகேட் ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் முன்னுரையால் அர்ச்சையின் பெருமையும் அவற்றுள் திருமாலிருஞ் சோலையின் பெருமையும் நன்கு விளங்குகின்றன. இதுபோன்றே பிற திவ்விய தேசங்களை விஷயமாகக் கொண்ட தொகுதி நூல்களை இச்சங்கத்தார் வெளியிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மாயக்கூத்தன்

தாஸனது ஆத்மாநுபவம் :—1-வது பாகம் அத்யாத்ம யாத்திரை: (குகதாஸ் இயற்றியது) 1939. கிடைக்குமிடம் ஆசிரியர் குகதாஸ் எஸ். வி. நடராஜ ஐயர், சேங்காலிபுரம், தஞ்சாவூர். ஜில்லா) விலை ராப்பர் ரூ. 1—4—0. காலிகோ ரூ. 1—8—0.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஸ்ரீமுகத்தைப் பெற்று அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட இந்நூலின் தலைப்பிலே ஸ்ரீரமண மஹர்ஷியின் உபதேச பஞ்சரத்தினங்கள் விளங்குகின்றன. ஸ்ரீராமானந்த ஸரஸ்வதி என்னும் பெரியார் இந்நூலைக்

கடாக்ஷித்து 'உபதேச பஞ்சகமென்ற ஐந்து வடமொழி சுலோகங்களை இதனோடு சேர்க்கும் படி அனுக்கிரகித்தார்கள்; அவற்றின் பொருளும் தமிழிலே விளக்கப்பட்டுள்ளது. பாயிரமாக, தெய்வப்பிரார்த்தனையும் ஜீவன் அடைய வேண்டிய நிலையும் ஆசார்ய விஷயமும் சில உபதேச மொழிகளும் எடுத்துக் கூறியபின், இந்நூலாசிரியர் அத்யாத்ம யாத்திரையைப் பற்றியும் யாத்திரா மார்க்கத்திலே நேரும் அனுபவங்களைப் பற்றியும் எளிய நடையிலே உண்மை தெளிந்த மொழிகளிலே கூறியுள்ளார். யாத்திரிகன் நேர்வழியிலே செல்வதற்கு உதவும் பஹிராசாரங்களையும் அந்தராசாரங்களையும் விவரித்து தமக்கு நேர்ந்த அனுபவங்களை அப்படியே கூறியிருப்பதால் அத்யாத்ம வழியிலே செல்ல விரும்புவோர்க்கெல்லாம் இந்நூல் சிறந்த கைகாட்டி யாகுமென்று நம்புகிறோம். அத்யாத்ம யோகத்தில் நம்பிக்கை யில்லாதவர்க்கும் நம்பிக்கை வரும் வகையிலே எழுதப்பட்டுள்ளது இவ்வனுபவ நூல்.

அகஸ்திய தாஸன்.